147

காதல் வெளியீடு : 4

நாவல்

அடிவானம்

348

திலீலை வில்லாளன்

[அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.
அவர்களின் முன்னுரையுடன் கூடியது]

தமிழ்

காதல் வெளியீடுகள்

காதல் காரியாலயம்

கன்டோன்மெண்ட் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை வாய்ந்தது விலை ரூ. 1—4—0

முதற்பதிப்பு : ஏப்ரல், 1952.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 6892
நன்கொடை எண்: 6892

நன்றி

அரசியலுக்குத் தேவையான அரும் பெரும் நேரத்திலே, கற்பனைச் சுவையும் கனிந்த சிந்தனையும் நிறைந்த 'அடிவானம்' நாவலை அற்புதமாய் உருவாக்கித் தந்த அருமை நண்பர் 'தில்லை வில்லாளன்' அவர்களுக்கும், ஒப்பற்ற தொண்டுகளின் நடுவே ஓய்வுறும் நேரத்திலும் ஆய்ந்து மகிழ்ந்துரை தந்துதவிய அறிஞர் சி. என். அண்ணாதுரை எம்.ஏ. அவர்களது அன்பிற்கும் மனமுவந்த நன்றி.

அரு. ராமநாதன்

அச்சிட்டோர் :
சிட்டி பிரஸ்,
திருச்சிராப்பள்ளி.

மகிழ்கிறேன்

தம்பி வில்லாளன், 'அடிவானம்' எனும் அற்புதபுரிக்கு 'யாத்திரை' செய்யும் சிலருடன் சென்று 'சேதி'யைக் கூறுவது கேட்டு மகிழ்கிறேன்.

திராவிடம் நன்கு அறிந்து மகிழ்வுடன் வரவேற்கும் இளம் எழுத்தாளர்களிலே வில்லாளன் முக்கியமானவர்—கொஞ்சம் பொல்லாத ஆசாமியுங் கூட—பாருங்களேன்! அடிவானம் சென்று சேதி திரட்டித் தருவதை.

மனிதப் பண்புகளை—ஆடவர், பெண்டிர் எனும் இரு பாலரின் பண்புகளைக் கண்டறிந்து தீட்டுவதே கடினம்—சுவைபடத் தீட்டுவது மிகக் கடினம்—தூய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டுவது அதனினும் கடினம்—அவ்வளவு கடினமான காரியத்தைக் கவர்ச்சியும் வெற்றியும் கமழும் வண்ணம் செய்வது என்றால் பூரிப்படையாமல் இருக்க முடியுமா! அதிலும் 'தம்பி'க்கு இதெல்லாம் எப்படித் தெரிய முடியும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அண்ணன் கண்டு களிப்புடன், "தம்பி! நீ திரட்டினதா?" என்று கேட்கும் வகையாக அமைந்திருப்பது, இந்த 'அடிவானம்'.

பொதுவாகவே, பெருமையுடன் இதைக் கூறிக் கொள்வேன்,—என் 'தம்பிமார்கள்' மட்டுமே இத்தகைய மணப் பண்பு விளக்கக் கதைகளைத் தீட்ட இயலும் என்று.

எழுத்தாளர் உலகு, விரிந்து பரந்து இருக்கிறது—விரிந்து கொண்டும் வருகிறது—ஆனால் காலுகி உள்ள சமூகத்தைத் திருத்தி அமைத்திட வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, உள்ளத்தின் படப் பிடிப்பு வேலையை உவகையுடன் உயரிய முறையில் செய்திடும் திறன் படைத்தோரின் தொகை மிகக் குறைவு. இந்த அரிய அணி வகுப்பிலே நிற்பவர் தம்பி வில்லாளன்.

அடிவானம்—கதை வடிவிலே உள்ள ஒரு சீர்திருத்தச் சொற்பொழிவு. எனவேதான், இது எழுத்தாளரின்

முயற்சிமட்டுமல்ல, ஒரு சீர்திருத்த நோக்குடையாரின் தொண்டு என்று நான் கருதுகிறேன்.

காதல் கதை தான்!—கதையிலாவது இருக்கட்டுமே!! ஆனல், சுவைக்காக மட்டுமே பயன்படும் காதற் சம்பவக் கோர்வை அல்ல இது. அப்படிப் புத்தக வடிவிலே தரப் படும் 'தங்கபஸ்பமாக' இருந்திருப்பின், நான் தம்பி யிடம் கோபம் கொண்டிருப்பேன். ஆனல், 'அடிவானம்' வெறும் அவனும் அவளும் அல்ல; அதரமும் மோதிரமும் அல்ல; 'இச்' ஒலியும், இடை நெளிவும் அல்ல—சமூகப் படப் பிடிப்பு.

"திருமணம் செய்ய வேண்டும் — இந்தத் தையில் — இடம் பார்த்திருக்கிறேன் — இலேப்பையூராரின் இரண் டாம் மகள் — கருப்பு தான்; ஆனலும் பார்க்க இலட்சண மாக இருக்கும் — இலேப்பையூராருக்கு இருநூறு வேலி, அயன் நஞ்சை."

இது தானே, எங்கும் நிறைநாதம் — தமிழகத்தில்! காதல் எங்கிருந்து மலரும்!!

"சரி — சரி — நீ போய் உள்ளே படு!"—என்று கனைக் கும் கணவன்.

"கதவு ... ...?" என்று கலக்கத்துடன் கேட்கும் மனைவி.

"தாள் போட்டுப் படு" என்ற தர்பார்.

"அப்பா எங்கே அம்மா?" என்று அழுதபடி கேட் கும் பாலகன்.

"அடுத்த வீட்டு அம்சா!" — என்று வேண்டா வெறுப்புடன் அறிமுகம் செய்து வைக்கும் பிரிய நாயகி.

கடன் — கடும் நோய் — ஏ ச ல் — தலேயிறக்கம் — இன்னபிற!!

இவை தானே, பொதுவாகத் தெரியும் காட்சிகள். எனின், காதலின் மாட்சி எங்கிருந்து தெரியும் — தெரி

யாது! தெரிய வேண்டும்! தெரியச் செய்ய வேண்டும்! அதற்கு 'அடிவானம்' துணைபுரியும்.

பொருத்த மற்ற 'ஜோடி', நல்ல சமூகத்தின் அடையாளமல்ல

பெற்றோரின் நோக்கம் நல்லதாக இருக்கலாம்—ஆனால் முறை சரியாக இல்லை. சரியாக இருக்க முடியாது—அவர்கள் 'வேறோர் உலகின்' பிரதிநிதிகளாக இருக்கும் மட்டும்!!

வாழ்க்கைப் பாதையில் இந்த முறை—கேடு விளைவிக்கும் விபரீதங்களை 'அடிவானம்' விளக்கிக் காட்டுகிறது; வாழ்க்கைப் பாதையைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்.

உலகில் எத்தனையோ 'அவளும் அவனும்' வாழ்கிறார்கள். அவர்கள் அத்தனைப் பேரும் ஒவ்வொரு வகையான வாழ்க்கையின் உருவகங்கள். அவர்களின் மனம் ஒரு அனுபவக் குகை – சம்பவச் சுரங்கம்

—இந்தச் சுரங்கத்தில் இறங்கி, தம்பி நமக்கு, பத்மாவையும், பொன்னியையும், சுந்தரையும், பார்த்திபனையும் பிறரையும் கொண்டு வந்து காட்டுகிறார்.

மனிதப் பயிர் ஒவ்வொன்றும் சுகம் என்ற கதிரைவிட ஆசைப்படுகின்றது என்பது மட்டும் என்னவோ உண்மை! அந்தக் கதிர் கிடைக்காமல் பல இடையூறுகள் உண்டாகின்றன ... ... இருப்பினும் சுகம் துளிர்க்கிறது, கருகிவிடுகிறது, மீண்டும் தோன்றுவது போலத் தெரிகிறது, மறைகிறது!

இந்தப் பண்ணையைக் காணலாம் 'அடிவானம்' எனும் ஏடு மூலம்.

பெண் நினைக்கிறாள் — அதுவே தவறு என்று சொல்கிறது சமூகம். ஆனால் ஆண் தகாததைச் செய்கிறான்—சமூகம் வாய் மூடிக்கிடக்கிறது.

சமூகம் வாய்திறந்து பேசவேண்டும் — உண்மையை. உண்மைக்காகப் போரிட வேண்டும். உலுத்துப்போன

கருத்துக்களை உலவவிடாதீர் என்று கூறவேண்டும். 'அடிவானம்' இந்த ஆர்வத்தை அளிக்கும். 'அடிவானம்' கூறுகிறது,

> பெண்ணுலகைப் பற்றி இந்தச் சமூகம் தவருகக் கணக்குப் போட்டிருக்கிறது. இந்தத் தப்புக் கணக்கைத் தாறுமாருகக் கிழித்தெறியவேண்டும் என்பது என் ஆசை. அந்தக் கால மனுவும் மாந்தாதாவும் போட்ட புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இன்னமும் ஏமாந்துபோகிறது. அந்தக் காலச் சமூகச் சட்ட நிபுணர்கள் கையாண்ட கணக்கு தவறும், பிழையும் மலிந்தது. அவர்களின் குறிப்பு சரியென்றே கொண்டாலும் காலம் மாறி விட்டது. ஆகவே, அந்தக் கணக்கிலும் மாற்றம் வந்து சேர்ந்துவிட்டது என்று.

எவ்வளவு தேவையான நல்லுரை!

இந்த நல்லுரைகளை நல்லதோர் கதை வடிவிலே தரும், தம்பியின் நோக்கத்தையும், அதை அழகு தவழும் மொழியில் தந்துள்ள பாங்கினையும் பாராட்டுகிறேன்.

நோக்கமும் நடையழகும் மட்டுமல்ல — கதையின் வடிவமே புதுமையானது. ஐந்து கடிதங்கள், ஒரு அழகிய கதை!

ஏமாந்தபுரம் — வஞ்சகநகர் — ஏக்கநகர் — ஆர்ப்பாட்டப்பட்டி — இன்பபுரிமாடம் — ஒவ்வொரு கடிதமும் இவ்விதம் ஒவ்வொரு ஊரிலிருந்து!! தலைப்பின் மூலமாகவே, கடிதத்தில் உள்ள கருத்தை முன்கூட்டி அறிவிக்கும் புதுமையுடன் இது இருக்கிறதல்லவா!! இது போலவே கதை அமைப்பும், கற்பனையும், புதுமையும், சுவையும் பொருந்தி இருந்திடுவது காணக் களிப்படைகிறேன். நீங்களும் மகிழ்வீர்கள் என்பது நிச்சயம். தம்பி அழைக்கிறான், 'அடிவானம்' காணவாரீர் என்று. சென்று மகிழுங்கள்.

காஞ்சிபுரம்
22-4-52

அன்பன்,
அண்ணாதுரை

அடிவானம் சிரிக்கிறது!

தொலை தூரத்தில் தெரியும் செக்கச் சிவந்த அடிவானத்தை நோக்கி நடக்கின்றனர்.

இடையிலேயே சிலர் வெவ்வேறு திசையாகப் பிரிந்து விடுகின்றனர். வேறு சிலர் மட்டும் இணைந்து செல்கின்றனர். சிலர் எதிர்பாராமல் இணைகின்றனர். இன்னுஞ் சிலர் இணைந்து செல்ல வேண்டும் என்று முயன்றும் முடியாமல் போகிறது. இதுவே வாழ்க்கை.

இலட்சிய அடிவானத்தை நோக்கி, வாழ்க்கைப் பாதையில் நடந்திடும்போது ஏற்படும் சிக்கல்கள் ஏராளம். சங்கடங்கள் பலப்பல. அவைகளின் தொகுப்பு சிந்தனைக்கு தீனியாகவும் முடியும்—நாட்டோருக்கு நல்ல பாடமாகவும் இருக்கும்.

அடிவானம், அத்தகைய முயற்சியைப் படம் பிடிக்கிறது.

காதல், கடமை, பணம், பதவி, பெருமை என்று பல பலவற்றை இலட்சியமாகக் கொண்டு மனித சமுதாயத்தின் ஒவ்வொரு அணுவும் அசைகிறது. அந்த அசைவின்போது ஒன்றையொன்று துணை தேடுகிறது. விரும்பிய துணை கிடைப்பதில்லை. விரும்பாத, எதிர்பார்க்காத கூட்டுறவு ஏற்படுகிறது.

இந்தக் கூட்டுறவின் கோளாறினால் உலக நடவடிக்கைகளில் நாம் விதவிதமான விநோதங்களைக் காண்கிறோம். சில புரியும்; சில, கண்கட்டு வித்தைக்காரர்கள் செய்யும் விந்தையான வினையாட்டுகளாக இருக்கும். கேட்டால் மந்திரம் என்பர் சிலர். எல்லாம் தந்திரத்தாலேதான் நடக்கும். மந்திரத்திலேயாவது மாங்காய் விழுவதாவது என்று கேலி பேசுவர் இன்னும் சிலர். ஆனால் அந்த விசித்திரங்கள் எப்படியென்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் கொள்வோர் ஒரிருவரே இருப்பர்.

வாழ்க்கை விநோதங்களை அறிந்து கொள்ளும் எண்ணங் கொண்டோரின் தொகை தான் குறைவு—வாழ்க்கை விசித்திரங்கள் எண்ணிலடங்கா.

இத்தகைய விசித்திரங்களைப் பார்த்துச் சிரிக்கிறது **அடிவானம்.**

பத்மா, சுந்தரத்தை நேசிக்கிறாள். ஆனால் **பார்த்திபனை** மணக்கிறாள். ஏன்? பார்த்திபனே **பொன்னியை** விரும்புகிறான். ஆனாலும், பத்மாவை மணந்து கொள்கிறான். ஏன்? பார்த்திபனின் தந்தை **அன்பானந்தர்** தன் மகன் பொன்னியோடு உறவு கூடாது என்கிறார். ஏன்? பிறகு அவரே இரகசிய தொடர்புக்கு அனுமதிக்கிறார். ஏன்? **தினகரனை மங்கை** விரும்புகிறாள். ஏன்? வெறுக்கிறாள். ஏன்? இப்படிப் பல, ஏன்களின் விளக்கந்தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கையை ஓவியமாகத் தீட்டியிருக்கிறது.

அடிவானம், எனது கல்லூரி வாழ்நாட்களில் தீட்டப் பெற்று, பிறகு, **'திராவிடநாடு'** இதழில் சென்ற ஆண்டு **யாத்திரை** என்ற தலைப்பில் தொடர்கதையாக வெளிவந்தது.

அதிகமாகக் காதல் விவகாரம் கலந்து எழுதுவதாகச் சிலர் கூறுவதுண்டு, குற்றஞ் சாட்டும் முறையிலும், குறை சொல்ல வேண்டுமே என்ற மனப்பான்மையிலும் அப்படிக் கூறும்பொழுதெல்லாம் நான் சிரித்துக்கொள்வேன். ஏனெனில் அவர்கள் எழுத்து ஜாதகம் எனக்குத் தெரியும். அவரவர்கள் அதையே செய்து கொண்டு இப்படிக் கூறும்பொழுது, சிரிக்காமல் என்ன செய்வது—ஆகவே சிரித்தேன், சிரிக்கிறேன்—இனிமேலும் அதே முறைதான்!

அடிவானம், இன்று **'காதல்'** ஆசிரியர் **அரு. ராமநாதன்** அவர்களால் நாட்டுக்குப் படைக்கப்படுவதுகாண மகிழ்ச்சியடைகிறேன். நன்றி செலுத்துகிறேன். ஏனெனில், வாழ்க்கைப் பாதையின் முக்கியத் திருப்பத்தை முன்னிலையில் வைத்து, கண்ணிய முறையில், காண்பவர் பாராட்டும் வகையில் ஏடு நடத்தும் எழுத்தாள நண்பர் அவர். ஆகவே தான் களிப்படைகிறேன்.

காஞ்சிபுரம்
21-4-52

தில்லை வில்லாளன்

1

அவளுக்கு அவன்

ஏமாந்தபுரம்,

அன்புள்ள தோழி, ...

எனது திடீர் படையெடுப்பு கண்டு திகைத்துப்போய் திக்கு முக்காடி யிருப்பாய் – எனக்குத் தெரியும். பாம்பிருக்கும் புற்றி லிருந்து முத்துச்சரம் வந்து விழுந்தால்கூட ஆச்சர்யம் வரும். அதுகூட சாதாரண உணர்ச்சி அசைப்போடு நின்றுவிடும். ஆனால் தேன் கூட்டிலிருந்து ஆலகாலஞ்சு வடிந்தால் ஆச்சர்யம் அகிணயை உடைத்துக்கொள்ளும் திகைப்பு திசை தப்பி நிற்கும்.

உணர்ச்சி ஒரு புயலைக்கிளப்பும். பத்மா, என்னிடமிருந்து ஒரு மடல் வரும் என்று எதிர்பார்த்திருக்கவே மாட்டாய். அந்த விரிவான, விளக்கமான காதல் விண்ணப்பத்தைக் கண்டு வியப்பால் விரிந்திருக்கும் உன் முகம், பருவக் கொந்தளிப்பால் உன் கண்களில் களிப்பும் கலக்கமும் கலந்து வழிந்திருக்கும்!

கிளவின் ஆற்காட்டுப் படையெடுப்புகூட சந்தாசாகேபுக்கு அவ்வளவு வியப்பைத் தந்திருக்காது – ஆனால் என் கடிதம் உன்னைச் சுற்றி விட்டிருக்கிற அளவு வேறு எந்தச் செய்தியும் மயக்கமடையவோ, மனச்சுழற்சி கொள்ளவோ செய்திருக்க முடியாது. ஆம், எதிர்பாராத இடத்திலிருந்து, எதிர்பாராத செயல் நிகழ்ந்தால் வியப்பும், திகைப்பும் வராமல் என்ன செய்யும்?

நான் எழுதியிருந்தவைகளை மற்றொரு முறை நினைவில் கொண்டுவந்து நிறுத்து–மனத்திரையில் நிழலாட்டம் போடவிடு, பிறகு சொல்லேன் அவசரமின்றி, என்றுதான் இப்பொழுதும் சொல்கிறேன். இனி எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருப்பேன்.

ஆண்டுகள் பலவாய் எண்ணி யெண்ணி, ஆனால் மூடி மூடி வைத்திருந்த எண்ணத்தின் புரட்சிதான் என் முடங்கல் - ஏனென்றால் என்ற முறையில் காம நகரில் உலவும் காலிகள் கையாளும் தந்திர ஆயுதமல்ல! கேளடி பெண்குயிலே - மன்னித்து விடு பத்மா, நான் கண்ட கனவுத் திட்டப்படி உரிமையை அளவிற்கு மீறி எடுத்துக்கொள், பிடுங்கிக்கொள் என்று என்னை விரட்டியடிக்கிறது என் மனம்! எழுதும்பொழுது இடையிடையே இப்படி இரண்டொரு இடங்கள் வந்தால் அதற்கு இப்பொழுதே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் - என் காதல் கதையை, அதில் நீ கதாநாயகியான விதத்தை, நான்மட்டும் பார்த்து என்ன செய்யட்டும்! அதனால்தான் கதாநாயகியிடம் கதாநாயகன் பேசினான். இது சரியல்லவா?

என் முடங்கல் எப்படி உனக்கு வியப்பை அள்ளித் தந்ததோ அப்படியே, அப்படியே என்ன, அதைவிட அதிகமாக ஆச்சர்யப்பட்டேன் அன்று நாடகக் கொட்டகையிலிருந்து திரும்பி வந்த பொழுது! ஏன் தெரியுமா? உன்னையே கேட்கிறேன், நீயே சொல் இதற்கு விடை. அன்று நாடகத்திற்கு எத்தனை அழகு மகளிர் வந்திருந்தனர். அழகுக் கூட்டத்திடையே உன்னை மட்டும் என் கண்கள் துருவித் துளாவிக் கண்டு பிடிப்பானேன்? பட்டிக் காட்டான் மிட்டாய்க்கடையை முறைத்து

மூறைத்துப் பார்ப்பானும். இப்படியொரு பழமொழி சொல் வார்கள். ஆனல் பட்டிக்காட்டான் எவனும் கடை முழுவதும் வெறிக்க வெறிக்கப் பார்ப்பதில்லை. கார உருண்டையும், மசால் வடையும் அவன் மனதைக் கவர்வதில்லை. லட்டைக் கண்டு நாக் கில் எச்சிலைச் சொட்ட விடுவான். ஒருவன், மைசூர் பாகைக் கண்டு மயங்கி நிற்பான் மற்றொருவன், ஜிலேபியைக்கண்டு 'ஜில்' ஆவான் இன்னொருவன்—அவனவன் ஒவ்வொன்றை எண்ணித் தான் பார்ப்பான். அப்படித்தான் அந்த அழகுக் கடையில் பத்மா அல்வாவைக் கண்டு அதைச் சுவைத்துவிட வேண்டும் என்று துடித்தேன். அந்தத் துடிப்பை நீ உணர்ந்திருக்கலாமே பத்மா, என் எழுத்துக்களில்! அந்த எழுத்துக்கள் விட்ட பெரு மூச்சிலே ஏக்கம் இரங்கல் பல்லவி பாடியிருக்குமே, துயரம் அனுபல்லவி இசைத்திருக்குமே, திடமுடிவு சரணத்தில் தன் கைவரிசையைக் காட்டியிருக்குமே உனக்குப் புரிய வில்லையா—புரிவிக்கும் ஆற்றல் தான் என் எழுத்துக்களுக்கு இல்லாதொழிந்தனவா?

உலகத்து இன்ப இணைப்பு முறை வேடிக்கையாகத்தா னிருக்கிறது! உன்னைக் கருப்பி யென்று கேலி பேசுகிறான் கண் ணன். அவள் கோணல் காலி யென்று கிண்டல் புரிகிறான் கந் தன். ஆனல் நான் கண்கண்ட தெய்வம் என்று காதல் பூசை புரிகின்றேன். என்ன விந்தை..... விநோதம்..... வேடிக்கை! ஏற்கனவே கருவாக இருந்த ஏக்கம் நாடகக் கொட்டகையிலே கண்ட 'திவ்யதரிசனத்தால்' வளரத் தொடங்கி விட்டது. அப் பொழுது தான் நான் ஆச்சரியப்பட்டேன். இப்படி யொரு பெண்ணின் நினைவு ஒரு பருவ மகனை ஆட்டிவைக்கும் என்ற உண்மையை ஏட்டில் படித்த பொழுது சிரித்துமிருக்கிறேன், வாதிட்ட சிலரிடம் சீறியுமிருக்கிறேன். அதிவீரராம பாண்டிய ரைக் கார சாரமாகத் தாக்கியிருக்கிறேன். ஷேக்ஸ்பியரைக் கூட குறைகூறியிருக்கிறேன். காளிதாசரை வைதிருக்கிறேன். அவசிய மற்ற காதல் அளப்பிலே ஏன் இவர்கள் காலத்தை வீணுக்கு கிறார்கள் என்று உண்மையிலேயே வருந்தியிருக்கிறேன் விவரம் தெரியாமல், அனுபவக் குறைவின் காரணமாக! ஆனல் அன்று தான் கண்ணே, நான் அனுபவவாயிலாக உணர்ந்துகொண்டேன். இதில் பொய்யில்லை. வெறும் புகழ்ச்சி யுரையுமில்லை. எல்லாம் உண்மை— முழுக்க முழுக்க உண்மை!

"அதோபார் அக்கா" என்று உன் தங்கை லீலா கூறின போது நீ திரும்பினயல்லவா? ஏன் அவ்வளவு கடுகடுப்பு..... வெறுப்பு..... பொய் நடிப்பு? இதனல் தான் இந்த தெய்

வங்களை யெல்லாம் கல்லால், செம்பால், பித்தளையால் செய்து வைத்தார்கள் போலிருக்கிறது நம் முன்னோர்கள் — அவர்கள் புத்திசாலிகள். அவர்கள் வாழ்க! இப்படித் 'தெய்வங்கள்' எல்லாம் அடிக்கடி முகத்தைத் திருப்பிக்கொண்டு பராமுகமாய்த் தானிருப்பேன் என்று அடம் செய்தால் உலகம் உருப்படுமா? மக்கள் வாழ்வார்களா? ஆசை பத்மா, அப்படி முகத்தைத் திருப்பிக் கொண்ட நீ அடிக்கடி ஓரக் கண்களால் என்னைப் பார்ப்பானேன்? தப்பித் தவறி உன் கண்களை, 'கையுங் களவுமாக' என் கண்கள் பிடித்து விட்டால் குனிந்தபடியே குறும்புச் சிரிப்புச் சிரித்து என்னைக் குற்றுயிரும் குறையுயிருமாக்கினையே, இது தகுமா?

"ஏன் அக்கா, சுந்தர் உன்னை அப்படிப் பார்க்கிறார்?" என்று கேட்டாளே அந்தச் சுட்டிப் பெண் லீலா, அதற்கு நீ என்ன சொன்னாய்? எனக்குத் தெரியாது என்று எண்ணி விடாதே! "இந்த சுந்தருக்கு இதுதான் வேலை. ஏதாவது குறும்பு செய்வதென்றால் மெத்த மகிழ்ச்சி. கல்லூரி மேடை களில் பேச வந்தால் இந்தக் கன்னியரைக் கிண்டல் புரியா மல் இறங்குவதில்லை. இதையெல்லாம் அங்கே வைத்துக் கொள்வதினால் யாருக்கும் தொல்லை இல்லை. ஆபத்தும் அண்டாது, இங்கே இப்படிப்பார்க்கிறாரே, அம்மா என்ன நினைப்பாள்? அப்பா தவறாகப் புரிந்துகொள்ள மாட டாரா? இன்று 'அவள்' என்ற நாடகமப்பா, எழுதியவர் என் கல்லூரித் தோழர் சுந்தரம், நான் பார்க்க வேண்டு மப்பா' என்று நீ சொன்னபொழுது அப்பா சிரித்தார். இந்த 'சின்னக் குட்டி' வேறு சந்தேகத்தை வளர்த்துவிட்டாள். 'சுந்தர் அக்காவின் 'கிளாஸ்மேட்' மகா வேடிக்கைக்கார ரப்பா, நன்றாக எழுதுவார், நகைச் சுவையோடு பேசுவார்....' என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்து விட்டாள், அப்பா 'போவோம் அம்மா, நாடகத்திற்கு இன்னமாகவே நுழைவுச் சீட்டு அனுப்பியிருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு மீண் டும் சிரித்தார். அப்பொழுதே எனக்குப் பயம்-இப்பொழுது சுந்தர் நடந்துகொள்கிற முறையைக் கண்டால் சந்தேகம் வளரும். வரட்டும், நாளைக்குக் கல்லூரிக்கு—அவரை வம் புக்கிழுத்து 'வாயடி, கையடி' அடித்து....." இப்படி யெல்லாம் எண்ணுமலா போயிருப்பாய்—எண்ணியிருப்பாய் ஆனால் சொல்லவில்லை!

எத்தனையோ நாட்களுக்கு முன்னரே ஏற்பட்ட எண்ண மொக்கு உண்மை வாழ்க்கையில் மலர்ந்து மணம் வீசி மகிழ்

விக்கா விட்டாலும் கற்பனைக் கதைகளிலே மலர்ந்து மணம் வீசி மட்டுமல்ல, மகரந்தத் தூதனுப்பி மக்கட்பேறு பெற்றும் இன்பந் தந்துவிட்டது! 'அவள்' என்ற அந்த நாடகம் பார்க்கிறபொழுது உனக்குத் தைத்திருக்குமே ஒரு வெது வெதுப்பான எண்ணம், ஒரு கதகதப்பான உணர்ச்சி—அப்படி யொன்றும் ஏற்படவில்லை யென்றால் இப்பொழுது நினைத்துப் பார்—என் முடங்கலைப் படித்தபிறகு, மடங்கி அடங்கிக் கிடந்த என் ஆசைக் கைதியின் விடுதலைக்குப் பிறகு, ஒடுங்கி நடுங்கியிருந்த உணர்ச்சிப் பசியின் உண்மை வேகத்தைக் கண்ட பிறகு! அந்நாடகம் யாருக்காக எழுதப்பட்டது என்று புரிந்து விடும். உன்னையு மறியாமல் 'இந்த சுந்தர் மகா குறும்பர்' என்று திட்டிவிடுவாய், ஏன்? அந்த நாடகத்தில் வருகிறவே, கதாநாயகி மல்லிகை—அவளைப்பற்றி அவளது காதலன் வரு ணிக்கிறானே, புரிகிறதா நான் சொல்கிற கட்டம்? கதா நாயகன் கண்ணன் என்ன சொல்கிறான்?...மல்லிகை உன்னை மனதார நேசிக்கிறேன். என்னை மயக்கிவிட்டாயடி கண்ணே, என் மனத்தை இழுக்கக்கூடிய வல்லமை உன்னிடம் எப்படி அமைந்தது, ஏன் ஏற்பட்டது என்று புரியவில்லை. அதற்குக் காரணம் சொல்லக் கூடியவர்கள் இந்த உலகில் இருவரே உள்ளனர். ஆம், உன்னிரு கருவிழிகள் தான் அந்தப் புதிர்புரிந்த வித்தகர்கள்..... என்று கண்ணன் பேச வில்லை பத்மா, மல்லிகைக்காகவும் சொல்லவில்லை. அந்த மல்லிகை வேடத்தில் தோன்றிய பெண்மணியின் கண்கள் அப்படி யொன்றும் வசீகரிக்கும் காந்தப் பளிங்குகளாகவும் இல்லை. அந்த இடம் உனக்காக எழுதப்பட்டது. நான் பேசுகிறேன் கண்ணன் என்ற பெயரில், மல்லிகையிடம் பேசும் பாவனையில் பத்மாவை எண்ணிக்கொண்டு!

அந்த நாடகத்தின் கதைப்போக்கு உனக்கும் பிடித்திருக் கும். அதை யூகித்துணர்ந்தே உனக்கு விருப்பமான கருத்துக் களைச் சேர்த்துக் கோத்து மூடித்தேன்..... 'அவள்' நாட கத்தை! பேசிப்பயனில்லைகாண், செய்து உன் கொள்கை பேண் என்று அடிக்கடிச் சொல்வாயல்லவா? அந்த உண்மையை மத்தியப் புள்ளியாகக்கொண்டு பல நிகழ்ச்சிகளைச் சுற்றியோட விட்டிருந்தேன். ஆனால் ஒரு தவறு நான் செய்துவிட்டேன். அந்தக் கடிதத்தை, அல்லது அதன் சாரத்தை, அதுதானல்ல என் மனம் போட்டு வைத்திருந்த கற்பனைத் திட்டத்தை, உணர்ச்சி எழுதிய கையெழுத்துப் பிரதியை உன்னிடம் அனுப்பி யிருக்கவேண்டும். அப்படி அனுப்பியிருந்தால் அந்த நாடகம், நாடகமாகத் தெரியாது. வாழ்க்கையாகவே தோன்றும்!

கண்ணன் தெரியமாட்டான் மேடையில் – சுந்தரம் தோன்றியிருப்பான். மல்லிகைக்குப் பதில் பத்மா நின்றிருக்கிற உணர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

நாடகத்தின் கதைப் போக்கை நீ மறந்திருக்க மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எனினும் என் திருப்திக்காக, என் உள்ளத்தின் அமைதியைக் கருதி மீண்டும் ஒரு முறை சொல்லுகிறேன். கவனம் குறையாமல் கண்காணி என் கதை யமைப்பை – ஒரு சிலையை நாம் பார்த்து அனுபவிப்பது வேறு – அந்தச் சிற்பியும் உடன் வந்து அதன் சிற்ப நுட்பங்களை, கலை நுணுக்கங்களை எடுத்து விளக்கும்பொழுது இருக்கிற உணர்ச்சியும், மகிழ்ச்சியும் வேறு வகையானவையே! சமைத்தவளின் கரங்களினூலே சோறு படைக்கப்பட்டு உண்ணும்பொழுது இருக்கிற மன நிலைக்கும், எடுப்புச் சாப்பாடு சாப்பிடும்போது ஏற்படுகிற மன நலிவுக்கும் எத்தனை வேறுபாடு, வித்தியாசம்! அதுபோலத்தான் நாடகத்தை எழுதிய நானே அதன் கதை யமைப்பையும் போக்கினையும் எடுத்துச் சொல்லும்பொழுது பத்மா, நீ அதனை நேரில் பார்த்து அடைந்த அகமகிழ்ச்சியை விட அதிகமாகத்தான் அடைவாய். இதுமட்டும் திண்ணம்!

'அவள்' ஒரு உயிருள்ள நாடகம். நீயும் நானும் வாழ்கிற உலகில் எத்தனையோ 'அவளும், அவனும்' வாழ்கிறார்கள். அவர்கள் அத்தனைப்பேரும் ஒவ்வொரு வகையான வாழ்க்கையின் உருவகங்கள். அவர்களின் மனம் ஒரு அனுபவக் குகை – சம்பவச் சுரங்கம்! ஒருவரின் வாழ்விலே வருகிற நிகழ்ச்சிகள் வேறொருவர் வாழ்விலே வருவதில்லை. வந்தாலும் பல திருத்தங்கள் மாற்றங்கள் புடைசூழத்தான் வந்ததாக நாம் கேள்விப்படுவோம். மனிதனுடைய சரித்திரத்தில் பிறந்தான், வளர்ந்தான், மணந்தான், மடிந்தான்..... என்ற சாதாரணச் சம்பவங்களை உலகம் இரசிப்பதில்லை. அதற்காகவும் மனிதன் பிறந்ததாகவும் நாம் நினைக்கக்கூடாது. மனிதன் பிறந்தான் என்றூலே வாழத்தான்– வாழ்வதென்றூல் சோற்றுத் தருத்தியாக அல்ல, புகழோடு! அப்படி வாழ மனிதன் முயற்சி செய்கின்ற பொழுதுதான் பல நிகழ்ச்சிகளைச் சந்திக்கிறான். சிலவற்றோடு கைகுலுக்குகிறான், இன்னும் சிலவற்றுடன் கைகலக்கிறான்! அந்த நிகழ்ச்சிகளைத்தான் நாடகங்களில் சித்தரிக்கவேண்டும். அப்படித்தான் மல்லிகை என்ற பெண்ணின் வாழ்வில் அடித்த புயலைச் சித்தரித்திருந்தேன்.

மல்லிகை ஒரு கிராமப் பெண். திடீரென்று ஏற்பட்ட வெள்ளத்தினால் அவர்கள் கிராமமே அழிந்து விடுகிறது. வெள்ளத்

திலே மடிந்தவர்களிலே அவளின் பெற்றோர்களின் பெயர்களும் வந்து விட்டன! மல்லிகை தனது ஐந்துவயதுத் தம்பி மணியுடன் வெளி உலகை முதன் முதல் சந்திக்கிறாள்—நடக்கிறாள். அனுபவங்கள் பல அவளை வரவேற்கின்றன. கடைசியில் ஒரு சீமான் வீட்டில் வேலைக்கமர்கிறாள். அந்தச் சீமானின் செல்வக்குமரன் மனோகரன். அவன் அவளது அழகிலே மயங்குகிறான், மன்றாடுகிறான். பிறகு வெற்றி பெறுகிறான். வழக்கம்போலவே கதாசிரியர்கள் கற்பனை அவள் வாழ்விலே உண்மையாகிறது. இவைகளையெல்லாம் கவனித்து வருகிறான் கண்ணன். அவளின் கிராமத்து நண்பன். அவனும் அவ்வூர் மண்டியிலே வேலை பார்த்து வருகிறான். அவன் மல்லிகையை மனதார நேசிக்கிறான். அவன் அவளிடம் நெருங்கி நேசத்தைத் தெரிவிக்கிற நேரத்தில் மனோகரனின் வெற்றித்திருநாள் கொண்டாடியாகி விட்டது. மல்லிகை மறுத்துவிடுகிறாள், மனதில் கண்ணனுக்கு இடமிருந்தும்! பிறகு அவன் ஒதுங்கிக் கொள்கிறான். ஆனால் அவள் வாழ்க்கைப் புத்தகத்தின் ஒவ்வொரு ஏட்டையும் உன்னிப்பாகப் படித்து வருகிறான் அவன். அவனுக்கு மனோகரன்மீது வரவர நம்பிக்கை குறைந்து வருகிறது. ஆனால் மல்லிகையின் வயிற்றிலோ சிசு வளர்ந்து வருகிறது! மல்லிகை திருமணத்தை விரைவாக முடியுங்கள் என்கிறாள் ஒரு நாள், தன் நிலையை ஜாடையாகக் குறிப்பிட்டு! முதலில் சிரித்து மழுப்புகிறான், பிறகு சீறி ஒதுக்குகிறான் அவளை! மல்லிகை அழுகிறாள், அலறுகிறாள், புலம்புகிறாள், ஒப்பாரியிடுகிறாள்! அவளைத் தேற்றுவாரையாருமில்லை சின்னஞ்சிறுமணியைத் தவிர! கண்ணன் ஒரு நாள் அவளைக் கண்டு ஆறுதல் கூறுகிறான். அன்று இரவு பயங்கரக் கொலை நடக்கிறது. மனோகரன் கொல்லப்படுகிறான். கண்ணன் குற்றஞ் சாட்டப்படுகிறான். எங்கேயோ ஓடி விட்டதாகப் பேசிக்கொண்டிருந்த மல்லிகை வருகிறாள். கொலையாளிதான் தான் எனக் கூறுகிறாள். விடுதலை செய்யப்படுகிறான் கண்ணன். மணியை அவன் கையிலே ஒப்படைக்கிறாள். அங்கேயே சாகிறாள், ஏற்கனவே விஷமருந்தி நீதி மன்றம் வந்திருந்ததால்—அவ்வளவு தான் 'அவள்' முடிந்து விட்டது.

'என்னை நாடகத்தில் வரும் மல்லிகையென்றும், தங்களைக் கண்ணன் என்றும் கூறிவிட்டீர்களே, அப்படியானால் நான் பட்டிக்காட்டுப் பெண்ணை.....வேலைக்காரியாகத்தான் போக வேண்டுமா?'.....என்று கேட்டுவிடாதே!.....கதையென்றால் அப்படித்தான். தற்குறிப் பேற்றம் என்று அணியிலக்கணத்திலே குறிப்பிடுவார்கள். அப்படித்தான் எந்தக் கதையிலும் ஆசிரியன் தன் ஆவலை நுழைத்து விடுவான். இதையும் விட்டு

விட்டு விபரீதமான குதர்க்கமான வாதங்களிலும் இறங்கி விடாதே! என் வாழ்க்கையிலே வருகிற மனேகரன் யார், மணி யார்.....என்றெல்லாம் கேட்டு என்னைச் சங்கடத்தில் மாட்டிவிட்டு, உன் உள்ளத்தையும் புண்ணாக்கிக் கொள்ளாதே! நாடகம் கிடக்கட்டும், வாழ்க்கைக்கு வருவோம் இனி—பத்மா, அன்று ஏற்பட்ட அந்த உணர்ச்சி இன்னும் மடியவில்லை. இனி என்றும் மரித்துவிடாது!

மனம் ஒரு சினிமாப் படம் காட்டும் இயந்திரம்; முகம் வெண் திரை! உள்ளத்து உணர்ச்சி யலைகளை முகத்திலே நன்முகப் பார்க்கலாம். அப்படித்தான் என் முகத்திலேயும் என் இதயக் குமுறலை, உணர்ச்சிக் கொப்பளங்களைக் கண்டிருப்பாய், பத்மா. சில காட்டாறுகளில் எந்தவித முன்னறிவிப்பு மின்றித்திடீரென்று தண்ணீர் பெருகும், வெள்ளமாகும். 'நொப்பும் நொரையுமாய்' இரு கரைகளையும் இடித்து நொறுக்கிக் கொண்டோடும், அப்படித்தான் என் மனமும்! என் இதய ராணியே கேள்—எனது மன நாடகத்தை! உன்னைப் பார்க்கிற பொழுதெல்லாம் என் எண்ணம் புரட்சி செய்யும். திருமண வீடுகளில் நீ பார்த்திருப்பாயே, புரோகிதன் வளர்க்கும் நெருப்பை—அவன் ஏதாவது உளறிக்கொண்டு கரண்டி கரண்டியாக நெய்யை எடுத்து ஊற்றுவான். நெருப்பு திடீர் திடீரென்று அதிகரித்து உடனே சாதாரண நிலைக்குவரும். அப்படித்தான் உன் 'தரிசனம்' நெருப்பிலே விடும் நெய்யாக மாறி நெஞ்சத்துத்தீயை அதிக ஜ்வாலையோடு எரித்திடலாயிற்று.

பத்மா, உன்னோடு எத்தனை முறைகள் பேசியிருப்பேன். உலகத்து நடவடிக்கைகள் அத்தனையையும் கூறியிருப்பேன். சைனாவிலே நடக்கிற போராட்டம், இந்தோனேஷியாவில் ஏற்பட்ட சுதந்திர உணர்ச்சி, பர்மாவிலே பரவிவரும் அயலார் ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம், ஐக்கிய நாட்டு சபையின் அவசியம், பாகிஸ்தானின் நாணய முறை, ரஷ்யாவின் போக்கு, அமெரிக்காவின் டாலர் வலை..... இப்படி எதை யெதைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். ஆனால் என் மனதிலே 'நாற்று விட்டிருந்த' அந்தக் காதல் உணர்ச்சியை உன்னிடம் சொல்லக் கூடாது என்பதல்ல, பத்மா! சொல்ல முடிய வில்லை என்னால்—அதுதான் உண்மை. சொல்ல பல முறைகளில், பல தடவைகளில் முயற்சி செய்திருக்கிறேன். தோற்றுவிட்டேன். ஏன்? என் நாக்கு பேசும் சக்தியை இழந்து விடுகிறது. நாக்கு புரண்டாலும் ஒலி வெளியில் வருவதில்லை. நெஞ்சுக்குழியில் கக், கக் என்று சிறு சப்தத்துடன் ஒரு நிசப்தம்— சுடுகாட்டு அமைதி! நான் என்ன செய்யட்டும்?

அன்று கடற்கரையில் நான் தனியாகவே உலவி வந்தேன். மனித நாற்றமே இல்லாத மூலையில் என் நிலையற்ற மனத்திற்கு சாந்தி தேடி நடந்தபடியே இருந்தேன். நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைத்ததாம்..... என்று வைதிக எண்ணம் உள்ளவர்கள் சொல்வார்கள். தெய்வம் வேறுக நினைத்ததோ என்னவோ, அன்று அங்கு உன்னை எனக்கு அறிமுகம் செய்ய வேண்டியதில்லை, அந்தப்பொல்லாத சந்தர்ப்பம் என்றகுறும்பன்! பத்மா, கடல் மணலைக் கூட்டி நீ கட்டி யழித்திருந்த மணல் வீட்டைப் பார்க்கிற பொழுது எனக்கு எப்படி யிருந்தது, தெரியுமா? நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி,..... என் இதயங் கட்டி வைத்திருந்த காதல் கோட்டையும் இப்படி நிலை யற்றுச் சரியும் மணல் வீடுதானு என்று எண்ணினேன். என் கண்களில் திடீரென்று நீர்திரண்டு விட்டது. அதுவும் உன் கரங் களாலேயே அது அழிந்துவிடுமோ என்று எண்ணும் பொழுது இமைகளில் தத்தளித்துக் கொண்டிருந்த நீர்த்துளிகள் கன்னங் களில் வழியத் தொடங்கி விட்டன. ஆம், பத்மா, நான் அழுது விட்டேன். அவ்வளவு பஞ்சு மனங் கொண்டவன் நான்.

வான வெளியைப் பார்த்தேன். அந்த நீலத்திரைக் கடலை யும் பார்த்தேன். இரண்டும் முத்தமிடும் காட்சியும் என் கண் களுக்குத் தெரிந்தது. வானம் வளைந்துவந்து அந்த நிர்மலமான ஆழ்கடலை அணைத்துக் கொண்டிருந்தது. அந்தச் செந்நிற வான் படுதாவின் நிறம் கடலின் மேற்பரப்பிலே புதியதோர் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது. அந்தத் தொலை தூரத்தில் இருக்கும் தொடு வானக் காட்சியைப் பார்த்தேன். என் உள்ளம் அமைதி யிழந்து விட்டது. வண்டியிலே மாட்டி காலொடிந்தோடும் நாயைப் போல ஒரே குரைப்பு மயம்..... திரும்பினேன். அப் பொழுதும் பத்மா, உன் கோட்டை கட்டும் வேலை முடிய வில்லை. நீ என்னைப் பார்த்துவிட்டுத் தான் அப்படிப் பாராது போல நடித்தாயோ என்னவோ நான் அறியேன். ஆனால் நீ பெரிய குறும்புக்காரி..... என்னைத் தவிக்க விட்டு வேடிக்கை பார்த்திருப்பாய். வானுன் கடலும் நடத்திய காதல் தோற்றம் என் மனதை விட்டு மறையவே இல்லை. என் பத்மாவை ஒரு நாள் இப்படித் தழுவி வாரி முத்தமிடும் இன்ப வேளை வருமோ என்று எண்ணினேன். அந்த ஏக்கத்தின் பிரதிபலிப்பு என் முகத்திலே தோன்றி விட்டது! இல்லா விட்டால் உன் அருகில் வந்து நின்ற பொழுது நீ அப்படிப் பார்த்திருக்க மாட்டாய்!

"பத்மா, ஏன் இவ்வளவு தூரம் வந்து....." என்றேன் நான்.

"இனிது இனிது ஏகாந்தம் இனிது!" என்று கவிதை பாடினாய் நீ.

"எப்பொழுதுமே இதே நிலை....." என்றேன் நான்

"அதில் சந்தேகம் ஏன்?" நீ கேட்டாய், சற்றுக் கோபத்துடன்!

"இடைக்கால ஏற்பாடா, அல்லது நிரந்தர கீதமோ?" என்றேன், கிண்டலோடு!

சிரித்துவிட்டாய் நீ, பத்மா! ஆனால் அந்தச்சிரிப்பினால் என்ன விளைவு ஏற்பட்டது என்பது உனக்குத் தெரியாது. வெள்ளம் வருகிறது, அதற்குத் தெரியுமா, அது செய்யும் அழிவு வேலை? தெரியாது. புயல் அடிக்கிறது. அந்த 'வாயு தேவன்' உணர்வதில்லை அதனால் ஏற்படுகிற கோரச் சம்பவங்களை, ஈடுசெய்ய முடியாத சேதங்களை! பூகம்பம் ஏற்படுகிறது. அந்த நில நடுக்கம் தன்னால் ஏற்படுகிற துன்பங்களை, துயரங்களை அறிந்து கொண்டிராது. அறிந்தால் பூகம்பமே ஏற்படாதே! எரிமலை தன் வாயால் கக்கும் நெருப்புக்குழம்புக்குப் புரிவதில்லை, அது செய்கிற கொடுமைகள்! அப்படித்தான் இந்தப் பெண்களின் சிரிப்பும்! அவர்களுக்கு என்ன..... இலேசாகச் சிரித்துவிட்டு எத்தனை வாலிபர்களின் இதயங்களைச் சுக்கு நூறாக்குகிறார்கள். சேதமடைகிறதை ஈடுசெய்ய யார் நிவாரணக் கமிட்டி அமைத்து நிதி சேர்த்துத் தரப் போகிறார்கள்? வாலிப உலகில் பெண்களின் சிரிப்பிற்கு அதிக மதிப்பு— மதிப்பென்ன, பெரிய ஆராய்ச்சியே செய்ய விஞ்ஞானிகள் ஏராளம்! குமரியின் குறுநகை ஒரு அணுகுண்டு — அது விழுந்த இடம் வாலிப இதயமானாலும், வயோதிக உள்ளமானாலும் ஹிரோஷிமாவே தான்! பத்மா, அந்தக் கொல்லும் சிரிப்பினால்தான் நான் பித்தனானேன்.

வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தோம்.

"அதோ வானத்திலே பாருங்கள் ஒளி விடும் நட்சத்திரங்களை ... ... எவ்வளவு அழகாக இருக்கின்றன!" என்றாய் நீ.

"அழகுப் பொருள்களெல்லாம் எட்டாத தூரத்தில் தான் இருக்குமோ?" என்றேன் நான்.

"ஏன் ... ..." என்று இழுத்தாய், என் குறிப்புணராமல்!

"பத்மா, வேடிக்கைக்காகச் சொல்கிறேன். ஆனால் அதனால் நல்ல விளக்கம் கிடைக்கும். நான் ஒரு பெண்ணை

விரும்புகிறேன். அவள் பேரழகி என்பது என் திடமுடிவு. ஆனால் அவளுக்கு என் மன நிலை தெரியவில்லை — தெரிவிக்கப் படவுமில்லை ....''

''போதுமே உங்கள் கற்பனை — ஒரு பெண்ணை வானத்து மீன்களுக்கு ஒப்பிடுகிறீர்கள். அவ்வளவுதானே! ஆனால் இந்தப் பெண்கள் எளிதில் பிறர் கழுத்தில் ஒளிவிடும் நட்சத்திர மாலையாகிவிடுகிறார்கள். ஆகவே உங்கள் கவலையை விட்டொழியுங்கள்!''

''சட்டென்று ஒரு மூற்றுப்புள்ளியிட்டாய் என்பேச்சிற்கு! ஆனாலும் நான் வரவில்லை. தொடர்ந்தேன்.

''பெண்கள் நட்சத்திரங்கள் தான் — சமூக வானத்தில் அவர்கள் ஒளிவிடுகிறார்கள்! ஆண்மை என்ற சூரியனின் அட்டகாசம் மடிகிற வரை பெண்மை மறைந்தே வாழ்கிறது. தண்ணிலவு என்ற சமத்துவம் தோன்றியவுடன் விண்மீன்கள் ஒளிவிடுகிறார்கள் — ஆனாலும் வெகு தொலைவிலேயே நிற்கிறார்கள். அருகில் வந்துவிட்டால் ... ... ஆண்மைக் கதிரவன் என்ன ஆவது'' என்று பித்தனைப் போலக் குழம்பினேன்.

''என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? நேரடியாகச் சொல்லுங்கள். வீணகத்தந்திர வழியென்று தவறுதலான பாதைக்குப் போய்விடாதீர்கள். பெண்மையைப் புகழ்வதால் நான் ஏமாந்து விடமாட்டேன்'' என்றுய் சிரித்துக் கொண்டே!

நான் எதைச் சொல்வது, பத்மா. பேசாமல் வாய் மூடிய படியே ஆகாயத்தைப் பார்த்தேன். நிலவு தனது கிரணங்களால் உன் முகத்தை மேலும் அழகு செய்ய முயற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டேன். அப்பொழுது தான் வீடு திரும்ப வேண்டும் என்ற எண்ணமும் வந்தது. பிரிந்தோம். ஆனால் நீ மட்டும் என்னிடமிருந்து எதையோ பிடுங்கிப் போவதாக ஒரு பிரமை — ஆம், என் இதயம் உன்னோடு வந்துவிட்டதே!

பிறகு கல்லூரியில் பட்டமளிப்பு விழா மண்டபம் — ஏராளமான கூட்டம். தொண்டர்கள் படையிலே நீயும் ஒருத்தியாக இருப்பதைக் கண்டேன். உன்னோடு எதையாவது பேசி வம்பிடிக்கவேண்டும் என்று என் மனம் பிடிவாதம் செய்தது. ஆகவே நீ நின்றிருந்த வாயற்படி வழியே நுழைந்தேன். உன் குளிர் விழி வழியவிட்ட பார்வையருவியிலே மூழ்கினேன். என் உள்ளத்தில் ஒரு புதுவேகம் — உடலுக்கு ஏதோ திடீர் வலுவு வந்து விட்டதாக ஒரு நம்பிக்கை! என் நடையிலே கூட ஒரு புது

எடுப்பும், மீடுக்கும் இருந்தன என்பதை என்னைக் கூர்ந்து கவனித்தவர்கள் அறிந்திருப்பார்கள். பெண்களைக் கண்டவுடன் இராப்பை ஒழுங்கு செய்து கொண்டு, மடிந்து கிடக்கும் கழுத்துப்பட்டியைத் தூக்கிவிட்டு நல்லநடைபோடும் வாலிப அருணகிரிகள் போல நான் நடந்தேன் அன்று!

"பத்மா, இன்று என்ன விழா?" என்றேன் அன்றுதான் வானுலக வீதியைவிட்டு வந்த புதியவனைப் போல!

"இந்திர லோகத்தை விட்டு இப்பொழுது தான் வருகிறீர்களா? ... ... சுந்தர் உங்களுக்குப் பூலோகமே மறந்துவிட்டதோ! இன்று பட்டமளிப்பு விழா .... போய் உட்காருங்கள்", என்றாய் கொக்கொலிச் சிரிப்போடு.

"ஆமாம், பத்மா ... ... இந்த ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ... ... அது தான் உங்கள் வகையறா ... ... விடுகிறார்களா? தொல்லை கொடுத்துவிட்டார்கள்?"

"சுந்தர் ... . போதுமே உங்கள் பிரதாபம் ... ."

"சரி, சரி இன்றைக்கு என்ன பட்டம் தரப்போகிறார்கள்?"

"அதுவா ... . உங்களுக்குப் போக்கிரி என்று பட்டம் தரப்போகிறார்கள்!"

"சே ... . நான் வாங்கப்போகிற பட்டம் வேறு. சொல்லட்டுமா?"

"என்ன அது?"

"காதலன் ....!"

"ஓகோ .... வாங்க வேண்டிய இடம் இதுவல்ல, பூந்தோட்டம், கொடுக்க வேண்டியவர் கவர்னருமல்ல, அது ...., போய் வாரும் காத ... ..."

'களுக்' கென்று சிரித்தாய். அதற்குள் மேலும் மாணவர்கள் வர ஆரம்பித்து விட்டார்கள். உள்ளே நுழைந்தாய். விழாவிலே நடந்த நடவடிக்கைகளையா கவனித்தேன். இல்லை என் அழகு இராணியையே கவனித்தேன்!

பிறகு ஒரு நாள் ... . கல்லூரி மாணவர்கள் நடத்திய பொருட் காட்சியிலே உன்னைச் சந்தித்தேன். காற்றைப் பிரித்திடும் முறையை விளக்கிக் கொண்டிருந்தாய். கரியமில வாயு,

பிராணவாயு இரண்டும் கலந்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொண்டிருந்தாய். நான் வந்து சேர்ந்தேன் அந்த இடத்திற்கு! உன் முகம் மாறிய போக்கை என்னால் வருணிக்க முடிய வில்லையே!

"சுந்தர் ... ... இங்கேயும் வந்துவிட்டீர்களா? சரி போங்கள்!"

"நான் என்ன அவ்வளவு பாவியா ... ... எல்லோருக்கும் வரம் அளிக்கிற தெய்வம்—என்னை மட்டும் விரட்டியடிக்கிறது!"

"தெய்வத்திடம் எதிர்த்துரையாடும் பக்தன் ... ..."

"சிற்றம் வேண்டாம் தேவி ... ... பக்தன் இதோ பணிகிறேன் ... ... உடனே போய்விடுகிறேன். ஆனாலும் ஒரு சந்தேகம் ... ... காற்றில் கரியமில வாயுவும், பிராண வாயுவும் கலந்திருக்கிறது. ஆனால் வாழ்க்கையில் ... ... ?"

"பெண்மையின் சகிப்புத்தன்மையும், ஆண்களின் அடங்காப்பிடாரித்தனமும்!"

"இல்லை, ஆண்மையின் உழைப்பும் ஊதியமும், பெண்மையின் சோம்பலும், சோற்றுக்கடையும்!"

"சுந்தர்....."

"பத்மா....."

"சரி, 'பார்க்கிலே' பார்ப்போம் போங்கள்"

அப்பொழுது நான் விலகிக்கொண்டேன். இப்படி ஆயிரம் சந்தர்ப்பங்கள்—அருமையான வாய்ப்புகள் இருந்தன. இந்த நேரங்களிலெல்லாம் அந்த எண்ணம் அரித்தபடியேதான் இருந்தது. இருந்தும் கேட்கமுடியவில்லை. சில சிறுவர்கள் புகை பிடிக்க மொக்குப் பருவத்திலேயே கற்றுக்கொள்கிறார்கள். தப்பித்தவறி பெரியவர்கள் கண்களில் புகை பிடிக்கும்பொழுது மாட்டிக்கொண்டால் எப்படித் தவிக்கிறார்கள்? புகையை விழுங்குகிறார்கள், நெருப்புடன் கூடிய புகைச்சுருளை உள்ளங்கையில் மறைக்க முனைகிறார்கள்.... அப்படிச் சில சந்தர்ப்பங்களில் உன்னிடம் தவித்திருக்கிறேன் பத்மா. சில வேளைகளில் கேட்டுவிடுவது என்று துணிந்து கேட்கவும் நாவை உயர்த்திவிடுவேன். பிறகு ஏதோ ஒரு சக்தி தடுத்துவிடும். சில சந்தர்ப்பங்களில் அதைப்பற்றி ஆரம்பித்துப் பிறகு புகையை

விழுங்கித் தவிக்கும் சிறுவனைப்போல வேறு திசைக்குப் பேச்சை இழுத்துச் செல்ல பெரும்பாடு பட்டிருக்கிறேன். பத்மா, நீ என்னை என்ன எண்ணிக்கொண்டாலும் சரியென்றுதான் கடைசியாக என் எண்ணங்களையெல்லாம் தொகுத்து அந்த மடங்கலாக உனக்கு அனுப்பினேன்.

உன் விடையைக் கண்டேன். திடுக்கிட்டேன். அழுது விட்டேன்! ஒரு கோப்பை பால் வரும் என்று எண்ணியிருந்தேன். நீ ஒரு கோப்பை நஞ்சை அனுப்பிவிட்டாய். இது நீதியா, பத்மா! நினைத்துப்பார். நான் உன்னை மனதார நேசிக்கிறேன். பத்மா இல்லாத எதிர்காலம் கதிரவன் இல்லாத பகல், நிலவில்லாத இரவு எனக்கு... என்று எண்ணிக் கிடக்கின்ற இந்த வாலிபனுக்கு நீ என்ன விடை யிறுப்பது? ஒரு கிளி தன் இருப்பிடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு காய் இருப்பதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடிற்று. அது என்றைக் காவது ஒரு நாள் பழுத்துவிடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையிலே, ஒவ்வொரு நாளும் அந்தக் காயைப் பார்த்த படியே இருந்தது. காய்மட்டும் கனியாகவே இல்லை. திடீரென்று ஒரு நாள் வெடித்துவிட்டது. ஆம், அது இலவங்காய், வெடித்துப் பஞ்சாகிவிட்டது! கிளியின் இதயமும் வெடித்து விட்டது... இலவங்கனிக்குக் காத்திருந்த கிளியானேன் நான்.

'அன்புள்ள சுந்தர்...' என ஆரம்பித்து எழுதி முடித்திருக்கிற உன் கடிதத்தை இதுவரை நூற்றிருபத்தெட்டு தடவைகள் படித்திருப்பேன். திருக்குறள் முன்னுரையில் சின்னஞ்சிறு வயதில் நான் படித்த நினைவிருக்கிறது. பயிரெறும் பயிரெறும் புதுமை பயப்பதாய்: நவிரெறும் நவிரெறும் இன்பம் தருவதாய்..... உள்ளது குறள் என்று எழுதியிருப்பதாய் ஒரு நினைவு. உன் கடிதமும் ஒரு குறள்தான். நான் எழுதிய நீண்ட கடிதத்திற்கு நீ எழுதியிருந்த விடை அளவில் குறைவு தான்—இரத்தினச் சுருக்கந்தான்! கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தி சிறுகத் தரித்த குறள் என்பார்கள். நீயும் அதே முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறாய்.

"தங்கள் எண்ணம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. உங்கள் கடிதம் எனக்குச் சொல்லி யறிந்துகொண்ட செய்தியல்ல இது, நீண்ட நாள்களுக்கு முன்னரே தெரிந்து கொண்டேன்! என் இதயத்திலும் தங்களுக்கு இடம் இல்லை யென்று அறவே வெறுத்துப் பேசவும் முடியவில்லை-எப்படி முடியும்? பத்மாவின் இதய மன்னனாக சுந்தருக்கு உள்ள உரிமையைவிட வேறுயாருக்கு அதிக உரிமை வந்து

விட்டது! இருந்தும், நான் ஒன்றுமறியாதவளாக ஏன் நடந்துவந்தேன்? தெரியாது உங்களுக்கு, தெரிந்திருந்தால் இப்படித் துடித்திருக்க மாட்டீர்கள்!

காதல் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். உண்மை. ஒத்துக்கொள்கிறேன். காதலின் பேரால் விடையிறுக்க வேண்டுமாலை, ஆகட்டும், கண்ணுளா..... என்றுதான் பதில் கூறவேண்டும். ஆனால்? வேறொன்று குறுக்கில் நிற்கிறது. கடமை என்னைத் தடுக்கிறது. தங்களுக்கு ஒப்புதல் விடை தரக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டது. சுந்தர்..... என்னை மன்னித்துவிடுங்கள். மறந்து விடுங்கள். இனிதொடர்ந்து தங்கள் கடிதப் படைகளையோ, சந்திப்புப் பட்டாளங்களையோ அனுப்பி என்னைத் தொல்லைக்குள்ளாக்காதீர்கள்.....'' இப்படி எழுதிவிட்டாய். இந்த விடையை நான் எதிர்பார்க்கவில்லை. நம் வாழ்க்கைத் தீபத்தின் ஒளியை அவித்துவிட்டாய் உன் விடையின் மூலம்! இதோ என் எதிர் காலம் இருண்டுவிட்டது! வருங்கால வாழ்க்கையில் இனி வளம் இருக்க வழியில்லை. பத்மா நீ ஒரு பருவ மழை-மழையற்ற பயிர் நிலம் இனி என் வாழ்வு!

கடமையாம், கடமை! எனக்கும் தெரியும், பத்மா கடமை யென்ற மூன்றெழுத்துக்களாலான வார்த்தை அகராதியில் உண்டென்ற உண்மை! என்ன கடமை வந்து உன்னைத் தடுத்துவிட்டது—எனக்கு விளங்கச் சொல், பார்க்கலாம். காதலைத் தடுக்கிற கடமை எதுவானாலும் அது கடமையல்ல, அது மடமை! எழுதாதே, என்னோடு பேசாதே..... என்று சொல்லிவிட்டாய். அது மட்டுமல்ல, கல்லூரியிலும், வீட்டிலும் தங்களால் தொல்லை..... என்று கூறிவிட்டாய். இருப்பினும் என் இன்பச்சிலை எனக்குப் போட்ட தடையுத்தரவை மீறுகின்றேன். அவள் என் மனதிற்கு ஊரடங்கு சட்டம் போட்டாள். அது வெற்றி பெறவில்லை. புரட்சி செய்யும் எண்ணங்களை எந்தப்பீரிவின்மீது குற்றஞ்சாட்டி எந்த நீதிக் கூடாரத்தில் நிறுத்துவது? ஆகவேதான் இதைக் கடைசியாக எழுதுகிறேன். இனி என்னிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவேண்டாம்.

காதல் வேறு கடமை வேறு என்று நினைத்திருந்தால் அந்த முடிவை மாற்றிக்கொள் பத்மா! கடமைகளிலே ஒன்று காதல்—மனித சாதிக்கு மகாவல்லமை வாய்ந்த இயற்கை ஏற்படுத்திய தவிர்க்கமுடியாத கடமைகளிலே காதலுக்கு இடம் உண்டு என் பது மட்டுமல்ல, முக்கிய இடம் உண்டு! காதலையும் கடமை யையும் கீரியும் பாம்புமாக்கி விட்டாய் நீ. புலியும் மானும்

என்று நிரூபிக்கிறாய் நீ. எலியும் பூனையும் என்று இயம்பிவிட்டாய் நீ. அது தவறு, பத்மா! காதலும் கடமையும் ஒன்றிலே ஒன்று அடங்கியுள்ள உன்னதமான இரண்டு பொன்னான ஏற்பாடுகள்! தண்ணீரும், தண்மையும் போல, பாலும், அதன் வெண்மையும் போல, இசையும், இனிமையும் போல, மலரும் மணமும் போல, இலையும் பசுமையும் போல..... கடமையும், காதலும்!

ஆனால் ஒரு உண்மை—பத்மா, அதை மறுக்க முடியாது தான்!

அதோ பார், பத்மா, வளைந்து தெரியும் வான்முகட்டை — அந்த அடிவானத்தில் வர்ணங்கள் செய்யும் ஜாலவேடிக்கைகளை! அதுதான் காதல். நாம் நிற்கிற பூமிதான் கடமை என்கிற வழுக்கு நிலம். இதிலே நடந்து அந்த அடிவானத்தைத் தொட்டுவிடும் பந்தயத்திலே பல காளையரை, கன்னியரை நிறுத்தி விடுகிறோம். அவர்கள் கடமையிலும் வழுக்கி விழுகிறார்கள். காதலையும் எட்டிப் பிடிப்பதில்லை!

கடமை, காதலை மறுக்கச் சொல்கிறது என்கிறாய். அதே கடமை, என்னை, உன்னை மறக்கச் சொல்லவில்லையே..... என்ன செய்வது? மழை, நாடகம் நடத்துகின்ற நல்லாப்பிள்ளைக்கு நடுக்கத்தையும், வயலோரத்திலே வரண்டு கிடக்கும் நிலத்தைப் பார்த்து ஏங்கி நிற்கும் வரதப்பனுக்குப் புன்சிரிப்பையும் தருகிறது! ஏன்? உன் கடமை எனக்குத் தெரியும். பெற்றவர்கள் வார்த்தைகளை நான் எப்படி மீறமுடியும் என்பாய். இன்று சமூகத்தில் ஆண்கள் எதையும் துணிந்து செய்யும் ஆற்றலும், வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல.....! ஆண்கள் வாடாமல்லிகளாக இருக்கிறார்கள். பெண்கள் தொட்டால் சிணுங்கிகளாக வாழ்கிறார்கள்.....என்று சமாதானம் கூறுவாய். அதட்டுகின்ற தந்தையும், அழுகிற தாயுமே பல மூற்போக்கு உள்ளங்களை முடக்குவாத நோய்க்குள் சிக்கவைக்கிறார்கள். சீர்திருத்தத்திற்கு எதிர்ப்பு, தாயுருவிலும், தந்தை வடிவிலும் வரலாம். எதிர்க்கும் நெஞ்சுத் துணிவு வேண்டும். நீ எண்ணுகின்ற எண்ணங்களுக்கு உண்மையிலே மதிப்பு தருகிறாய் என்றால் மிரட்டுதலுக்கும், கெஞ்சுதலுக்கும் அடங்கிவிடக்கூடாது.

எனக்குமட்டும் கடமை யில்லை யென்று கருதாதே. கடமையின் அழைப்புகளை நான் எப்பொழுதும் அலட்சியப்படுத்தியதில்லை. ஆனால் என் கடமை என்றும் என் வாழ்விற்குப் படுகுழி

பறிப்பதாக அமைந்ததில்லை. மனிதனுக்குக் கடமைகளை மனிதனேதான் வகுத்தான். அந்த ஆதி மனிதன் அவன் காலத்திற்கு ஏற்ற முறையில் சில கட்டு திட்டங்களை ஏற்படுத்தினான். காலத்திற்குக் காலம் அந்த அமைப்பு கலைக்கப்பட்டு குலைக்கப் பட்டு புது வடிவம் பெற்று வந்திருக்கிறது. தந்தையும் தாயும் முன்னறி தெய்வம், தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை; தந்தை சொற் கேள்..... என்றெல்லாம் நானும் படித்திருக் கிறேன், என்னைச் சுற்றியுள்ளவர்கள் மட்டும் சாதி வேலியைத் தாண்டிட அனுமதிக்க மாட்டார்கள்தான், சனாதனக் கோட் டையை விட்டோட சம்மதம் தரமாட்டார்கள்தான்.....அதற் காக அடங்கிவிட்டால்? சீர்திருத்தம் முளைக்குமா? புதுமை வளருமா?

கடமையென்ற செந்தணலிலே காதல் உணவு சமைக்கப்பட வேண்டும்! இது ஏன் உனக்குத் தெரியவில்லை?

கடமை ஒரு ஊற்று — அதிலிருந்து பெருகிவரும் நீர்தான் காதல்! பத்மா, என் கட்சிக்கு வலுவுதேட இப்படியெல்லாம் பேசுகிறேன் என்று எண்ணி, உண்மையை உணர மறுக்காதே!

நான் ஒரு கனவு கண்டேன்...

கனவைச் சொல்கிறேன்....கவனமாகக் கேள். என் படுக் கையிலிருந்து திடீரென்று விழித்துக்கொண்டேன். ஒரே ஒளி வெள்ளம் .....அதில் ஒரு பொன்னவிர்மேனியாள் தோன்றி னாள். அவள் என்னைப் பார்த்தாள் அன்போடு. நான் வணங்கி னேன்.

"மனிதனே....." என்றாள் அவள்.

"அப்பொழுது அம்மையே, தாங்கள் தேவலோகவாசியோ?" என்றேன் நான்.

"ஆம்....." என்றாள். பிறகு...

"வா, என்னுடன்....." என்று அவளது துவளும் மெல்லிய கரத்தால் என் கரத்தைப்பிடித்து இழுத்தாள். அவள் நடந் தாள். நானும் நடந்தேன்!

"எங்கே போகிறோம், தாயே...." என்றேன்.

"அதோ, அந்த அடிவானத்திற்கு யாத்திரை கிளம்பு கிறோம்!"

"அடிவானத்திற்கு யாத்திரை போகமுடியுமா? என் போன்ற மனிதர்களால்?"

"முடியும், முயன்றால்—!"

"வானுலக மக்களுக்காக?"

"அப்படியொரு உலகம் உண்டா?"

"அதற்குத் தாங்கள் தான் விடை சொல்ல வேண்டும்"

"வையத்து வாழ்வாங்கு வாழ்வார் தெய்வத்துள் வைக்கப் படும் என்று சொல்கிறார்கள் உங்கள் உலக வள்ளுவர் பொன் னுரை என்று. அந்தக் கூட்டத்திலே சேர்ந்தவன்தான் நான்"

மேலும் நடந்தோம். மௌனம் நிலவியது.

"தொடுவானத்திற்கு, என்று போய்ச்சேர்வது? எப் பொழுது நம்பிரயாணம் முடிவது?"

"அவசரப்படாதே..... பொறுமை வேண்டும்"

"அங்கே எதற்காகப் போகிறோம்?"

"பூவுலகில் தங்கள் கடமைகளை நிறைவேற்றுகிறவர்களின் பெயர் பட்டியல் புத்தகம் அங்கே இருக்கிறது. அதனைக் காட்டு வதற்காகவே அழைத்துச் செல்கிறேன்"

"அதில் என் பெயர் இருக்காதே!"

"ஏன்?".....

"காதலின் வெற்றிக்கு உழைத்த அளவு, கடமை நிறை வேற்றத்தில் கவனம் செலுத்தவில்லை."

"தேடிப் பார்ப்போம்"

சென்றுகொண்டிருந்தாள். நானும் பின்தொடர்ந்தேன். அந்தப் பொன்னேட்டைப் புரட்டினாள். முதல் பக்கம்..... முதல்வரி .... என்ன ஆச்சர்யம்! நான் என் கடமையைத் தவற வொட்டாமல் நிறைவேற்றுகிறவனும்..... எப்படியோ? உன் னைப்பற்றியும் கேட்க வேண்டும் என்று எண்ணினேன். மறைந்து விட்டாள். என் கனவும் கலைந்துவிட்டது.

பத்மா, உன்னை மறந்துவிட்டேன் என்றே நினைத்துக் கொள். நீ கூறுகிறபடி நான் தொல்லை தரமாட்டேன். நான்

உன்னை அடைந்து எத்தனையோ நாட்களாகிவிட்டனவே. எப் பொழுதும் உன்னுடன் தானிருக்கிறேன். உரையாடுகிறேன், இரவு நெடுநேரம்வரை! பிறகும் என்னை விட்டுப் போவதில்லை. கூப்பிட்டவுடன் ஏன் என்ற குரல் காட்டி என்னிடம் ஓடோடி வருகிறாய் ... ... ஆம், பத்மா எனக்குப் பித்து பிடிக்கவில்லை. 'மஜ்னு' வாகவில்லை. 'ஸ்குரு லூஸ்' என்றும் கேலி பேசி விடாதே சட்டென்று! நல்ல நிலையிலிருந்தே சொல்கிறேன்.

பத்மா, உன் நினைவு வருகிற பொழுதெல்லாம் என் பேனுவை எடுப்பேன். உடனே பத்மாவிடம் நான் பேசுவேன் - அவள் என்னோடு பேசுவாள்! இலக்கிய நூலேணி வழியாக என்னிடம் வந்து விடுகிறாள். என் கழுத்து ஒரு வானவில்—நீ நிற்கிற இடமோ அடிவானம்! வானவில் வழியாக அடி வானத் திற்கு யாத்திரை கிளம்பி வந்து நான் உன்னை அடைவேன். ஆகவே, நான் உன்னை இழக்கவில்லை, இழக்க விரும்பவுமில்லை. நீ என்னைத் தள்ளிவிட்டதாக நன்றாக, உறுதியாக, திடமாக எண் ணிக்கொள். எனக்கு அது பற்றிய கவலை துளியும் இல்லை.

தசரதன் என்றோ ஒருநாள், தூரத்திலே நீர் முகந்துகொண் டிருந்த சிறுவனை யானையென்று அம்பெய்து கொன்றுவிட்டா னும். அந்தச் சிறுவனின் பெற்றோர்கள் அவனை நீயும் எங்களைப் போல புத்திரசோகத்தால் சாவாய் என்று சாபமிட்டு மடிந்தார் களாம். அப்படியே எனக்கு யாரோ ஒரு பெண் ஏக்கத்தாலேயே உன் வாழ்வு குலையும் என்று எனக்குத் தெரியாத பிறவிகளில் சாபமிட்டுவிட்டாள் போலிருக்கிறது! ஏனெனில், பத்மா, என் ஆயுளில் உன்னை மறக்க முடியாதே!

உனக்கு எந்தத் தொல்லையும் வராது. அப்படி வந்தால் அதற்காக என் உயிரையும் பணயம் வைத்துப் போராடுவேன். என் இதயத்தை இரும்பாக்கி இதோ எழுதிவிட்டேன், கடைசிக் கண்ணீர்த் துளியின் துணைகொண்டு! உன்னை விரட்டும் தந்தைக்கும், அழுது தடுக்கும் அன்னைக்கும் காட்டிவிடு. இனி எந்தத் தொடர்பும் கொள்ளமாட்டேன், கடந்த கால நிகழ்ச்சி கள் என் மனதின் பேயாட்டம் என்ற கருத்தில்! இனி என் வாழ்க்கை யாத்திரை, உன் நல் வாழ்வைக் கருதித்தான்! என்னை மறந்துவிடு, மன்னித்துவிடு, பத்மா! ஆனால் நீ மட்டும் என்னை விட்டுப் போகவில்லை என்பதை உணர்ந்து கொள்!

அன்புள்ள,

சுந்தர்.

2

அவளுக்கு அவள்

வஞ்சக நகர்,

.....

அன்புத் தோழி லீலா,

மடல் கண்டேன். கடல் அலைகளைப்போல எண்ணங்கள் புரண்டோடுவதைப் பார்த்தேன். சின்னஞ் சிறு வயதில் என் தாய் ஒரு கதை சொல்வாள் — பெரிய அலை காதலனும், அதை விரட்டி வருகிற சிறிய அலை காதலியாம்! ஒரு அரச குடும்பத்திலே நடந்த துயர சம்பவம்தான் அவைகள் ஒன்றை யொன்று விரட்டிக் கொண்டிருப்பதற்குக் காரணமாம்..... இப்படிச் சொல்வாள் வாயில் வந்தபடி யெல்லாம்! அப்படித் தாண்டி லீலா, உனது எண்ணங்கள் ஒன்றை யொன்று எட்டிப் பிடிக்க முயற்சிசெய்து முடியாமல் தவிக்கின்றன.

உனது தமக்கை பத்மாவின் திருமணம் வெகு சிறப்பாக நடந்திருக்கும் என்றே எண்ணுகின்றேன். பத்மாவை நான் நேரில் பார்த்திராவிட்டாலும் உன்னைக்கொண்டே அவளை உருவகம் செய்துவிட்டேன். அவள் அன்புச் சித்திரமாகத்தானிருப்பாள்.....இது என் நிடமுடிவு — என் வாழ்த்துத் தந்தி கிடைத்திருக்குமே! உன் அக்காள் படித்திருப்பாள் என்றே எண்ணுகிறேன். "பத்மா—பார்த்திபன் மண மக்களுக்கு —ஜோடிப் புருக்களே. இன்பவானில் பறந்திடுக....." என்று தமிழிலேயே எழுதியிருந்த தந்தி வாக்கியத்தைப் படித்ததுமே சிரித்திருப்பாளே..... என்ன லீலா, உன் தோழி 'படுசுட்டி'ப் பெண்போல இருக்கிறாள்.....என்று கோபமும் குறுஞ்சிரிப்பும் கலந்து தொனிக்கப் பேசியிருப்பாளே!

உனது அக்காளுக்கு வாய்த்த அத்தான் பார்த்திபன் எப்படியடி இருக்கிறார்... ஆள் 'வாட்டசாட்டமாக' 'ஆஜானு பாகுவாய்...' சிரித்துவிடாதே, லீலா, முழுவதும் சொல்லிவிடு கிறேன் பிறகு விழுந்து விழுந்து சிரிக்கலாம்! 'கண்டவுடன் ஆசைகொள்ளும் மீசையுள்ள ஆம்பூலேயா' அவர்? அல்லது 'தேள் வால் போல மீசையும், சந்தனப் பொட்டும், 'தளாக்கு' தலையும்' கொண்ட அழகு மன்மத பூபதியா? வாத்து நடை யழகும், வண்ணன் சால் போல வயிறும், பனங்காய்த் தலையும், நரிப் பற்களும்... அப்படியா? அல்லது 'கோட்டு, சூட்டுமாட்டி, கோணக் காலுக்கு பூட்டுப் போட்டு, குருட்டுக் கண்ணுக்கு கண் ணுடியைப் போட்டு, முகத்திற்கு 'ஸ்னே வாஷிங்' கொடுத்து, 'குட்டிக்கோரா கோட்டிங்' தீட்டி, காலரை நீட்டிவிட்டுக்கிட்டு புகையும் சிகரட்டை கையிலே பிடித்துக்கிட்டு, வருகிற நவநாக ரீக மைனரா.... இந்த சென்சரி யூத்தா.... லீலா, எப்படி யிருக் கிறாரடி உங்கள் அத்தான்? லீலா, அதைச் சொல்லிவிடு முத லில்! அவர் வக்கீல் வேலைக்குப் படித்திருக்கிறார் என்று சொன் னாயே... அந்த வேலைக்குத் தகுந்த 'வாய்' இருக்கிறதா.... உன் னைக் கண்டால் கேலியாலே மடக்கி, கிண்டலாலே திருப்பி, வம் படிப்பதிலே இழுத்து, 'கலாட்டா' செய்கிறாரா? அல்லது வாய் செத்த ஜீவன் தானே!

லீலா, உனது அத்தானும், அக்காளும் முதன் முதல் சந்தித்தபொழுது என்ன பேசிக்கொண்டார்களாம்.... கேட் டாயா நீ, அல்லது அவளாகவாவது உன்னிடம் சொன்னாளா? மறைக்காமல் என்னிடம் சொல்லிவிட வேண்டும்.

உனது தாயும் தந்தையும் இந்தத் திருமணத்தைக் கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருப்பார்கள்.... பெண்ணைப் பெற்றவர்களுக்கல்லவா தெரியும், அந்தப் பொறுப்பு மாற்றும் திருநாளில் உள்ள மகத்துவம்! உனக்கும், எனக்கும் என்ன தெரியும்... ஒரு பெண்ணைப் பெற்று வளர்த்து அவளைத் தக்க தோரிடத்தில் 'தள்ளிவிடத்' தவிக்கும் தந்தையின் உள்ளத்தில் ஒவ்வொரு நாளும் நடக்கிற போராட்டம்... தாயின் மனதிலே ஓடிடும் சஞ்சல ஆற்றின் வேகம்.... அனுபவந்தானடி அதன் உண்மையை நமக்கு உள்ளபடிச் சொல்லும்!

நான்தான் திருமணத்தை நேரில் காணும் பாக்கியம் பெற வில்லை. திருமணத்திற்கு யார் யார் வந்திருந்தார்கள்? என் னென்ன பேசினார்கள்? திருமண வீடு ஒரு வானொலி நிலையம் போல.... அங்கே கிராம நிகழ்ச்சி உண்டு, கதா காலக்ஷேபம்

இருக்கும், செய்திகள் பகுதிக்கும் விலக்கில்லை, இன்னும் பல வகை அங்கே இடம் பெறும்! இவைகளை இரசிக்க உனக்கு நேரமிருந்ததா? பம்பரம் போலச் சுற்றிவந்து விருந்தினர்களை உபசரிப்பதிலேதான் கழிந்து போயிருக்கும்.

லீலா, இனிமேல் தான் உனது மடலுக்குள் நேரடியாக நுழையப் போகிறேன். நான் கேட்டிருக்கிற கேள்விகளுக்கு விளக்கமான, விரிவான விடைகளைத் தாங்கியிருக்கும் அந்த மடல் என்று பிரித்தேன்... படித்தேன்... பிரமித்துவிட்டேன்! பத்திரிகை நிலையத்திற்கு அனுப்ப எழுதிய கதையை எனக்குத் தவறியனுப்பிவிட்டாயோ என்று கூட முதலில் சந்தேகித்தேன். பிறகு உண்மையிலேயே எனக்கு எழுதியதுதான் என்று புரிந்து கொண்டேன். மீண்டும் மீண்டும், திருவித்திருவி, நிதானித்து நிதானித்துப் படித்தேன். மனம் புழுங்கினேன்.

திருமணத்திலே என்னடி சிறப்பு.... திருமணம் என்றால் தான் என்ன.... இப்படித் தொடங்கி என்னைப் பெரிய சிந்தனைச் சுழலில் சிக்கவிட்டு விட்டாய். அகண்ட விரிகாவிரி போல நீண்ட பெரிய பந்தலும், அதில் வெளிச்சம் போடும் விதவிதமான வர்ண விளக்குகளும், காதைச் செவிடாக்கும் இரட்டை முடி இருளப்ப சகோதரர்களின் நாதசுவரமும், தவுல் தன கோபாலின் 'டும், டும்' முழக்கமும், வாசல் அலங்காரமும், வகைவகையான பண்டங்களின் குவியல்களும், சுவையான விருந்தும், சுற்றத்தாரின் கூட்டமும், நண்பர்களின் வருகையும்..... மட்டும் போதுமா, ஒரு திருமணத்தின் முழு உருவை உண்டாக்க?..... கேட்டிருக்கிறாய் கேள்வி வடிவிலே! ஆம், லீலா, ஏதோ ஒரு குறையிருக்கத்தான் செய்கிறது. அது என்ன வென்று சராசரி அறிவு படைத்த சாத்தனும் குப்பனுங்கூடச் சொல்லிவிடுவார்கள். திருமணத்தின் முக்கிய உயிர்ப் பகுதி வேறொன்று இருக்கிறது. தமிழ் நாட்டு உணவில் அரிசி தலைமை வகிக்கிறது—பிற கனி வகைகள் இருபத்தியொன்று எண்ணி வைத்திருந்தாலும்! அரிசி உணவு படைக்கப்படவில்லையானால் இலை சோபிதமிழந்து விடுகிறது. விருந்தின் பூரணத்துவத்தில் குறை வந்து விடுகிறது. அதுபோலத்தான் திருமணம். அங்கு தலைமை வகிக்கவேண்டிய நிகழ்ச்சி என்ன? அதுதான் இன்று தாயகத்திலே தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. மணந்து கொள்ளும் இரு இளம் இதயங்களின் ஒற்றுமை—உவகை—திர்மானம்!

லீலா, உலகத்தில் காதலும், கடமையும் போட்டியிட்டு ஒன்றையொன்று அடித்துக்கொண்டு சாகின்றன என்கிறாய். உண்மையாக இருக்கலாம்—உன் அக்காள் பத்மாவின் அனு

பவத்திலே! ஆனால் என் அனுபவம் வேறொரு உண்மையை அல்லவா சொல்கிறது. இருக்கட்டும். உன் வாக்கையடிப் படையாக வைத்தே ஆராய்ச்சி செய்வோம். காதலும் கடமை யும் பத்மாவின் வாழ்விலே எப்படிப் புகுந்து என்ன பெரிய புரட்சியை, தலைகீழ் மாற்றத்தைச் செய்து விட்டன? பத்மா சுந்தரைக் காதலித்தாள். பெற்றோர்கள் பார்த்திபனை மணக்கச் சொன்னார்கள். காதல் வெற்றியடைய வேண்டுமானால் பத்மா சுந்தரை மணந்திருக்க வேண்டும். கடமைக்கு அதிக அளவு மதிப்பளிப்பதானால் பார்த்திபனைத்தான் மணக்க வேண்டும். பத்மா கடமைக்கு அடிமையாகி, காதலுக்குப் பணியவில்லை. இப்படியிருக்கிறது உன் கடிதத்திலே நடமிடும் சோகந்ததும்பும் காதல் கதையின் முற்பகுதி! என்னால் இதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

பெற்றோரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கடமை யிலே தலைமையானது! ஆனால் தனது இதயத்தின் அடிவாரத் திலிருந்து எழும் உணர்ச்சியைத் தட்டிக் கழிப்பது கடமை வழுவல் மட்டுமல்லவே, துரோகம், சொல்லப்போனால் இது வரை எவனும் செய்யாத—ஜூடாசும், தேவதத்தனும் செய் ததை விடப் பன்மடங்கு அதிகமான துரோகம் என்பேன். இந்த மணக்கோலத்தைவிட, பிணக்கோலம் ஏற்றிருந்தால்கூட உன் வார்த்தைப்படி பாராட்டி விடலாம்.

கடமை யென்பது ஒரு வர்ணக் கோடிட்ட பந்து. அதிலே எந்த நிறக் கோட்டையும் முதலாவதாக வைத்து எண்ணலாம். கடமை என்பதன் பட்டியலில் இடம் பெறும் ஆணைகளில் எதை யெதை எங்கெங்கு நிறுத்தி வைப்பது என்று யார், எப்பொழுது, எப்படிச் சொல்லி யிருக்கிறார்கள்? என்னிடம் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றிருக்கிறது. தாய்க்கு கண் நோய்; அதற்கு மருந்து வாங்குவதா? தந்தைக்கு உடுத்திக்கொள்ள வேட்டி யில்லை; அதைப் பெறலாமா அந்தப் பணத்திற்கு? மனைவிக்கு முக அலங்காரம் செய்ய 'குட்டிக் கோரா' பவுடர் இல்லை; அதற்காகச் செலவிடலாமா? குழந்தைக்குக் 'கிரைப் வாட்டர்' வாங்கித் தரலாமா? பள்ளியிலே படிக்கும் தம்பிக்குச் சம்பளம் கட்டலாமா? அல்லது வீட்டு வரிக்கு எட்டுமுறை நடந்துவிட்டு எரிந்துவிழும் 'பில் கலெக்டர்' பிரமநாயகத்திற்கு கொடுத்தழ லாமா? இப்பொழுது சொல்லடியம்மா, கடமையிலே எதை முந்த விடுவது என்று..... கடமை யென்பது ஏட்டிலே எழுதி விட்டதைப் படித்துவிட்டு அதன் படி நடப்பது என்றால் இயற்கை விதியை நாம் மீறுகிறோம் என்று அர்த்தம்.

கடமை, காலமும், இடமும் மூன் றின்று நடத்துவிக்கும் ஒரு மனித அசைவு..... சம்பவக் கூத்து..... நிகழ்ச்சி நாடகம்! பத்மா அழும் தாயின் கண்ணீரினால் மட்டும் விதிமுறைப் புத்த கத்தை எழுதிவிட்டாள். உரக்கப் பேசிடும் தந்தையின் வார்த் தைகளைக் கொண்டே நிரப்பிவிட்டாள். ஆனால் தேம்பும் அவள் காதலன் சுந்தர் என்ன ஆவது? பத்மா சிந்திக்கவில்லை. பார்த்திபனை மணந்தது கடமையின் கட்டளையானால், சுந்தரைத் தவிக்கவிட்டதும் கடமைதானே? அப்படியானால் ஒரு கடமையை நிறைவேற்றிவிட்டு, இன்னொரு கடமையைக் கைநழுவவிட லாமா? கடமைகளிலே பல வகைகள் உண்டா? பணக்கார நடராசா ஆலயத்தில் தினமும் ஆறுகால பூசை, நறு நெய் வழிந் தோடும் சர்க்கரைப்பொங்கலும், ஜாலியான தேன்குழலும், வாய் மணக்கும் ஆனையடி வடையும் படையல்—ஏழைப் பிள்ளையா ருக்கு நினைத்துக்கொண்டால் கால்படி கடலை சுண்டல்..... இது போலத்தானே கடமையிலே ஒன்றுக்கு அதிக மதிப்பு, பிறி தொன்றிற்கு உதாசீனம்! ஒரு கடமை நிறைவேற்றம் இன் னொரு கடமைக்கு எப்படித் தடை கல்லாக அமையலாம்? சுந்தரை ஏக்கப்படுகுழியில் தள்ளியது நெஞ்சறிந்து நம்பிக்கைத் துரோகமல்லவா? நினைத்துப் பார், லீலா உன் அக்காள் செய் தது சரியா?

ஆண்களிலே துரோகிகள் ஏராளம் உண்டு; இருக்கிறார்கள் சாகாமல்! ஆனால் பத்மாக்கள் இருக்கக் கூடாது என்பது என் அபிப்பிராயம்-தெளிவான முடிவு. பெண் கூண்டுக்கிளி என்பது எனக்குத் தெரியும் அவளுக்கு இருக்கிற சங்கடமான சூழ் நிலை எனக்குப் புதிதல்ல—ஏனெனில் நானும் ஒரு பெண்தானே! பத்மா ஆரம்பத்திலேயே சுந்தருக்குத் தெளிவற்ற ஒரு நம்பிக்கை வளர சந்தர்ப்பங்களைச் சமைத்துக் கொடுத்திருக்கக் கூடாது. அது தவறு. பெண் புத்தி பின் புத்தி..... என்று சில பித்த லாட்டக்காரர்கள் சொல்வார்களே, அதற்கு இலக்கியம்போல ஏன் நடந்துகொண்டாள்? கடமை அப்பொழுது எங்கு படுத் துறங்கியது? வளரும் நம்பிக்கை படர்ந்து வரும் தீபோல! சிறிதாக இருக்கும் பொழுதே அவித்து விட்டிருந்தால் எம். எப். எஸ். மோட்டார்கள் வந்தும் பலன் காணுத கையறு நிலை ஏற்பட்டிருக்காதே! சுந்தருக்குச் சோகம், பத்மாவுக்குப் பதட்டம், பார்த்திபனுக்கு அரைகுறை ஒத்துழைப்பு..... ஏன் இந்த பின்னக் கணக்கு?

கடைசியாக சுந்தர் எழுதினதாகச்சொல்கிறுயே ஒரு மடல், அவன் ஆவித்துடிப்பை எடுத்துச் சொல்ல வந்து ஏமாந்துபோன

காகிதத் தூது—அதனை நீயும் படித்திருக்கலாம். உன் தாய் படித்தவுடன் என்ன சொன்னாள்? தந்தையாரிடம் உன் தமக்கை வாதாடினாளா? பயந்துகொண்டு இருந்துவிட்டாள். இப்பொழுது மட்டும் துணிந்து சொல்கிறாள் கடமைக்குத் தலை வணங்கிவிட்டேன் என்று! பத்மா மன்றாடியிருந்தால் உன் தாய் ஒருநாளும் சுந்தருக்கு.....' என் மகள் செய்யாத தவறுக்கு தண்டனை அனுபவிக்க எங்களால் சகித்துக்கொண்டிருக்க முடியாது, அவள் விரும்பாத நிலையில் வீண் தொல்லைகளை ஏற்படுத்துவது முறையன்றி, சரியில்லை.....'என்று செய்தியனுப்புவாளா? சுந்தர் செய்த தவறு என்ன? பிறகு ஏன் பத்மா இந்த மாபெரும் துரோகம் செய்துவிட்டாள்?

இந்த நிலைமையில் காதல் கடமையென்று பேசுவது தவறு. இளைஞர்களுக்கு, பருவக் கூடாரத்தின் நுழைவு வழியிலே நிற்கும் 'பக்குவக்' குமரர் குமரிகளுக்குக் காதல் கடமையாகிறது. அந்தக் கடமையைச் சுட்டுச் சாம்பலாக்குவதற்குப் பெயர் கடமையல்ல, கட்டுப்பாடு! கடமையும், கட்டுப்பாடும். பத்மா சுந்தர் வாழ்க்கையிலே புகுந்து கடமை அடிபணிய, கட்டுப்பாடு முடி சூடிக்கொண்டது!

இவ்வளவு பேசிய நான் இன்று பத்மாவின் முடிவைப் பாராட்டுகிறேன். அவள் நடந்துகொண்டது சரியென்றுகூட வாதாடுவேன் லீலா, நாம் பிரிந்து பல நாள்களாகிவிட்டன. நினைப்பிலே சந்திக்கிறோம், நேரில் அல்ல! நேரில் சந்தித்திருந்தால் மூன்று திங்களுக்கு முன்னால் என்னைக் காரியுமிழ்ந்திருப்பாய். எனக்கு வயிற்றிலே பிள்ளையடி..... ஆனால் கழுத்திலே தாலியில்லை! சுந்தர் நிலையிலே நான் இருந்தேன், இருக்கிறேனடி நான். ஒரு சோதா'வை வீரனென்று எண்ணி சோரம் போய்விட்டேன். கேளடி என் சோகக் கதையை, கற்றுத் தெளிவாய் அது தாங்கிவரும் நீதிகளை, பிறருக்கு எடுத்துரைப்பாய் நீ காணும் போதனைகளை!

தினகரன் என்றால் திருச்சியில் அறியாதவர் யாரும் இருக்க முடியாது. ஆனால் அவனது பெயர் யாருக்கும் தெரியாது சிலர் 'சுயபுராணம்' என்பார்கள். சிலர் 'அல்டாப்' என்பார்கள். சிலர் 'பிட் நோட்டீஸ்' என்பார்கள். சிலர் 'ஓசு மகராசா' என்பார்கள். சிலர் 'ஹம்பக்' என்பார்கள். சிலர் 'வெத்து வேட்டு' என்பார்கள். சிலர் 'எல். ஸி எம்.', ஜி. ஸி. எம்.' என்று சொல்வார்கள். இப்படி ஆளுக்கொரு அழகு பெயர், ஆசைத் திருநாமம் வைத்து அழைப்பார்கள்.

தினகரன் — 'தெரியாத்தனமாய்' அவன் பெற்றோர்கள் வைத்துவிட்ட இடுகுறிப் பெயர். மற்றவையோ அவன் உழைத்துப் பெற்ற பட்டப் பெயர்கள்!

சில 'பேமாலங்கள்'ப் பார்த்திருக்கலாம் உலகில். எதைச் சொன்னாலும் தனக்குத் தொடர்புடையதாகக் காட்டிக் கொள்வதிலே ஒரு பெருமை, எவரைப்பற்றிப் பேசினாலும், அவர் ஆளும் மந்திரியானாலும், அடிமை வேலைசெய்யும் அன்னக்காவடியானாலும் தனக்குத் தெரிந்தவர் என்று பேசிக்கொள்வதாலே ஒரு இலாபம். எந்தச் சிறு நிகழ்ச்சியானாலும், அதனைத் தானிருந்து தலைமை வகித்து நடத்தித்தந்ததாக, கேட்டவர்கள் அறிந்தவர்களானாலும் அறியாதவர்களானாலும், பொய் பேசுவதினாலே ஒரு மதிப்பு, அடிப்படையில்லாத கௌரவம் வேண்டிகிற்கும் பிரகிருதிகள் உண்டு. இந்தக் கூட்டத்திற்கு தினகரன் எடுப்பில்லாத எதேச்சாதிகாரி! அந்தப் போலி உலக பூபதிகள் போட்டியிலே அவனைத் தவிர வேறு யாராலும் வெற்றியடைய முடியாது. இது உண்மை! மெய்யான வார்த்தை சொன்னேன், அறியவும்.....!

தேசிய வாதிகள் சிலர் கூடியிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள், அங்கு தினகரன் வந்துவிட்டால் அவன் அவிழ்த்துவிடும் 'அவுட்டா அஸ்திரம்' உப்புக் காய்ச்சும் போராட்டம், சீமைத் துணி மறியல், தபால் நிலையத்தில் நடந்த 'இலங்கை அனுமார்' நிகழ்ச்சி..... இப்படிப் பலவற்றிலும், அண்ட பிண்ட சராசரங்களையெல்லாம் துளைத்துக்கொண்டு போய்விடும் கேட்பவரில் சிலர் முகங்களில் ஈயாடாது. சிலர் வாயைப் பிளந்தபடியே கேட்பர். சிலர் சிரிப்பர். சிலர் முகங் கடுகடுத்துப் பார்ப்பர். அவன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தவுடன் ஒரே கைதட்டலும் கேலியும் கிண்டலும் அவனைத் துரத்திவரும். தினகரன் இதைக் கண்டா திணறிவிடுவான்? பகுத்தறிவு வாதிகளாக இருந்தால் அவன் இந்தி எதிர்ப்பு, விதவைகளுக்கு வாழ்வளிக்கும் போர், புரோகித மறுப்பு, சேரி வாழ்வோர் செம்மையடைய அறப் போராட்டம்..... இவைகளிலே அவன் தலைமை வகித்து நடத்தியதாகக் கொஞ்சமும் நெஞ்சில் பயமோ, பதட்டமோ இன்றிக் கூறுவான். கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள்..... என்ற பழமொழி அவனுக்குத் தெரியாததல்லவே!

ஊரிலே தேசியத் தலைவர் வந்தாலும் அங்கிருப்பான் தன் மானத் தோழர்கள் வந்தாலும் அவர்களோடு சுற்றுவான். இந்த 'டக்புக்' ஆசாமியிடம் தானடி சிக்கிக் கொண்டேன். இன்று தப்பிக்கொண்டேன். ஆனாலும் அந்த துயரத் தொடர்ச்

சித்திரக் காட்சிகளை என்னால் மறக்க முடியவில்லை. இந்தக் குணாளனைச் சந்தித்ததும், காதல் கொண்டதும், மோகத் திரு விளையாடல் புரிந்ததும்... பெரிய கதையடியம்மா... அம்மாடி... அதை நினைக்கும்பொழுதே பெருமூச்சு வருகிறதடி, லீலா.

சொல்கிறேன், சுருக்கமாக, ஆனால் விளக்கமாக! அதுவும், நீ தந்த உன் தமக்கையின் காதல் முறிவுச் செய்தியோடு ஒப் பிட்டு, ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டி!

அப்பொழுது நான் சிதம்பரத்தையடுத்த, கொள்ளிட ஆற்றங்கரையிலே அழகாக அமைந்திருந்த சிற்றூர், பெயர் சொல்லட்டுமா, லீலா உனக்கு என் ஊரும் பெயரும்..... அங்கு நான் ஆசிரியையாக இருந்தேன். உயர்நிலைப்பள்ளியை விட்டு ஆசிரியப் பயிற்சியை முடித்தவுடன் கிடைத்த முதலிடம் அது தான். அங்கு குடியேறினேன். லீலா, நீ என் தாயைப் பார்த்திருக்கிறாயே, சொர்ணம்மாள்..... வெளுத்ததெல்லாம் பால் என நம்பிவிடும் சுத்த 'வெகுளி'..... சிடுசிடுவென சில சமயங்களில் பேசிவிடுவாள். அவ்வளவுதான். வஞ்சனை அவ ளுக்குத் தெரியாத வார்த்தை. சூது அவள் செய்தறியாத செய்கை. சூதுவாதறியாத பேதை என்று எழுதத் தெரிந்த வர்கள் பெண்களைப்பற்றிக் குறிப்பிடுகிற பொழுதெல்லாம் வழக்கமா 'வாந்தி' எடுத்து விடுவார்களே, அதை என் தாய்க்கு முழுக்க முழுக்கப் பொருத்திக் காட்டலாம். மனிதன் குழந் தைப் பருவத்திலே தன் வாழ்க்கைப் பாட்டையிலே, தனது ஆயுள் யாத்திரையைத் தொடங்கி, முடிவிலும் குழந்தையாகவே தன் கடைசி மூச்சை விடுகிறான். உலகம் உருண்டையென் பதற்கு உதாரணம் சொல்லும் நில நூல் ஆசிரியர் பந்தைச் சுற்றி வருகிற எறும்பைத் துணைக்கிழுப்பார். அதாவது தொடங்கிய இடத்திற்கே கடைசியில் வந்து சேர்கிறதாம். அதுபோலவே மனிதனும் உலகத்தைச் சுற்றி ஆரம்பப் புள்ளியை வந்தடைய முடிகிறது, ஆகவே உலகு உருண்டை என்பார்கள். அது போலவே மனிதன் குழந்தை யாகிறான் அவனது வாழ்வின் அந்திப் பொழுதில்! நான்கு கால்களிலே வாழ்வைத் தொடங்கி மூன்று கால்களிலே முடிக்கிறான். என் தந்தை சரவண முதலியார் ஒரு குழந்தை. இந்தக் குடும்பத் திற்கு ஒரு பெண் நான். அவர்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டியவள் நான்..... இது உனக்கு அரைகுறையாகத் தெரியுமல்லவா?

ஒருநாள் எனக்கொரு ஆசை..... அந்தப் பைத்தியக்கார ஆசை என் வாழ்க்கைப் புத்தகத்தில் ஒரு பயங்கர அத்தியா

யத்தை எழுதிவிட்டது. அப்படி யொன்றும் நான் பக்திமிக்க புனிதவதி—காரைக்காலம்மையார் பரம்பரை இல்லை. ஏனோ, திருச்சி தெப்ப உற்சவம் பார்க்கவேண்டும் என்று விரும்பினேன். நான் பெண், பிறப்பில்—ஆனால் செயலில் குடும்ப நடவடிக்கைகளில் நான் ஆண்தானே! ஆகவே எனது பெற்றோர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டேன்.

திருச்சியில் ஆண்டவ தரிசனம் நடந்து விட்டது. இரவு வெகு நேரம்வரை உற்சவம் பார்த்தோம். எங்கள் மனம் திருப்தியைத் தழுவி மகிழ்கிறவரை கண்டுகளித்தோம்.

நள்ளிரவு வந்தது.....

அந்தப் பொல்லாத இருட்டு....திருட்டுக் குணம் படைத்த கும்மிருட்டு .... வந்துவிட்டது!

எங்காவது படுத்துறங்கவேண்டும். இரவைக் கழித்து மறு நாள் புறப்பட வேண்டும். எங்கே தங்குவது?..... திருச்சியில் யாரைத் தெரியும்?..... வீதி வீதியாகச் சுற்றிக் கொண்டிருந்தோம் எனக்குக் கலைந்த கனவைப்போல ஒரு பள்ளித் தோழியின் நினைவு..... பார்வதி யென்பது அவள் பெயர்..... அந்தப் பெயரைக்கொண்டே அவளிருக்கும் இடத்தைக் கண்டு பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமா... குடைக் கடையிலே மறந்து வைத்துவிட்டு வந்த குடையைத் தேடுவதுபோல! இப்படி நினைத்துக்கொண்டே நடந்துகொண்டிருந்தேன். என் பெற்றோர்கள் நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி கொஞ்சம் தொலைவில் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வீட்டுத் திண்ணையில் நாலைந்து வாலிபர்கள் உட்கார்ந்து ஏதோ 'அரட்டை' அடித்துக்கொண்டிருந்தார்கள்.

"ஐயா....." என்றேன், அவர்கள் அருகில் சென்று.

திடுக்கிட்டுத் திரும்பினர். அந்தக் கூட்டத்திலே ஒருவர் தான் நான் முன்னர் குறிப்பிட்ட ஸ்ரீமான் சுயபுராணம் எனும் தினகரன். அந்த 'மேதாவி'யைப் பார்த்தேன். எனக்கு அவன் ஒரு உயரிய சிந்தனை படைத்த ஓழுக்கசீலன் என்று பட்டது. அப்பொழுது அவனைப்பற்றி முழுக்க அறிந்திருந்தால் இந்த இழிகதை நடந்திருக்க விட்டிருக்க மாட்டேன். அவன்தான் தட்டுத்தடங்கலில்லாமல் என்னோடு பேசத்தொடங்கிவிட்டான்.

"என்னம்மா வேண்டும்....." என்றான்.

"இந்தத் திண்ணையில் இரவு படுத்துறங்கலாமா....." என்றேன் கொஞ்சம் கூச்சம், கொஞ்சம் அச்சம் தொனிக்க!

"ஆகா, தாராளமாக....." என்றான். அதற்குள் என் பெற்றோர்கள் என்னை வந்தடைந்துவிட்டார்கள். அவர்களைப் பார்த்ததும் அவன் முகத்திலே விகாரம் குடியேறிவிட்டது. சிரிப்பால் திரை கட்டி மறைத்தான்.

"இருந்தாலும்... இங்கு வெளியில் படுப்பது அவ்வளவு நன்றாக இருக்காது. என்னோடு வாருங்கள், தக்க இடந்தருகிறேன்." என்றான்.

"சரி ... ." என்று இழுத்தேன்.

இரு வாலிபர்கள் புறப்பட்டார்கள். ஒரு இருண்ட வீட்டைத் திறந்தார்கள். இருட்டில் தடவியெடுத்து ஒரு விளக்கை எடுத்துக் கொளுத்தினார்கள். ஒருவன் போய்விட்டான். தானுகவா, அல்லது அன்பர் அல்டாப் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியா என்று எனக்குத் தெரியவில்லை இன்று வரை!

'இது என் வீடு...' என்று தொடங்கினான் பேச்சை அல்டாப் தினகரன். அதுவும் அந்த ஓசு மகராசாவின் பித்தலாட்டம் என்பதைப் பின்னல் புரிந்துகொண்டேன்.

பிறகு என்னைப்பற்றி விசாரித்தான். என் குடும்ப நிலவரங்களை அனுதாபத்தோடு கேட்பதாக நடித்தான். இடையிடையே என் பெற்றோர்களோடு பேசி, அவர்களிடம் 'சபாஷ், நல்ல பிள்ளை' என்ற பெயரைப் பெற்றுவிட்டான். ஒரு மணி நேர உரையாடலில் என்றால், அவன் எவ்வளவு திறமைசாலி, 'குல்லாய் போடலில்' என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

அவனது பக்குவப்பட்ட மூளை காட்டிய, மூளை வகுத்துக் கொடுத்த இடத்தில் படுத்துக்கொண்டோம். என் மனம் அடிக்கடிச் சொல்லிக்கொண்டிருந்ததைப் போலவே நள்ளிரவில் நடந்துவிட்டது!

என்னைத் தொட்டான்... லீலா, பிறகு நடந்ததை நீயே புரிந்துகொள். நீ புத்திசாலி!

விடிந்தது..... அவன் எச்சில்படுத்திக் கொடுத்த காபியைப் பருகுவதிலேகூட ஒரு தனியின்பம் இருப்பதாகக் கருதினேன்— ஏமாற்றப்படப் போகிற சித்தத்தின் நிலை தவறிய சிங்காரி

தானே நான்! பிறகு தினகரன் எதையெதையோ கூறி என்னை வண்டியேற்றிவிட்டான்.

பிறகு... ....

என்னையும் தினகரனையும் இணைத்து வைத்து மகிழ்ச்சி யூட்டிய பெருமை தபால்கார தம்புசெட்டி என்ற அந்த கிழ நாய்க்கருக்குத்தான்! தினமும் தினகரனின் மடல்களைக்கொண்டு வந்து தருவார். அவர் 'கருணை' கிடைக்கவில்லை யென்றால் அன்று என் கண்கள் குளங்கள்! கடிதம் வரவில்லையென்றால் தினகரன்மீது கூடக் கோபம் வராது. தம்புசெட்டி மீது ஆத்திரம் ஆத்திரமாக வரும் அந்தக் கிழவர் பலே வேடிக்கைக்காரர். இல்லை யென்பதே அவர் பழக்கம் இல்லை. கடிதம் இருக்கிறதா என்று கேட்டால் உடனே பதில் சொல்லுவார். 'நிறைய இருக்கின்றன.....' என்பார் சிரித்துக்கொண்டே! 'அப்படியானால் கொடுங்களேன்...' என்று ஆவலோடு விழிவிழால் 'உங்களுக்கு வரவில்லையே!' என்பார். சுத்த வம்புக்கார மனிதர்! அவர் கடிதங்கள் மட்டும் எனக்குக் கொடுப்பதோடு மட்டுமல்ல, எனக்கு அறிவுரைகளும் அடிக்கடி வழங்குவார்.

நான் அடிக்கடி 'வாரும் கண்ணுளா.....' என்று அன்பு ஆணையிட்டுக் கொண்டே இருந்தேன் கடிதம் மூலம், ஆனால் தினகரன் வருவதாக இல்லை. எனக்கு அப்பொழுதே சந்தேகம் தோன்றிட ஆரம்பித்தது.

ஆனால் ... ...

திடீர் விஜயம்.... ஆம், தினகரன், மதராஸ் கதம்ப மணம் கம்மென்று வீச, ஒரு பையும், பெட்டியுமுடன் வந்தான். வந்தே விட்டான்! என் சாதாரண குரலிலே 'கோகிலகானம்' வந்து குந்திக்கிடந்தது ... ... என் கால்கள் 'லலிதா, பத்மினி'யாகி விட்டன. ஓடோடி வரவேற்றேன். உபகார மொழிகள் ஆயிரம் சொல்லி அவனைத் திணறடித்தேன். என் தாயும் ஆர்வத்தோடு வரவேற்பு மடல் படித்தாள். என் தந்தையுடன் அவனே பேசத் தொடங்கிவிட்டான்.

இரண்டு நாட்களிலே என் மனசின் இன்பக் கோட்டை யிலே அவன் புகுந்து சூறையாடினான், அதுவும் என் அனுமதி யோடு, ஒத்துழைப்போடு!.....இன்னும் இரண்டு வாரங்களில் திருமண ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு வருகிறேன் என்று கூறிப் போனான். போனவன்தான்! அதன் பிறகு அவன் திரும்பவில்லை!

'தலைமை வகித்து நடத்த அந்தப் பக்கத்து தருமலிங்கம்... சொற்பொழிவாற்ற சரவணன், சுசீலன் மோதிரம் செய்ய என் கழுத்தில் இருக்கிற தங்கத் தொங்கலிலிருந்து பொன் எடுத்துக் கொண்டால் போதும்... ஆர்ப்பாட்டம் வேண்டியதில்லை .... உன் உறவினர்களுக்கு வேண்டுமானால் சொல்லிக்கொள், எனக்குத் தேவையில்லை...' இப்படிப் பேசிச் சென்ற அந்த 'ஹம்பக்' தினகரன் திரும்பி வரவேயில்லை!

நான் கடிதங்களை ஆயுதங்களாக மாற்றி, அஞ்சல் நிலையத்தைப் போர்க் கூடாரமாகப் பயன்படுத்தி வந்தேன். அவன் விடையெழுதுவதையும் குறைத்துக் கொண்டான். பிறகு நிறுத்திக் கொள்ளவும் தயங்கவில்லை.

'என் வயிற்றிலே உன் குழந்தையடா.....அட பழிகாரா.... ஒரு பெண்ணின் வாழ்வைப் பாழ் செய்து விட்டாயே! நான் எப்படியோ ஒழிந்து போகிறேன். என் அலட்சண உருவம் உனக்கு இன்றுவது தெரிந்ததே...அந்த அளவிற்குத் திருப்தி... உனக்கும் எனக்குமிருந்த தொடர்பை இன்றோடு நிறுத்திக் கொள்வதே நல்லது. இனி என் கடிதங்கள் உன்னிடம் ஏன் இருக்க வேண்டும். அவைகளைத் திருப்பியனுப்பிவிடு. அபோல் நீ எனக்கு எழுதித் தள்ளிய மடல்களைத் திருப்பியனுப்பி விடுகிறேன்.....ஆனால் உன் துரோகத்திற்கு ஏற்ற பாடம் ஒருநாள் கிடைக்கும்...' இப்படி எழுதினேன் என் கடைசிக் கடிதத்தில்! என் 'மகராசன்' அதற்கும் விடையெழுதவில்லை.

நான் ஆசிரியையாக இருந்த பள்ளியிலிருந்த ஒரு ஆசிரியர், கேசவன் என்ற அந்த உத்தம புத்திரனிடம் இதையெல்லாம் சொல்லியழுதேன். அவர் மணமானவர். அவரது மனைவி மரகதம் தங்கமான குணம் படைத்தவள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை....வாடாமல்லி அந்தக் குழந்தையின் பெயர்! வாடாமல்லிகை எப்பொதும் என் இடுப்பிலேதான் குடியிருப்பாள். அவர் என்னைத் தன் சொந்த சகோதரி போலவே கருதி நடந்து வந்தார். அவர் எனக்காக திருச்சிக்கு மாற்றிக்கொண்டு போனார். என் கதாநாயகன் ஸ்ரீமான் 'சுயபுராணம்' அவர்களைப் பற்றி முழு விவரங்களைத் திரட்டி வருவதாக உறுதி கூறிச் சென்றார். அப்படியே அவனது படாடோபங்களை அலசி அலசிப் புரிந்து கொண்டார். அந்த 'பிட்நோட்டீஸ்' அவருக்கும் நண்பராகி விட்டானும்.

அவர் அவனைப்பற்றிப் பேசியபொழுது என் கண்கள் ஒளிக் கதிர்களை வீசின...

வானத்திலே பார்...அடிவானம் செக்கச்சிவந்து அழகுக்கு அழகு தீட்டுகிறது. லீலா, அதுதான் உன்னத இலட்சியம்! பத்மாவுக்கு வாய்த்த சுந்தர் போன்ற உண்மையான இலட்சிய வாதிக் காதலர்கள் அந்த முடிவிடத்தை நோக்கி ஓடுகிறார்கள்—யாத்திரை போகிறார்கள். அவர்கள் அதை அடைகிறார்களோ, இல்லையோ, அதுவேறு பிரச்சினை! அவர்கள் தங்கள் இலக்கை மாற்றிக்கொள்வதே இல்லை. என்னை ஏமாற்றினானே தினகரன் என்று பெயர் படைத்த திருவாரூர் தீவட்டி' இலட்சிய மில்லாத வாழ்க்கைப் பாதையில் ஓடுகிறான். தெருவில் நாய் களைப் போல குறியில்லாமல் கண்டவரைப்பார்த்துக் குலைத்துக் கொண்டு இங்கும் அங்கும் ஓட்டம் போடுவார்கள். அவர் களுக்கு அடிவானத்தைப்பற்றிய எண்ணம் இருப்பதில்லை. அதன் இலட்சிய செந்நிறத் தோற்றத்தைக்கண்டு இரசிப்ப தில்லை. யாத்திரை போகவேண்டும் ஆனால் போகுமிடத்தைப் பற்றிக் கவலையில்லை.

உலகத்தில் காதல், கடமை என்ற இரண்டும் பெரிய புரட்சி செய்கின்றன என்று எழுதிவிட்டாய் லீலா....உண்மை. ஆனால் கடமையும், கட்டுப்பாடும் எப்படி 'பாரதப்போர்' செய்கின்றன என்று கூறிவிட்டேன்.

இதற்கெல்லாம்.....

உலகில் இரண்டு வகை மனிதர்கள் வாழ்கிறார்கள். இலட்சிய வாதிகள் ஒரு கூட்டம். காரிய வாதிகள் என்று மற்றொரு வகையினர்! உலகில் உன் அக்காள் பத்மாவின் மாஜிக் காதலனை சுந்தரமும் வாழ்கிறான். அல்டாப் தினகரனும் இருக்கிறான். அதுகூட விசித்திரமில்லை. சுந்தரத்தை விடத் தன்னை உலகு மதிக்கவேண்டும் என்று புலி வேஷம் போடுகிறான், நரி உடல் மறைத்து! முடியுமா? முடிந்தால் தான் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்?

இலட்சிய அடிவானத்திற்கு அப்பால்தான் பெருமை, புகழ், பாராட்டு.....எல்லாம் இருக்கின்றன. இலட்சியப் பாதையை விட்டு விட்டு புகழையும், பெருமையையும் அடைய முயற்சி செய்கிறார்கள். சந்தர்ப்பங்களை நண்பர்களாக்கிக் கொள்கிறார் கள். சாகசங்களால் பிறரை ஏமாற்றிப் பெரிய மனிதராகப் பெரும் முயற்சி செய்கிறார்கள். காரியவாதிகளுக்கு இதயத் தூய்மையிருப்பதில்லை. சந்தர்ப்பவாதத்தால் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள்.

சுந்தர் — தினகரன் ... ... ஒட்டிக்கொள்ள முடியாத இரண்டு தத்துவ உருவங்கள்! மலையொன்று, மடுவொன்று; எரிமலையொன்று, சமவெளியொன்று! இலட்சியமும், அலட்சியமும் ஒட்டி வாழ முடியுமா?

கேசவன் சொன்ன பயங்கர உண்மைகளைக் கேட்டால் திடுக்கிட்டுவிடுவாய், லீலா. என்னைத் தினகரன் வலை வீசிப் பிடித்த பிறகு, பணத்திற்காக ஒரு பெண்ணை 'விலை பேசி' விட்டான். இன்னொரு பெண்ணுக்குப் 'பொருத்தம்' பார்த்தானும். இன்னொரு பெண்ணைடு 'இந்திர லீலா' போடத் திட்டமிட்டானும். இன்னும் இருட்டறை உலகில் எத்தனையோ.... யார் கண்டார்கள்? வெளியிலே அவன் பேசுவதைப் பார்த்தால், அவன் போடுகிற 'பெரிய மனித' வேடத்தைக்கண்டால் ... ... நீ மிரண்டுதான் விடுவாய்.

மலைபோல வந்து பனிபோலப் போய்விடும் என்று சொல்வார்களே, அதுபோலத்தான் என் துன்பமும் போய்விட்டது! என் வயிற்றிலே எழுந்த சிசு, தானே இயற்கை வசமாகச் சிதைந்து என் மானத்தைக் காப்பாற்றியது.

லீலா, அந்த மனிதவிலங்கை மட்டந்தட்ட ஏதாவது திட்டமிருந்தால் சொல்லேன்..... என் மனதிலே ஒரு 'பிளான்' வகுத்திருக்கிறேன். உடன் பிறவா சகோதரர் கேசவனும் ஒப்புதல் தந்துள்ளார்.

அவன் எழுதிய கடிதங்கள் இன்னமும் என்னிடந்தானிருக்கின்றன. நான் எழுதிய கடிதங்களையெல்லாம் அவன் எரித்து விட்டானும்! இருக்கட்டும். அவன் கடிதங்களை அவன் சேர்ந்துள்ள, ஏதோ பெயர் சொல்லுகிறார்களே, மக்கள் மன்றம் என்ற கட்சித் தலைவருக்கு அனுப்பி அவனது திருட்டுத்தனத்திற்குத் தக்க தண்டனைதர வேண்டலாம் என்பது என் முடிவு. எனக்கு இனி தினகரன் வேண்டியதில்லை. அவனுக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்தால் போதும்.

அந்தி வந்தவுடன் அடிவானம் சிவக்கிறது. மனத்திண்மை பிறந்தவுடன் இலட்சியபுரி தெரிகிறது. கதிரவன் அதிலே மூழ்கி மறைகிறான் அதுபோல நம் சுயநலம், படாடோபம், 'அல்டாப்' 'ஹம்பக்' பித்தலாட்டம், வஞ்சனை, சூது, சூழ்ச்சி, பதவிப்பித்து, தான்தோன்றித் தறிதலியாட்டம்..... எல்லாம் மறைந்துவிடும். மறையவேண்டும்!

சில பகுத்தறிவு வாதிகளைப் பார்க்கிறேன். சில சமூக ஊழியர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களைச் சந்திக்கிறேன். அவர்கள் தாங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி ஒரு கடமை யென்றும் கருதுவதில்லை, தொண்டு என்றும் மதிப்பதில்லை. அதனைத் தொழிலாகவும், 'ரெகுலர் பிசினஸ்' என்று நினைத்தே நடக்கிறார்கள். அவர்கள் எப்படி அடிவான யாத்திரையில் கலந்துகொள்ள முடியும்! அத்தகையோர், இடையிலே பிய்த்துக் கொண்டோடி விடுகின்றனர்.

லீலா, என் அனுபவத்தில் கண்ட உண்மை, பெற்றோர்கள் முயன்று மணம் முடிப்பதில் தவறில்லை யென்பதுதான். ஆனால் நீ வாதாடலாம், தினகரன் மட்டுமில்லை, உலகில் சுந்தரும் இருக்கிறான் என்று. சுடு பாலைச் சுவைத்த பூனை "பாலை பிஷ் கரியுங்கள்" என்று கட்சி கட்டினால் அதனை ஒப்புக்கொள்ள முடியுமா என்று கேட்பாய். உண்மை. ஏமாற்றத்தின் விளை வாக உளறுகிறேன் என்று மட்டும் மட்டமாக மதிப்பிட்டு விடாதே. என் முடிவிலும் உண்மை ஓரளவு இருக்கத்தான் செய்கிறது.

காதலும் கடமையும் மட்டும் உலகத்தை இன்று ஆளவில்லை. எத்துவாளித்தனமும், ஏமாளித்தனமும் உலகத்தில் நின்று நிலவுகின்றன. ஏய்த்துப் பிழைப்பவனும், ஏமாந்துபோகிற வனும் உண்டு. எத்தன் இருக்கிறான்; ஆகவே ஏமாளியும் வாழ்கிறான்! ஏமாறுபவர் இருப்பதால்தானே ஏமாற்றுபவன் வாழ்கிறான் என்று 'பஞ்சதந்திர' பசப்பு மொழியை வீசி என்னை அடக்கிவிடாதே. ஏமாளியை, எத்தன் வளர்க்கிறான், பெருக்குகிறான். இதைமட்டும் மறந்துவிடாதே.

அதுவும் பெண்கள் ஏமாளிகளாகவே வாழ்கிறார்கள். ஆண் கள் எத்தர்களாக இருக்கிறார்கள்.

இதற்கு சாட்சிகள்.....?

இதோ நான், அதோ மிஸ்டர் 'எல். ஸி. எம்.' 'ஜி. ஸி. எம்.'— அதாவது பெரிய காரியங்களை மிகச் சிறியது என்று பேசி, மிகச் சிறிய நிகழ்ச்சிகளை மிகப் பெரியது என்று பிரச்சாரம் செய்திடும் தன்மையாளர் — என் மாஜிக் காதலர் தினகரன்!

ஆகவேதான் பத்மாவின் கடைசி முடிவு சரியென்றும் ஏற்றுக்கொள்கிறேன், ஆயிரம் மறுப்புகள் ஆரம்பத்தில் எழுப் பினாலும்! சுந்தரின் முடிவு என்ன என்று மட்டும் எண்ணிப்

பார்த்தால் வருத்தம் வந்து என்னைச் சூழ்கிறது. துக்கம் என் தொண்டையை அடைக்கிறது. அந்த அனுபவம் எனக்கிருக்கிற காரணத்தால்! அவரைப் பார்த்து ஒரு முறை பேசவேண்டும் போலிருக்கிறது. சமயம் வாய்த்தால் நிச்சயங் கண்டு பேசுவேன்.

இதுவரை உன் தமக்கை கதையையும், வழுக்கி விழுந்து ஆனால் இன்று எழுந்து நிற்கும் என் நிலைமையையும் பற்றி பேசிப் பொழுதைக் கழித்துவிட்டேன். மன்னித்துக்கொள். துயரம், மடைதிறந்த வாய்க்காலைப் போல!

லீலா, இனி என்ன செய்வதாக முடிவு செய்திருக்கிறாய்? கல்லூரியில் 'இண்டர் மீடியட்' முடித்து விட்டாய் என்று நினைக்கிறேன். என்னைப் போல 'வாத்தியாரம்மா' ஆகப் போகிறாயா? அல்லது இன்னும் படித்து 'டாக்டரம்மா' ஆகலாம் என்பது உன் எதிர்காலத் திட்டமா? அல்லது அக்காவைப் போலத் தங்கையும் யாரையாவது மணந்து வெறும் 'அம்மாவாக' உத்தேசமா? லீலா, எனக்கு இதுபற்றி எழுத மறந்து விடாதே!

லீலா, அடிவானம் என்ற வாழ்க்கைக் கோட்டிற்கு அப்பாலும், இப்பாலும் ஆண்களும் பெண்களும் நிற்கிறார்கள். மிகத் தொலைவிலிருந்து பார்க்கிறார்கள் ஒருவரை யொருவர்! யாரோ ஒருவரைக் குறிப்பிட்டுவிட்டுக் கண்களை மூடிக்கொண்டு வெகு வேகமாக ஓடி வருகிறார்கள் ஆண்கள், பெண்களை நோக்கியும்; பெண்கள், ஆண்களை நோக்கியும்! இடையில் தடுமாறி விழுகிறார்கள் சிலர்—சிலர் பாதை மாறுகிறார்கள். சிலர் போக்கை மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் .... ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணை, ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஆணைத் தவறுமல் பற்றிக்கொள்கிறார்கள் ஒரு இடத்தில்! இப்பொழுது தான் அவர்கள் கண்களைத் திறந்து பார்க்கிறார்கள். தாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டவராகவோ, குறிப்பிட்டவளாகவோ பெரும் பாலும் இருப்பதில்லை. ஆனால் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகிறார்கள். அந்த இடத்திற்குப் பெயர்தான் திருமணம் என்று பெயர். இதுதான் இன்று நாட்டில் நடைபெறும் திட்டமாக இருக்கிறது என்று பத்மாவிடம் சொல். அவள் காதலன் சுந்தரத்தைத் தன் இதயத் துடிப்புகளை அடக்கிக்கொண்டு, இன்முகத்துடன் எதிர்காலத்தை நோக்கி நடக்கச்சொல். மணந்த பார்த்திபனை விரும்ப அவள் மனதைத் திடப்படுத்திக் கொள்ளச் செய்! மாங்கனியை நாடிச் சென்று வாழைப் பழம் கிடைத்தாலும் அதனைக் கொண்டு மனதைத் திருப்திப்படுத்திக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.

வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் நான் கசங்கிய மலர்—உன்னைப் போல மலராத மொக்கல்ல! அப்படித்தான் நான் நினைத்துள்ளேன்.

இனி என் வாழ்வில் திருமணம் என்பதற்கு இடம் இல்லை. என் அடிவான யாத்திரை எங்கு முடிவடையும் என்று தெரியாது. அதையடைய ஒரு மார்க்கம் கண்டுபிடித்திருக்கிறேன். அதுதான் இளம் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் இந்த அறத் தொண்டு—ஆசிரியை வேலை. சரிதானே, லீலா?

உன் தோழி,

மங்கை

3
அம்மாவுக்கு மகள்

ஏக்க நகர்

.....

அன்புள்ள அம்மா,

வணக்கம் கணக்கில,

தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை. 'பித்துக்குளி ராசாக்கள்' கோயிலோடு தாயை ஒப்பிட்டார்களே! கோயிலிலே என்னம்மா இருக்கிறது... சிலை இருக்கிறது, பேசாது, ஆடாது! அதற்குமுன் திரை விட்டிருக்கிறான் தரகன். தாயைப் பார்க்கத் தவிக்கும் பிள்ளைகளில் சிலரை உள்ளே அனுமதிக்கிறான். சிலருக்கு அனுமதி கிடைப்பதில்லை. கொட்டு முழக்கம், அதிர் வேட்டு, வாணவேடிக்கை, தேர், திருவிழா, ஆடம்பர ஆட்டங்கள், பாட்டங்கள், கும்மாளம், கூத்து, கொண்டாட்டம்..... எல்லாம் உண்டு சிலைக்கு. ஆனால், அந்த ஆண்டவன் பெற்ற

பிள்ளைகளுக்குச் சோறில்லை உண்ண உடையில்லை, உடுக்க, இட மில்லை தங்க! இந்த விசித்திர விளையாட்டுக் களமான கோயி லுடன் தாயை ஏன் ஒப்பிட்டார்கள்?

குழந்தையழப் பொறுக்க மாட்டாள். தன் குழந்தைக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுத் தான் இல்லாமல் வாடு வாள். அதனால் பெருமையடைவாள். பிள்ளைகளிடம் பிச்சை கேட்டுத் தான் மகராணியாக ஆசைப்படமாட்டாள், கோயிலிலே இருக்கும் கல்லுத் தாயைப்போல! தாயன்பிற்குக் குறுக்கே தர கில்லை, தகிடுதத்தம் எதுவுமில்லை!

தாய் தெய்வம்.....

அவளுடன் வாழ்வது கோயிலில் கால்வலிக்க வலம் வந்து வரம் வாங்கும் பக்தி மார்க்க வாழ்க்கை.

இருந்தாலும் அம்மா, என்னைப் பொறுத்தமட்டில் தாய் ஒரு தவறைச்செய்ய என்னை வற்புறுத்திய சர்வாதிகாரியாகத் தோன்றுகிறாள். என்தாயும் தெய்வந்தான்...ஆனால் காளி, திரிசூலி, மாரி, காட்டேரி என்ற மட்டரகம் போலவே நினைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு விரட்டப்பட்டு விட்டேன். அம்மா, நீ என் மன அமைதியைக் கெடுத்துவிட்டாய். உன் அன்புத் தொல்லையால் நான் சஞ்சலத்தை, சலனமிழந்த பாலைவனத் துன்பத்தை மணந்துகொண்டேன்.

அன்புத் தாயே, நான் இழந்தது சுந்தரையல்ல, சுகத்தை! அடைந்தது பார்த்திபனையல்ல, பூர்த்தி செய்ய முடியாத சோகத் தை!.....இத்தனைக்கும் காரணம் என் தாய் என்கிறபொழுது நான் அழுகிறேன். அழுதுகொண்டேயிருக்கிறேன்.

ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன... ... ...

என் வாழ்க்கையில் துளியும் இன்பம் இல்லை. நிம்மதியில்லை. நான் என் கணவரை ஏமாற்றுகிறேன். அவர் என்னை ஏமாற்று கிறார். இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்கிறோம். பாம்பைக் கண்டு மனிதன் பயப்படுகிறான். மனிதனைக்கண்டு பாம்பு அஞ்சியோடுகிறது! பாம்பால் மனிதனைக் கொல்ல முடி யும். மனிதனாலும் பாம்பை அடித்துச் சாகச் செய்ய இயலும். அப்படித்தான் அம்மா, எங்கே என் மனதிலே ஊஞ்சலாட்டம் போடும் எண்ணங்களை அவர் கண்டு விடுகிறாரோ என்று அவ ரைக் கண்டு அஞ்சுகிறேன். அவரும் அதுபோலவே என்னைக் கண்டு பயப்படுகிறார். நினைத்தால் இருவரும் மோதிக்கொண்டு

வாழ்க்கையைச் சுக்கு நூறாக்கிக் கொள்ள முடியும்! செய்ய வில்லை. எங்கள் படிப்பு எங்களைக் காப்பாற்றுகிறது.

'என்ன பத்மா, புதிர் போடுகிறாய் விபரத்தைக் கூறுமல்...' என்று கேட்பாய். 'நான் அங்கு வரும்பொழுது இருவரும் எவ் வளவு குதூகலமாய் இருக்கிறீர்கள்..... இப்படி விடுகதை போடு கிறாயே?' என்று கடிந்துகொள்வாய்.....ஆம், அம்மா! இது ஒரு இரசியம். யாரிடமும் சொல்லிக் கொள்வதில்லை. போக வேண்டிய ரயில் வண்டியைத் தவற விட்டுவிட்டு, வேறொரு கட்டை வண்டி யில் பிராயணம் செய்கிற நான் பழைய புகைவண்டிக் கதையைப் பேசிப் பயன் என்ன?

பத்மாவும் பார்த்திபனும் கணவனும் மனைவியுமாக ஆக்கப் பட்டு விட்டார்கள். அதற்காகத்தானே ஒற்றைக்கால் தவமிருந் தாய், அம்மா! ஊராரின் கண்களில் நாங்கள் காதல் சிட்டுகள்... உங்கள் முன்னால் இணைபிரியா இளந் தம்பதிகள்! ஆனால் உண்மையில் அப்படியில்லையம்மா.....

மணமாகி முதன் முதல் சந்தித்த பொழுது அவர் என்னைப் பார்க்கக்கூட விரும்பவில்லை. பேசினார் பிறகு, வேறு வழி யில்லையே என்ற காரணத்தால்! நானும் தான் திக்குமுக்காடி னேன். பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆகவே எங்கள் இயந்திர வாழ்க்கையைத் தொடங்கினோம். திருமணம் 'உடல் விழா' என்று நாங்கள் மணந்துகொண்டோம்? மணம் என்றால், மனங்கள் தழுவல் என்றால், நாங்கள் இன்னும் மணமக்களாக மாறவில்லை யென்றுதான் சொல்வேன்.

ஆம், அம்மா ..... அவர் ஏதோ எனக்குத் தெரியாமல் ஒரு சஞ்சலத்தை அனுபவிக்கிறார். எனக்குப் புரியவில்லை. அந்தத் துயரம் என்னிடம் சொல்லக் கூடாதது மட்டுமல்ல, என் கண் பார்வைக்கும், கருத்துத் தேடலுக்கும் எட்டாத இடத்தில் நடந்தது, நடக்கிறது என்பது மட்டும் எனக்குத் தெரிகிறது.

இங்கு நான்கு உறுப்பினர்கள் ஒரு குடும்பத்திற்கு. தம்பதி கள் இருவர், வீட்டு வேலைகளைக் கவனிக்க ஒரு இளம் பெண் பொன்னி, இவரது வயதான தந்தை அன்பானந்தர் ..... ஒவ்வொருவரும் வெவ்வேறு நாட்டங்களில் வரவேண்டிய கதா நாயக, நாயகிகள்! ஆனால் இங்கு ஒரு நாடகத்தில் முக்கிய பாத்திரங்கள் நால்வரும் சேர்ந்து கொண்டோம்.

பார்த்திபன் வழக்கறிஞர் .... ஊரிலே மிகக் கெட்டிக்காரர் பட்டம் — ஆனால் தந்தைக்கு முன்னால் பெட்டிப் பாம்புதான். அந்த அடக்கத்தை நான் பாராட்டுகிறேன். அது அவரை ஒரு சமூகக் கோழையாக்குகிற அளவு போகக் கூடாது என்பது தான் என் ஆசை. தந்தை சொற் கேளாமல் தறிதலையாக, 'தடிமாடாக'த் திரிய வேண்டும் என்று சொல்கிறேன்! இல்லை.... அடக்கம் வேண்டும். அடிமையாகக் கூடாது! என் மாமனார் அப்படியொன்றும் 'தப்புத்தண்டாவாக' நடக்கும்படித் தன் பிள்ளையை ஏவிவிடமாட்டார். அவர் நல்லவர். அன்பாகப் பேசுவார். குடும்பக் காரியங்களை, தான் குடு குடு கிழமானாலும் தவக்கமின்றி தடுமாற்றமின்றி முடிப்பதில் கெட்டிக்காரர். அவர் 'ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர்' அல்லவா?

பொன்னி சின்னஞ் சிறு வயதில் அவ்வீட்டிற்கு வந்தவள். அந்த வீட்டில் பெண் குழந்தையில்லாத குறையை அவள் நிறைவு செய்துகொண்டிருந்தாள் அவள் அந்திய சாதியைச் சேர்ந்த அனைதை யென்றாலும் அன்பாக நடத்தப்பட்டாள். என் மாமி இறக்கும்பொழுது பொன்னிக்கு எல்லா ஆதரவும் காட்டவேண்டும் என்று என் 'அவரிடம்' உறுதி வாங்கிக் கொண்டு இறந்தார்களாம். அதனால்தான் அவள் வீட்டு இராணி யாக நான் வந்தும் இன்னமும் இருக்கிறாள். அவள் என்னிடம் ஒரு சகோதரியைப் போலவே நடந்துகொள்கிறாள். பொன்னி யிடம் எனக்கு அளவுகடந்த அன்பு—அவளுக்குப் பத்மா என்றால் உயிர்!

அவர் திங்களுக்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பா திக்கிறார். அழகான 'பாண்டியாக்' இருக்கிறது.

இருந்தும்..... பெருமூச்சு விடுகிறேன்!

ஏன்?

சுகம்..... சோகம்!

இரண்டும் வெவ்வேறு திசைநோக்கிச் செல்கின்றன. மனித சாதி சுகத்தை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டே யிருக் கிறது. சுகம் எங்கே? அதோ இயற்கை விரித்திருக்கும் நீலப் படுதாவின் விளிம்பிலே மறைந்து கிடக்கிறது. தொடு வானத் தின் அடியிலே சுகம் பதுக்கப்பட்டிருக்கிறது. அடிவானத்தை மனிதன் அடைந்ததே இல்லை யென்கிறார்களே, அப்படியானால் சுகத்தை மனிதன் இதுவரை எட்டிப் பிடித்ததே இல்லையா?.... 'ஏழைக்கு ஏது இன்பம் ....' என்கிறார்களே, சுகம் பெற

பணம் வேண்டுமா? பதவியிருந்தால் சுகத்தை எட்டிப் பிடித்து விடலாமா? வானம் பூமியைத் தொடுவதுபோல ஒரு பிரமை யென்கிறார்கள்... ... அப்படியானால் சுகம் உலகில் இல்லையா?

சுகம் ஒரு சுந்தரமான சொல்..... அது குறிப்பிடும் நிலைமை பணத்தால் வருவதில்லை, பதவியால் பெறுவதும் இல்லை.

மனிதப் பயிர் ஒவ்வொன்றும் சுகம் என்ற கதிரைவிட ஆசைப்படுகின்றது என்பது மட்டும் என்னவோ உண்மை! அந்தக் கதிர் கிடைக்காமல் பல இடையூறுகள் உண்டாகின்றன..... இருப்பினும் சுகம் தூரிர்க்கிறது, கருகிவிடுகிறது. மீண்டும் தோன்றுவது போலத் தெரிகிறது, மறைகிறது!

ஆனால் சோகம் எல்லோரிடமும் குடியிருக்கிறது. வானத்தில் உள்ள நட்சத்திரங்களை எண்ணமுடிகிறதா..... அப்படித்தான் சோகம் எல்லோர் வாழ்விலும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

அம்மா, நான் பார்த்திபனின் சொத்து! ஆனால் என் பழைய காதலர் சுந்தர் இன்னமும் மணம் முடிக்காமல் திரிகிறாரே..... அந்தக் காட்சியே என் இதயத்தைக் கிழித்தெறிகிறது! என்னால் ஒரு வாலிபன் வாட்டப் பதுமையாகி விட்டாரே! அதனைச் சகிக்க முடியவில்லையே, அம்மா!

உன் கட்டளைப்படி சுந்தருக்கு மறுப்புரை வழங்கினேன். கடிதத்தில் வெறுப்பைக் கொட்டியிருந்தேன். கருத்தில் சுந்தரிடம் துளியும் வெறுப்பில்லையே. விருப்பமல்லவா குடி கொண்டிருந்தது. என் திருமணப் பத்திரிகையைப் பார்த்து என்ன நினைத்திருப்பார்? அவர் மனம் எரியும் தீயாகியிருக்காதா? அவர் எண்ணம் எரிமலையாகியிருக்காதா? திருமணக் கொண்டாட்டம் அவருக்குச் சாவுக் குறிகளையல்லவா சொல்லியிருக்கும்?

அம்மா, ஐந்தாண்டுகள் கழித்து இந்த அவலச் சுவை மிகுந்த வாழ்க்கையைச் சொல்கிறேன். மன்னித்துக் கொள்.

என் திருமணத்திற்குப் பிறகு சுந்தரை இருமுறை சந்தித்தேன்... பார்த்தேன்.... பதைத்தேன்.... திகைத்தேன்... தேம்பியழுதிருக்க வேண்டும். அந்த அளவிற்குத் 'தெம்பு' இல்லை. லீலாவைப் பார்ப்பதாகப் பொய்கூறி; அவர் நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருந்த ஊருக்குச் சென்று வந்தேன். அவரைப் பார்ப்பதிலே என் மனதிற்கு ஒரு ஆறுதல்... ஆனால் அதே நேரத்தில் அவருக்கு என் தோற்றமே துயரத்தின் ஊற்றுக்

கண் போலும்! என்னைப் பார்க்கும்பொழுது அவர் கண்கள் தாமே இமைகளுக்குள் புகுந்து மறைந்துகொண்டு, கண்ணீரால் கதவடைப்பு செய்து கொண்டன.

முதல் தடவை அவரும் என்னுடன் வந்திருந்தார். அவரைச் சுந்தர் அறிவாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அந்தத் தடவை ஏதோ ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த பொழுது சுந்தரைப் பார்த்தேன். அவ்வளவுதான்; நூறு பாட்டுகள் பாடிடவேண்டிய அம்பிகாபதி, தவறுன எண்ணிக்கையால் மூன்னரே ஓடிவந்த அமராவதியைக்கண்டு நூருவதுபாட்டால், சிற்றின்பரசம் சொட்டச் சொட்ட அவளைப்பற்றியே பாடினானே, அப்படி என்னைப்பற்றியே இலேடையாகப் பேசி, மேடை விட்டிறங்கி விட்டார். அவர் மனதார என்னைத் திட்டினால்கூட நான் பொறுத்துக்கொள்ளத் தயாராக இருந்தேன். அதனால் அவருக்கு மன நிம்மதி கிடைக்குமானால் நான் மகிழ்ச்சியடைவேன். அவர் என்னைக்கண்டு பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஏமாந்தேன். வழக்கமான வேடிக்கை வார்த்தைகளில் அவர் தன் நண்பரிடம்...'வந்தனள், ஒரு சுந்தரித் திருமங்கை போலொரு மாது, வந்தென் இதயத்தைக்கீறி ஓடுகிருள் பாரு...' என்று கூறிக்கொண்டு சென்றது காற்றிலே கலந்து என் செவிகளை வந்தடைந்தது.

மற்றொரு முறை புகைவண்டி நிலையத்தில் திடீரென சுந்தரைப் பார்த்தேன். என் கண்கள் ஆவலால் அகலமாயின. அவர் என்னைப் பார்த்தார். பேசவில்லை. பேசினால் என்ன? ஒரு பெண் எப்படித் தானே முந்திக்கொண்டு பேசுவது? இது பெரிய இலக்கிய கர்த்தா, 'கலியுக பிர்மா'வுக்குத் தெரியாதா?... ஆனால் என்னிடம் எதைப் பேசுவார்? நான்தான் என்ன பதில் கூறுவேன்? சுந்தர் என்னைப் பார்த்தார். அவர் முகம் சுருங்கி விட்டது. அவர் கண்களிலிருந்து நீர் கசிந்தது. நிற்கவில்லை. நடந்து கொண்டேயிருந்தார். வண்டி வந்தது. நான் ஏறிக் கொண்டேன். என்னுடன் என் தோழி சுகுணாவும், அவளது சகோதரனும் வந்திருந்தனர். வண்டி நகர்ந்தது. அவர் ஒரு கோடியிலே சிலைபோல நின்றது என் கண்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

அம்மா, அவரின் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவையும் அறிந்து கொள்வதிலே நான் மன ஆறுதலைக் காண்கிறேன். சுந்தர் இன்னமும் தனியாகத்தானிருக்கிறார். அவர் இப்பொழுது மக்கள் மன்றம் என்ற அரசியல் கட்சியின் தலைவர். என்னை மறக்க அவர் கண்டுபிடித்த புதிய மார்க்கம் அது போலும்!

'எதிர்காலம்' என்ற வார இதழின் ஆசிரியர், எழுத்திலே தன் எண்ணங்களைப் புதைத்து விடுகிறார்.

நான் மட்டும் அனலிடைப் புழுவாக உயிர் வாழ்கிறேன். என் கணவர் பார்த்திபனுக்கு முழு இதயத்தை நான் தரத் தயாராக இருந்தாலும் அவர் ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையிலிருக்கிறார் போலும்! ஏன் என்று என்னைக் கேட்காதே அம்மா, உன் மருமகனையே கேள், அந்தக் கேள்வியை. அவர் சொல்ல வேண்டிய உண்மை அது. அவர் என்னை விரும்பவுமில்லை; விரும்பாமலுமில்லை. அவர் என்னை நேசிக்கிறார், ஆனால் முழுமனதோடில்லை.

என் வாழ்க்கையிலே புகுந்து கொண்டிருக்கும் சோக நாகத்தைக் கண்டுபிடித்துவிட தந்திர மோடி எடுத்து ஊதுகிறேன். புரியவில்லை. தெரிவிப்பார் யாருமில்லை.

பார்த்திபன் ஏதோ ஒரு பயங்கரச் செயலைச் செய்து வருகிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. சிறிது சிறிதாக எனக்கும் புலப்படலாயிற்று. ஆனால் இன்னமும் என்னால் நம்பமுடியவில்லை. நம்பினால் என் துயரம் இரட்டிப்பாகும். இருந்தாலும் அவரது நடவடிக்கைகளைக் கவனித்தேன், கண்டுபிடித்து விடலாம், அவரது மறைவுக் கூத்தை என்ற நம்பிக்கையிலே!

ஒரு நாள் மாலைப்பொழுது ... அவர் நீதி மன்றத்திலிருந்து திரும்பி வரும் நேரம். நான் அப்பொழுதுதான் குளித்துக் கொண்டிருந்தேன். வெளியில் கார் வந்துநின்ற ஓசைகேட்டது. நான் அவசர அவசரமாகக் குளித்து முழுகிவிட்டு, உடுத்திக் கொண்டு அவர் இருக்கும் அறையினுள் நுழைந்தேன். என் காலடியோசைகள் கேட்டவுடனேயே ஏதோ பரபரப்பு அங்கு ஏற்பட்டிருக்க வேண்டும். என்னைக் கண்டவுடன் பொன்னி திருதிருவென விழித்தாள். அவரும் தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

"என்னை மன்னியுங்கள் ... . நீங்கள் வரும்பொழுது குளித்துக் கொண்டிருந்தேன் ... ... இன்னும் காபி சாப்பிடவில்லையே!"

"சாப்பிட்டுவிட்டேன் பத்மா, பொன்னி தந்தாள்!" என்றார் அமைதியாக!

"அவ்வளவு சோர்வோ .... ?"

"ஆம் ... "

என் கண்கள் பொல்லாதவை. அவர் மடியில் கிடந்த மல்லிகை மலர்களைப் பார்த்துவிட்டன. திரும்பினேன் அப் பொழுது தான் அறையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்த பொன்னியின் கூந்தலில் சூடிய மல்லிகைச் சரத்தையும் பார்த் தேன். என் மூளை வேலை செய்தது. என் நரம்புகளில் முறுக்கு ஏற்பட்டது. இரத்தம் கொதித்தது. அப்படி யிருக்குமா? ... அவளின் கூந்தலிலிருந்த மலர் அவர் மடிக்கு எப்படிப் போகும்? ... என் களங்கமில்லாத நெஞ்சத்தில் களங்கம் ஏற் பட்டுவிட்டது!

பிறகு ஒரு நாள் ... . பொன்னி என் மாமனரிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள், எட்டிப் பார்த்தேன். அந்தக் கிழவரின் காலடியில் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளது கண்கள் நீரைச் சொரிந்தபடி இருந்தன. அவர் தன் மேல் துண்டால் அவளது கன்னங்களில் வழிந்தோடும் நீரைத் துடைத்தார். தேம்பும் அவளுக்குத் தேறுதல் மொழிகள் கூறினர். என் காதுகளில் அவை தெளிவாக விழவில்லை.

இரண்டொரு தினங்களுக்கு முன்னல் தான் உண்மையை உணர்ந்தேன். அவள் என் கணவரின் அறையைக் கூட்டிவிட்டு வெளியில் வந்தாள். அவள் பொட்டுக் கலைந்திருந்தது. நான் உள்ளே சென்றேன். எனக்கே சிரிப்பும் வந்தது. ஆத்திரமும் பொத்துக்கொண்டு வந்தது. அவரது கன்னத்தில் குங்குமப் பொட்டிருந்தது. நான் ஒன்றும் பேசவில்லை. அவர் அருகில் சென்றேன் அவசர அவசரமாக! கன்னத்திலிருந்த பொட்டைத் துடைத்து எடுத்தேன். அவர் விழித்தார்.

என் கண்களில் குபு குபுவென நீர் வழிந்தது. என் அறைக்கு ஓடிவிட்டேன்.

அவர் வந்து வெகு நேரம் நின்றார். நான் திரும்பியும் பார்க்கவில்லை. போய்விட்டார்.

பொன்னி வந்தாள். என் தலையை வருடினாள். தேம்பும் என்னைத் தேற்ற முனைந்தாள். அவளைக் கண்டவுடன் எனக்கு அழுகை அதிகமாக வந்தது. அழுகைக்குக் காரணம் அவள் தானே! நான் அவர்கள் நாடகத்தின் முக்கிய நோக்கத்தை அன்று கண்டுபிடித்துவிடுவது என்ற முடிவில் பொன்னியிடம் மனம்விட்டுப் பேசினேன். அதனல் பலனடைந்தேன் என்று கருதுகின்றேன்.

அவளிடம் பேசிச் சேகரித்தவை .....

சுகத்தை நோக்கி, இன்பத்தை எண்ணி, மகிழ்ச்சியைக் கருதி ஓடுகிறோம். சுகத்தையடைய ஒரே பாட்டை உண்டு; அதுதான் சோகம்! துன்பத்தின் கடைசி முனை இன்பம்! அழுகையின் முடிவு மகிழ்ச்சி! ஆம், பொன்னியும் சுகத்தைத் தேடினாள். நானும் சுகத்தைத் தேடுகிறேன். இருவரும் பெண்கள். என்றாலும் அவள் ஏழை; நான் பணம் படைத்தவள்; அவள் சுகத்தை அனுபவிக்கிறாள். ஒரு குறை. திரை மறைவில்! நான் சுகத்தைத் தேடி யாத்திரை போகிறேன். கிட்டுவதுபோல் தெரிந்தும் கிட்டவில்லை. போய்க்கொண்டே யிருக்கிறேன். சுகமும் நகர்ந்துகொண்டே போகிறது. என் செய்வது!

வறுமை, வளமை என்ற இரண்டு நிலைமைகள் உண்டு. பொன்னி — அழகி, ஆனால் ஏழை! நான் — வனப்பில் அவளை விட மட்டந்தான், இருந்தாலும் பணம், பங்களா, 'பாண்டியாக்' இருக்கிறதே என்னிடம்! ஆகவேதான் எங்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள், மேடு பள்ளங்கள் இருக்கின்றன.

பணம் படைத்தும் பாதி வாழ்வு வாழ்கிறேன். அவள் ஏழை பெற்ற பெண்ணைலும் முழுவாழ்வு அனுபவிக்கிறாள் என்று தெரிந்துகொண்டேன். ஒரு பெண்ணுக்கு முழு வாழ்வு எது தெரியுமா, அம்மா? அவளுக்குப் பிடித்த மணாளன், அவன் இதயத்தில் அவள் ஒருத்திக்குமட்டுமே இதயம் ஒதுக்கியுள்ள காதலன் கிடைக்க வேண்டும். பொன்னிக்குக் கிடைத்துவிட்டதம்மா. என்னை அந்த நிலைமைக்குப் போகாமல் தடுத்துவிட்டாய் நீ. அன்பு சில சமயங்களில் எவ்வளவு பெரிய ஆபத்துக்களை உண்டாக்கிவிடுகின்றது! ஆசை கண் மூடிக்கொண்டு காரியம் செய்துவிடுகின்றது! என் கடமையுணர்ச்சி என் வாழ்வைப் பறித்துவிட்டதே.

பெற்றோர்கள் வார்த்தையைத் தட்டி நடப்பது தகாது என்று கருதினேன். அதற்காகக் காதலித்தியாகம் செய்ததாகக் கூட எண்ணினேன். அது தற்கொலை யென்னும் என்பது இப் பொழுது தெரிகிறது. என் காதலை மட்டும் இழக்கலை. என் மனிதப்பண்பு மடிந்து விட்டது. என் வாழ்வின் உயிர்ப்பகுதி ஓடி மறைந்து விட்டது. நான் வாழ்கிறேன் பிறருக்காக! ஆனால் கணத்திற்குக் கணம் செத்துக்கொண்டே யிருக்கிறேன். பெண் மலர்; அவள் மனதிற்கு ஏற்ற மணாளன் கிடைத்தால் நறுமணம் வீசும்; இன்றேல் நஞ்சு நெடியடிக்கும்! கடமை மனித நடமாட்டத்திற்கு ஒரு ஒளிவிளக்கு; அதுவே பாதை என்று எண்ணி விடக்கூடாது.

இப்பொழுது ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன். என் மனதில் சுந்தர் இன்னமும் இருப்பது போலவே, என் கணவரது இதயத்தில் பொன்னி யிருக்கிறாள். அவர்கள் சந்தித்து மகிழ்கிறார்கள், சமயங் கிடைக்கிற பொழுதெல்லாம்! நான் அவர்களுக்கு இடையூறு.....நான் இல்லாவிட்டால் இடைவிடாத இன்பம் நுகர்ந்து இறும்பூதெய்துவர். இப்பொழுதாவது உணர்ந்துகொள் தாயே, காதல் மணத்தால் எவ்வளவு அமைதியான வாழ்வு ஏற்படலாம் என்பதை! என் காதல் மணம் வெற்றி பெற்றிருந்தால் இங்கே ஒரு அறைகுறை குடும்பத்துக் காரியும் அங்கே ஒரு வானவெளியை நோக்கியே வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கழிக்கும் ஒரு வாலிபனும் இருக்க வேண்டிய தில்லை. இதுபோல ஒளிந்து ஒளிந்து காதல் காட்சிகள் நடத்த வேண்டிய அவசியம் பொன்னிக்கும், பார்த்திபனுக்கும் ஏற்பட்டிராது. எவ்வளவு சிக்கல்.....காதல் சக்கரத்தின் கன வேகச் சுழற்சி....வாழ்க்கைச் சுருவளியின் முறைகெட்ட ஆர்ப்பாட்டம்!

இது பொய்யென்று சொல்லிவிட முடியாதம்மா. பொன்னியே என்னிடம் சொல்லி விட்டாள் எல்லா உண்மைகளையும். அந்த அவசியம் அவளுக்கு வந்துவிட்டது. அவள் தாயாகப் போகிறாள். அதுவும் அவரே என்னிடம் உண்மைகளைச் சொல்லி விடச் சொன்னாராம். நான் ஆவேசங்கொண்டு ஆடவில்லை. அவளை அன்பாகத் தடவிக்கொடுத்தேன். நான் மலடி....அவள் தாய்! இனிப் பொன்னியிடத்துக்கு நான் போக வேண்டுமா? அம்மா, சிந்தித்துப்பார். மலர்க் காட்டினுள் அனுப்பி விட்டதாகத்தானே நீ நினைக்கின்றாய். இல்லை மலக் குழியில் விழுந்து கிடக்கிறேன். தீயின் மீது நடக்கிறேன். வெள்ளத்தில் மூழ்குகிறேன். வேதனை தாயே, வேதனை, தாங்க முடியாத வேதனை!

ஏழை மிக எளிதில் இன்பத்தையடைந்துவிட முடியும். இரண்டிடத்தில் வேலைசெய்து வயிற்றுக்குச் சோறும், உடலுக்கு ஒரு கிழிந்த கந்தலும் பெற்றுவிடுகிறான். பிறகு அவனுக்குக் கவலையில்லை. கண்ட இடத்தில் கையைத் தலையணையாக்கித் தனது கட்டாந்தரை பஞ்சணையில் நிம்மதியாகத் தூங்கி விடுகிறான். அவனுக்கு ஒரு மனைவியிருந்தால் அவளும் அவன் பக்கத்தில் வந்து தூங்கிவிடுகிறாள். அவர்கள் உலகத்தை அந்த அளவிற்குத்தான் மதிக்கிறார்கள். அதற்குமேல் அதற்கு கௌரவம் கொடுக்க விரும்பவில்லை. ஆனால் பணக்காரன் பகலில் கொடுத்த கடனை வாங்குவதிலும், புதிய கடன் கொடுத்து அதிகவட்டி கேட்பதிலும் காலத்தைக் கழித்துவிட்டு இரவில் இரும்புப்பெட்டியடியில் படுத்துக்கொண்டு எலியோடி

னலும், பூனை பாய்ந்தாலும் 'திருடன், திருடன் ....' என்று உளறியடித்துக்கொண்டு எழுந்திருப்பான். அவனுக்கு யார் மீதும் நம்பிக்கையிருப்பதில்லை. தன் மீதே நம்பிக்கையில்லாமல் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் பணத்தை எண்ணுவான். அவனுக்கு நிம்மதியிருப்பதில்லை. மன அமைதியுமிருப்பதில்லை. அவனுக்குச் சுகம் எப்படிக் கிடைக்கும்?... இப்படிச் சிலர் பேசுவார்கள். ஆனால் பொருளியல் புரட்சி வீரர்கள் இந்த விளக்கத்தை வடிகட்டின அயோக்கியத்தனம், பொறுக்கியெடுத்தப் பித்தலாட்டம் என்று கூறுவார்கள். ஏழை, ஏழையாகவே இருக்கவும், பணக்காரன் பணக்காரனாகப் போகவும் செய்யக் கையாளப்படும்' சூழ்ச்சி இது என்பார்கள். அது எப்படியோ போகட்டும். பொன்னி சுகம் அனுபவிக்கிறாள். நான் சோகப்படுக்கையிலே கிடந்து தவிக்கிறேன். அவள் வாடா மல்லிகை. நான் கசக்கியெறியப்பட்ட குண்டுமல்லி!

பொன்னியின் தாய் மங்களம், தான் கைக் குழந்தையுடன் அங்கு வந்த நாளிலிருந்து அவர் கடைசி மூச்சு நிற்கிறவரை அந்த வீட்டின் வேலைக்காரியாகவே இருந்தாளாம். அவள் சாகிறபொழுது பொன்னி பத்து வயதுச் சிறுமி. என் மாமி அன்னம்மாவுக்கு ஒரே ஆண் குழந்தை. பெண் குழந்தை வேண்டுமென்று தவமியற்றினாள். பிறக்கவில்லை, ஆகவே பொன்னியைத் தான் வளர்ப்பதாக ஏற்றுக் கொண்டாள். சிறு வயது முதற்கொண்டு அவரும் அவளும் சேர்ந்து விளையாடுவார்களாம் பிறகு இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து வாழ்வதில்லையென்று சத்தியம் செய்து கொண்டனராம். அன்னம்மா இறந்தவுடன் பொன்னியின் மீது அடக்குமுறை பாய்ந்ததாம். என் மாமனார் அவளது சுகத்திலேயே கைவைத்துவிட்டாராம் வீட்டுச் சமையல் வேலை அவளிடம் ஒப்படைக்கப்பட்டதாம். ஆனாலும் பார்த்திபனின் அன்பிருக்கும்பொழுது அவள் அடிமை வேலை செய்யவும் அஞ்சவில்லையாம். இந்த நிலைமையில் தானம்மா, அவரது தந்தையுடன் நம் வீட்டிற்கு வந்து பெண் கேட்டார். கொஞ்சமும் சிந்தனைக்கு வேலை கொடுக்காமல் சம்மதம் அளித்துவிட்டீர்கள். இப்பொழுது சங்கட சகடத்தில் மாட்டிக்கொண்டு தவிக்கிறேன் நான் ... .

அவர்கள் வீட்டில் ஒரு பெரிய போர் நடந்திருக்கிறது. ஆம் அவர் பிடிவாதமாகத் திருமணம் வேண்டாம் என்று மறுத்திருக்கிறார். என் மாமா எவ்வளவு கேட்டும் விடை சொல்லவே இல்லை. தக்க காரணங்கள் காட்டவில்லை. கடைசியில் பொன்னியே அந்தப் பொறுப்பை யேற்றிருக்கிறாள். பெண் அடக்கத்

தின் பிறப்பிடம், கொஞ்சம் பதட்டம் ஏற்பட்டுவிட்டால் அதன் தீவிர எல்லையும் அவளே! கிழவர் திணறிப்போய் விட்டாராம். அவரை அழைத்து பொன்னி சொல்வது உண்மைதானு என்று நேரடியாகக் கேட்டாராம். அந்தக் கோழை அப்பொழுதுதான் உண்மையை ஒப்புக்கொண்டாராம்.

"அடபாவி..... பொன்னி என் மகள் போல, அவளை எப்படியடா மணப்பது?"

"போலதானே அப்பா...." ஆத்திரத்திலும் அவர் சிரித்தார்.

"அவள் தாழ்ந்த குலம்.... நான் ஏற்க முடியாது!" கிழவர் புதிய காரணம் கண்டு பிடித்தார்.

"அவள் நம் வீட்டில் எந்தத் தாழ்ந்த நிலையிலும் இல்லையே! நம்மைப் போலவேதான் வாழ்கிறாள்."

"அதுதான் நான் செய்த தவறு... வேலை செய்ய வந்த நாயைக் கூடத்திலே குந்தவைத்ததின் கோளாறு இப்பொழுது தெரிகிறது!" கிழவர் சீறினார்.

இந்த உரையாடலை ஒளிந்திருந்து கேட்ட பொன்னி படாரெனக் கதவுகளைத் திறந்துகொண்டு அந்த அறையினுள் நுழைந்தாள். சிவனை எதிர்த்து நிற்கும் சக்தியின் சிலையைச் செய்த சிற்பிக்கு ஒரு அனுமான உருவமாக இருந்தாள் அவள்.

"என்னால் உங்கள் குடும்பத்தில் போர் வேண்டாம்..... வேலைசெய்ய வந்தவளின் மகள்தான் பொன்னி..... ஆனாலும் அவளுக்கும் இதயம் இருக்கிறது என்பதை மறக்கவேண்டாம்! நான் அவரைக் காதலித்தேன், அவரும் அப்படியே! உங்கள் சாதி யாணவம் தடுத்தால், பணவீக்கம் குறுக்கிட்டால் விருப்பம் போல் செய்யுங்கள். நான் கன்னியாகவே இருந்து என் கடைசி மூச்சுவரை என் அன்பருக்குத் தொண்டு செய்து மடிவேன்" என்று குட்டிப்பிரசங்கம் செய்துவிட்டாள் அந்தத் துடுக்குக் காரக் குட்டி.

கிழவர் திகைத்து நின்றார். பிறகு போய்விட்டார்.

அவர் விடாப்பிடியாக இருந்து எங்கள் திருமணத்தை நடத்திவைத்தார். அவரும் தந்தையின் அதட்டலுக்கும் மிரட்டலுக்கும் அடங்கி நடந்து கொண்டார். பொன்னியும் திருமணத்தில் முழுமனதுடன் ஒத்துழைத்தாள். அந்த விசித்திர நிகழ்ச்சிக்கு தக்க காரணம் இப்பொழுது தெரிகிறதா?

பழமை, புதுமை .... இரண்டு சக்திகள்.

பலர் பழமை விரும்பிகள், சிலரே புதுமையை வரவேற் கிறார்கள். என் மாமனார் பழமைக்குப் பரிந்து பேசுபவர். கட்டுக் கட்டாக திருநீற்றை அணிந்து கொண்டு தேவாரம், திருவாசகம் பாடுபவர். அருட்பா அவர் இதயத்தைத் தொடும்; அருணகிரியார் அவருக்கு அறிமுகமானவரிலே முதல்வர்; சிவன் கோவில் ஒன்று கட்டி முடித்திருக்கிறார். இரண்டு ஆலயங் களுக்கு அவர் டிரஸ்டி; ஒரு சத்திரத்து நிர்வாக உறுப்பினர். பக்திமான். பாசுரம் ஓதியே தன் பாவங்களைப் போக்கிக் கொண்டிருக்கிற ஒரு பரம பக்த சிரோன்மணி. அவர் 'நவீன' நாயன்மார்; சைவக் குரவர்களில் ஒருவராக இணைப்பதானாலும் எதிர்ப்பில்லை. அவர் எவ்வளவு புண்ணிய காரியத்தைச் செய் வார்! பழமைக்குப் பரிந்து பேசுவோர், அந்தக் காலத்தில் கேடு கள் ஏதுமில்லை; கெடுமதியாளர், சூதுமதியினர், துரோக நெஞ் சினர், வஞ்சக வாழ்வினர் யாருமே இல்லை யென்பர். காலங் கெட்டுவிட்டது என்று பெருமூச்செறிவர். ஆனால் அந்தக் காலத்துப் புராணங்கள், ஏடுகள் புகட்டும் பொல்லாங்கைப் பற்றிப் பேசமாட்டார்கள். இந்தக் காலம் கெட்டது என்று ஏன் சொல்கிறார்களோ நமக்குப் புரியவில்லை. விஞ்ஞானம் விளைத்த அத்தனை உதவிகளையும் அனுபவித்துக் கொண்டு பேசு கிறார்கள். விஞ்ஞானம் தந்த புகைவண்டியிலேறி, 'பிளஷர் காரில்' நிலையத்திற்குச் சென்று வானொலியிலே இந்தப் புதுமை எதிர்ப்பை நடத்துகிறார்கள். பழமை நெளிந்து செல்லும் நாகப் பாம்பு; அதன் விஷம் தலையாகிய ஒரு இடத்தில் மட்டுமில்லை; அது தொடுகிற இடத்திலெல்லாம் வழிந்தோடுகிறது. இதற்கு என் மாமாவே சாட்சி!

அந்த அறுபத்து நான்காவது நாயனார், சோமசுந்தரர் நடத் தியது போல அறுபத்து ஐந்தாவது திருவிளையாடல் ஒன்று நடத்தியிருக்கிறார். என்ன பயங்கரம் ... ... என் நெஞ்சு நடுங்கு கிறது! ஆனால் அதை ஒரு அப்பா, மகனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கெட்டுப்போன கலிகால விரும்பிகளான புதுமை வாதிகள் சொல்லப் பயப்படும் நிகழ்ச்சி, அதனை அந்தப் பக்திமான் செய்யச் சொல்லியிருக்கிறார்!

திருமணமாகி சில தினங்களுக்குப் பிறகு அவரை என் மாமா அழைத்தார். அவர் திட்டத்தைக் கண்டு பெண்ணுலகம் பயந்தோடும்.

"ஏண்டா, எப்பொழுதும் வாட்டமாகவே இருக்கிறாய்?...."

"இதனை நீங்கள் கேட்டுத்தானு தெரிந்துகொள்ள வேண்டும்?"

"பொன்னி.....?" என்று பெறுமூச்செறிந்தார் அந்த வயதேறிய பக்தர்.

"அவளை அடைந்துவிட்டால் இப்படி வருந்தமாட்டாயே, திருந்திவிடுவாய் அல்லவா?" என்று தொடர்ந்து கேட்டார் அவர், தன் மகனைப் பார்த்து!

"ஹ¨ம் ... ... அதை அப்பொழுதே யோசித்திருக்கவேண்டும்! அவள் அடிவானத்தில் நிற்கும் அழகு தேவதை. இனி எப்படியப்பா முடியும்?..."

"முடியும். நீ உலகை இன்னும் அறிந்து கொள்ளவில்லை!"

"எப்படி...?" என் கணவர் விழித்தார். என் மாமா ஒரு மேகவாகனம் அமைத்துக்கொடுத்துத் திரை மறைவில் திருக்கூத்து நடத்தும் துணிவையும் அளித்து அடிவானயாத்திரைக்கு அவரைத் தயாராக்கினர். எங்கே தன் மகன் சோகத்தால் மடிந்துவிடுவானோ என்ற பயத்தால் ஒரு பெண்ணை அவனுக்கு ஆசைநாயகியாக்கவும் பயப்படவில்லை. பொன்னியிடமும் இப்படியே 'சாணக்கிய' வாதங்களைப் பேசினர். என் ஒருத்திக்கு இது தெரியக்கூடாது என்பது அவர் போட்டதிட்டம். அது இப்பொழுது அம்பலமாகிவிட்டது. தந்தை மகற்காற்றும் உதவி இதுதானு? இது எந்த தர்ம சாத்திரத்தில் அடங்குமோ, நான் அறியேன். எந்த நீதி இந்தத் திட்டத்திற்கு வழி விட்டதோ... எந்த ஆண்டவன் ஒப்புதல் தந்தானோ... எனக்குத் தெரியாது!

பழமையை வெறுக்கிறவள் நான். புதிய நிலைமை எல்லாத் துறையிலும் வேண்டும் என்று வாதாடுகிறவள் நான். எனக்கே அந்த அக்கிரமத்தை நினைக்கவும் நடுங்குகிறது. ஆனால் பழமை ஏதோ தூய்மையின் குடியிருப்பிடம் போலவும், புதுமை கெட்ட நடவடிக்கைகளின் தொட்டில் போலவும், பேசுகிறார்கள்! அறுபதினாயிரம் மனைவியை மணந்ததாகக் கதையெழுதி ஆணின் அடங்காப்பிடாரித் தனத்தை அம்பலப்படுத்தியவர்கள் தானே! கணவன் விரும்பிய காரணத்தால் தாசி வீடு வரை அவனைச் சுமந்து சென்றுவிட்டு வந்ததாகக் கதையெழுதிப் பெண்ணின் வாயைப் பூட்டி ஊமைகளாய், ஆமைகளாய் ஆக்கி விட்டப் பெருந்தகைகள் தானே பழமையென்று கூவுவோர்!

பணப்படுதாவினால் எதையும் மறைத்து விடலாம் என்று எண்ணுகிறார். அது பலிக்காது.

பிறர் கண்களில் மண்ணைத் தூவியே காரியங்கள் பல செய்துவிடலாம் என்பது அவரது கனவு—அதை நினைவாக்க முடியாது.

பொன்னி சொன்ன கதை இது தானம்மா ... ...

இனி நான் என்ன செய்வது? எப்படி நடந்து கொள்வது? அவரோடு இனிப்பேசுவதா? இத்தனை திரைக்கதையும் தெரிந்து கொண்ட பிறகா? முடியாது! ஆனால் அவரிடம் எப்படியாவது இது பற்றிப் பேசிவிட வேண்டும். இதயக் குழப்பம்.....நெஞ்சிலே வழிந்தோடும் நினைவு வழுவழுப்பு..... நாவையல்லவா உள்ளுக்கிழுக்கிறது!

பெண் நினைக்கிறாள்—அதுவே தவறு என்று சொல்கிறது சமூகம். ஆனால் ஆண் தகாததைச் செய்கிறான்—சமூகம் வாய் மூடிக்கிடக்கிறது. பெண் தங்கம்..... ஆகவே சமூகக் கஞ்சன் பூட்டிப் பூட்டி வைக்கிறான். ஆண் இரும்பு—துரு ஏறிக்கிடக் கிறது கண்ட இடங்களில்! என்றாலும் அவர் செய்வது அநீதி-பாவம்! எனக்காக இல்லாவிட்டாலும் பொன்னியின் நல்வாழ் விற்காகவாவது அவரிடம் இது பற்றிப் பேசியாகவேண்டும். அந்த மாளிகையில் நான் தனியான மணிவிளக்கு. அந்த ஒளி பரவுகிற இடங்களில் அந்த இருள் எட்டிப் பார்ப்பதில்லை. ஆம், அவர் படித்து என்ன செய்வது? அவர் மதி இருண்டுதானே போய்விட்டது? சொந்த மனைவியை அருகில் வைத்துக்கொண்டு அவளுக்குத் துரோகம் இழைக்கிறாரே! கண்ணகி, கோவலனை மாறினால், கோவலனுக்கு கிடைத்தது போல ஒரு மாதவிக்குப் பதில் ஒரு மாதவன் கிடைக்கமாட்டானா? இதை என் ஆண் வர்க்கம் அடியோடு மறந்து விடுகிறது!

என்னைக் கண்டாலே அஞ்சி யோடுகிறார். கீரியைக் கண்ட நாகம் நழுவுவதைப் போல மெதுவாகச் சென்று விடுகிறார். வலிய வார்த்தைகள் கொடுத்தாலும் இரண்டொரு வார்த்தை களோடு நிறுத்திக்கொண்டு அங்கு போகவேண்டும், இங்கு இவர் வரச்சொன்னார் என்று எதையாவது சொல்லிவிட்டுக் கிளம்பிவிடுவார்.

என் மனதை அதட்டினேன், அடங்கவில்லை!

ஒரு நாள் வீங்கித் தொங்கிய என் இதயத்தைக் கரங்களால் தாங்கியபடி அவர் தனியறைக்குள் நுழைந்தேன். அவர் ஏதோ

கட்டுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டவுடன் அவைகளை மேஜையினுள் மறைத்துவிட்டார்.

"வா, பத்மா....." என்றார், வழக்கமான குரலில்.

என் கண்களில் நீர் பெருகத் தொடங்கிற்று. ஒரு பக்கமாகத் திரும்பித் துடைத்துக்கொண்டு அவர் அருகில் சென்றேன். எதிர்ப்புறங்களில் கிடந்த சோபா வொன்றில் உட்காரச் சொன்னார். ஆம், அவருக்கு முன்னால் மனைவியாக நடந்துகொள்ளவில்லை. ஒரு கட்சிக்காரியாகவே நடந்துகொண்டேன். அன்று வழக்காட வல்லவோ போயிருந்தேன். அதுவும் நான் வழக்கறிஞரின் மனைவி!

"உபசாரம் போதும்....." என்றேன் வெடுக்கென்று.

"பத்மா....." என்று நிறுத்தினார். எதையும் பேச முடியவில்லை.

"மனம் விட்டுப் பேசப் போகிறேன்....." என்றேன்.

"என் மனைவிக்கு அந்த உரிமையில்லை யென்று யாரால் சொல்ல முடியும்!" என்றார்.

"சட்டம் படித்தவர் தாங்கள்....உரிமையைப் பற்றிப் பேசுகிறீர்கள், ஆனால் பெண் நான். அந்த உரிமையைப் பறிக்க முடியும் என்பதை உணர்ந்து விட்டேன். ஆம், பொன்னி அந்த உரிமையைத் தனக்குரிமையாக்கிக் கொண்டாள்."

என் பேச்சில் கொஞ்சம் பதட்டம் இருக்கத்தான் செய்தது. இருப்பினும் குரலில் கடுமையைக் கலக்கவிடவில்லை.

"பத்மா....நம் திருமணத்திற்கு முன்னால் சுந்தரை மட்டும் சந்தித்திருந்தால் இந்தத் தொல்லைகளில் எதையுமே நீ அனுபவித்திருக்க வேண்டியதில்லை." என்று அமைதியாகப் பேசினார்.

"ஆ...சுந்தர்....." என்று கூவிவிட்டேன்.

அவருக்குச் சுந்தரைப்பற்றி எப்படித் தெரியும்? யார் சொல்லியிருப்பார்கள்?.... என்னால் இந்தத் திடீர்த் தாக்குதலைத் தாங்கமுடியவில்லை. என் நாவைத் தட்டிக் கொடுத்தேன். என் தொண்டையைத் 'தாஜா' செய்து கொண்டேன். இரத்த மழையில் சேதமடைந்திருந்த இதயத்தைக் கொஞ்சம் சரிசெய்து கொண்டேன். பேசினேன். வாதாடினேன். என்ன பேசி

னேன்.....எப்படிப் பேசினேன்.....எனக்கு இப்பொழுது அப்படியே சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவரைக் கதற அடித்துவிட்டேன் என்பதை மட்டும் உணர்ந்து கொண்டேன். அவர் என் கரங்களைப் பிடித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டார்.

"நாம் இருவரும் சேரக்கூடாத இரு முனைகள்" என்றார் அவர்.

"ஏன்.....?" என்றேன் சற்றுக் கடுமையாக.

"பத்மா. வளைந்த வானத்தின் அடியிலே நிற்கிற உன்னை நான் அடைந்ததால் கண்டபலன் திருட்டு வாழ்க்கை!"

அவர் பேசினார்!

இனிக் காலங்கடத்தி என்ன பயன்? நான் சொல்ல நினைத்ததையெல்லாம் சொல்லிவிட்டேன். அவர் குறுக்கிட்டு எதையும் சொல்லவில்லை.

படிக்காத மக்களுக்கும் படித்த மக்களுக்கும் அறிவியல் பகுதியில் வேற்றுமையிருக்கிறது என்பதைக் காட்டவேண்டும். பாமரர் செய்யும் செயல்களையே அறிவாளிகளும் செய்தால் நாடு உருப்படுமா? மாடு வயலில் புகுந்து மேய்கிறது. அதற்கு நிலம் யாருடையது என்ற சிந்தனையும் கிடையாது. பயிர் பாழாகிறதே என்ற புத்தியும் வருவதில்லை. மனிதனும் அப்படியா? பொன்னியோடு அவர் உறவாடியதில் தவறு கண்டு பிடிக்கவில்லை. அவரது மனதிற்கிசைந்த மங்கையோடு வாழ்வதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் என்னை மணந்திருக்க வேண்டிய அவசியமில்லை. என்னை என்தாய் கண்ணீரால் கறைப்படுத்தி விட்டாள். ஆனால் பலஹீனம் அத்தனையும் சேர்த்து வடித்தெடுத்த சிலைதான் பெண் என்பதை அவர் உணரவேண்டும். அவர் எல்லா உரிமைகளையும் அனுபவிக்கிற ஆண். அதட்டிய தந்தையிடம், எடுத்துக் கூறியிருக்கலாம். பொன்னியை வைப்பா'க வைத்துக்கொள்ளச் சம்மதித்த—சம்மதித்த என்ன—ஆலோசனையே வழங்கிய தந்தையார் மறுக்க மாட்டார். அவருக்கு வள்ளுவரை நினைவுறுத்தினேன். அவர் அச்சத்தைப்பற்றி அழகாகக் கூறியிருக்கிறார். எந்த இடத்தில் அச்சம், தலைகாட்டலாம், எங்கு தலைகாட்டக்கூடாது என்று விரிவாகச் சொல்லிவிட்டார் இரண்டடி குறளிலே, அஞ்சுவது அஞ்சாமை பேதமை, அஞ்சுவதஞ்சல் அறிவார் தொழில்... எவ்வளவு கருத்தடங்கிய பொன் வரிகள்! உலகில் அஞ்சி நடக்க

வேண்டிய நிகழ்ச்சிகள் என சில இருக்கின்றன. சிலவற்றிற்கு அஞ்சவேகூடாது. இந்த இரண்டு வகையை உணர்ந்து நடக்க வேண்டும். பார்த்திபன் தந்தையாரைத் திருப்திப்படுத்த ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுத்தார். தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள மற்றொரு பெண்ணின் வாழ்க்கையைச் சூதாட்டக் காயாக வைத்து விளையாடுகிறார். இதை ஒரு பெண் சம்மதிக்க முடியுமா? அவரை அடக்கம் அடக்கி விட்டது. அடக்கம் அவர் வாயை அடைத்துவிட்டது. ஆனால் அவர் முழுக்கவும் அடங்கியிருக்கவில்லை. அவரது உள் உணர்ச்சிகள் படமெடுத் தாடிவிட்டன. பொன்னியின் கன்னித்தனம் சூறையாடப்பட்டு விட்டது. என் பாதி வாழ்விலும் பழுது வந்து சேர்ந்துவிட்டது.

அவர் செய்கையை நான் கண்டிக்கவில்லை. ஆனால் அவர் முறையைச் சூறை கூறுகிறேன். மலர் பறிக்கட்டும், கொடியை அறுக்க வேண்டாம்! பொன்னியோடு வாழட்டும், ஆனால் அவளை விபசாரியாக்கியல்ல, உரிமையுள்ள மனைவியாகக் கொண்டு! அதை வற்புறுத்தினேன். வாழை பெருத்த வேரிலிருந்து புதிய முளையை உண்டாக்கும். அது போல அவரது சொந்த மனைவி யான நான் என் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு அவருக்குப் புதிய மனைவியை உண்டாக்கச் சம்மதித்தேன். அவர் அஞ்சி நின்ற பொழுது நான் விடவில்லை. அவர் அறத்தினின்று வழுவி நடக்கிற பொழுது தருமபத்தினி நான் என்ன செய்வது? என் மனதில் சரியென்று பட்டதை எடுத்துக் கூறினேன்.

என்னிடம் அவர் இனி மனைவியென்ற முறை கொண்டாடி, நெருங்கக்கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். வண்டினிடம் மலர் எதிர்ப்பு மறியல் நடத்துவதைப் போல! ஆம், அவர் அன்றுவரை வண்டாகவே நடந்து வந்திருக்கிறார். நான் வேண்டா வெறுப்பில் தேனை மொண்டு போக அனுமதித்த மலராகவே இருந்து வருகின்றேன். அந்த வியாபாரப் போக் கிற்கு ஒரு முற்றப்புள்ளியை வைத்து விட்டேன். அத்துடன் விடவில்லை. அவர் பொன்னியை முறைப்படி, சட்டப்படி மணந்து வாழவேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்துவிட் டேன். ஆம், விழிப்பு பயமாகத்தானிருந்தது. விபரீதமான போக்கிலே தன் வாழ்க்கைத் திரும்பும் என்று அவர் எதிர்பார்க்க வில்லை. அவர் இடையிடையே பேசலாம் என்று முயன்றும் முடியவில்லை.

பெண்ணுலகைப்பற்றி இந்தச் சமூகம் தவறுகக் கணக்குப் போட்டிருக்கிறது. அந்தத் தப்புக் கணக்கைத் தாறுமாறுகக் கிழித்தெறிய வேண்டும் என்பது என் ஆசை. அந்தக்கால

மனுவும், மாந்தாதாவும் போட்ட புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இன்னமும் ஏமாந்துபோகிறது. அந்தக் காலச் சமூகச் சட்ட நிபுணர்கள் கையாண்ட கணக்கு தவறும், பிழையும் மலிந்தது. அவர்களின் குறிப்பு சரியென்றே கொண்டாலும் காலம் மாறிவிட்டது. ஆகவே அந்தக் கணக்கிலும் மாற்றம் வந்துவிட்டது என்று புரிந்துகொள்ள வேண்டும். என் கணவர் படித்தவர், பட்டம் பெற்றவர். அவரே அதைப் புரிந்து கொள்ள மறுக்கிறார். என் கருத்துக்களை ஜீரணிக்க அஞ்சுகிறார். அவர் மனத்திலே அண்டிக் கிடந்த அழுக்கு எண்ணங்களுக்கு ஒரு பேதி மாத்திரையாக இருந்தது என் பேச்சு. அவரது நெஞ்சில் ஈட்டிகொண்டு குத்துவது போலவே நான் பேசினேன். எவ்வளவுதான் சீர்திருத்தக்காரியாக இருந்தாலும் ஓரளவு பொறுமையுணர்ச்சி தலைகாட்டத்தான் செய்தது. ஆனாலும் என் அறிவுத் தெளிவு என்ற சம்மட்டியால் அதை அடித்துத் தகர்த்துவிட்டேன்.

அம்மா பேசுந் தெய்வமே, உன் பிடிவாதத்தின் கடைசி அத்தியாயம் உன் மருமகனுக்கு இரண்டாந் திருமணம். உன் மகள் 'சந்நியாசம்' பூணுகிறாள்! இனி அவளுக்கு அங்கு இடமில்லை. உன்னிடமும் வர விருப்பமில்லை. ஆனால் உன் மூத்த மகள் உன்னிடம் ஒரு வரம் வேண்டுகிறாள். என் தங்கை லீலா, ஆம் அம்மா, உன் ஆசை முழுவதற்கும் பாத்திரமான சிறுமி..... அவளுடைய நல்வாழ்விலும் குறுக்கிடாதே! அவள் இராமன் என்ற கல்லூரி மாணவனை விரும்புகிறாள் அவனும் அவளை உயிரெனப் பாவிக்கிறான். அவன் கல்லூரியில் புரட்சி முரசு— ஆகவே சமூக அரசியலாரின் குறுக்கீடும், தொல்லையும் அதிகம். இருந்தும் படிக்கிறான்... அதற்கொரு காரணம்—லீலா படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதுதான்! அவனை உனக்கும் தெரியும். தந்தையார் இறப்பதற்கு முன்னாள் அவன் நம் வீட்டிற்கு இரண்டுமுறை வந்திருக்கிறான். அவர்களது காதல் வாழ்க்கையிலே சாதிப் பெயரைச் சொல்லியோ, பணத்தை அடிப்படையாகக் காட்டியோ உனது தடுப்பு வேலையைத் தொடங்கிவிடாதே. ஆம், என் வாழ்க்கையில் இரண்டாவது நல்ல காரியம் செய்யப்போகிறேன் என்றால் அது என் தங்கைக்குச் செய்யப் போகிற காதல் திருமணம்தான்... லீலா என்னிடம் எதையும் ஒளிக்காமல் சொல்லிவிட்டாள். தாயே, இந்த வரந்தர வேண்டுகிறேன்.

பிறகு, என் கணவர் பேசினார். அவர் தன் தந்தையின் வார்த்தையை மீறிக் காரியங்கள் செய்வது தகாது என்று கருதி

ராம். அது மட்டுமல்ல, அவர் வாழ்க்கையில் கொண்ட இலட்சியமும் அதுதானும்! என்ன குறிக்கோள் ..... என்ன இலட்சியம் வேண்டிக்கிடக்கிறது! அவர் தந்தையின் வார்த்தையைக் காப்பாற்றினர். ஆகவே தந்தைக்குத் தட்டி நடக்காத மகனுனர். ஆனல் மனிவிக்குகந்த மனுவனுகவில்லை! அதை அவர் உணர்ந்திருக்க வேண்டும். குறிக்கோள் உன்னதமாக இருக்கவேண்டும், அதையடையும் முறையும் உயர்வாக இருக்க வேண்டும். குறுக்கு வழிகளில் இறங்கிவிடக்கூடாது. அவர் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டார். அது உண்மைதான். ஆனல் அவர் தந்தையின் வார்த்தைகள் எதைத் எதைத் தொடரலாம், ஒட்டியிருக்கலாம் என்பதற்கு ஒருவரையறை இருக்கவேண்டும். அந்தக் காலச் சமூக முதல்வர்கள் குறிப்பிடும் கடமைகள் காட்டு மரங்களைப் போல. நாம் அவைகளை ஏற்ற உருவங்களாகச் செதுக்கியும், மழுக்கியும் மாற்றிக்கொள்ள வேண்டும். மரத்தை அப்படியே பயன்படுத்த முடியுமா? முடிந்தாலும் அது முறையாகாது. எளிதாகவும், இயற்கை விதிக்கு ஒட்டியதாகவும் இருக்காது.

சுந்தரிடம் என் இதயத்தைப் பறிகொடுத்துவிட்டேன். கட்டுப்பாட்டால் பார்த்திபனைக் கணவனுக ஏற்றேன். சுந்தருடன் திரைமறைவு நாடகம் நடத்தவில்லை. மனதை அடக்கி விட்டேன். அதை என் கணவர் செய்யவில்லை!

அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டார். நான் அவரை விட்டுப் பிரியக்கூடாது என்று கெஞ்சினர். ஏன் தெரியுமா, அவர்களின் குடும்பக் கௌரவம் குலையக்கூடாதாம்! பத்மா ஓடி விட்டாள் என்று ஊர் தூற்றுமாம். இப்படி என் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். ஊர் தூற்றுத முறையில் நான் நடந்து கொள்வதாக உறுதி சொன்னேன்.

சுந்தரைப் பற்றி அவர் முழு விபரங்களை இரண்டொரு தினங்களுக்கு முன்தான் அறிந்து கொண்டாராம். இவைகளை முன்னரே அறிந்திருந்தால் அவர் கோழையாக இருந்திருக்க மாட்டார். தந்தையோடு போராடித் தானும் பொன்னியை மணந்திருப்பாராம். அவர் முயன்று என் காதலை வெற்றிபெறச் செய்திருப்பாராம். இப்படி அவர் நடந்ததற்கும் பின்னல் கதை பேசினர். நான் அவர் பேசட்டும் என்று விட்டு விட்டு அவரது முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்து விட்டேன். அவர் தனது வாழ்க்கையில் கண்ட தோல்வியைப் பெரிதாக என்னிடம் கூறினர். ஆனல் அவர் தோல்வியடையவில்லை யென்பது என் முடிவு. ஆண் இனச் சித்தாந்தமே அதுவாக இருக்கும் பொழுது

அவரை மட்டும் நான் குறைகூறி என்ன செய்வது? அவர் ஊரில் நடக்காத பெருந் தவறைச் செய்து விடவில்லை!

இவ்வளவு பெரிய பூகம்பம் குடும்பத்தில் நடந்து விட்டது. ஆனால் அந்த ஆட்டத்தின் சிறுகுறி கூட அந்தக் கிழவருக்குத் தெரியாது. நாங்கள் இருவருமே அவருக்கு இவைகளைத் தெரிவிக்கக் கூடாது என்று முடிவு செய்து கொண்டோம். என் எதிரிலேயே அவர் பதிவுத் திருமணத்திற்கு எழுதிய மனுவில் பொன்னியை அழைத்து வந்து கையொப்பமிடச் சொன்னேன். அவள் என் காலடியில் விழுந்து 'அக்கா...என்னை மன்னித்து விடு' என்று அழுதாள். நான் அவள் அழுகையை மாற்றினேன். அவர் கூட 'பத்மா, நீ ஒரு தெய்வம்' என்றார். நான் சிரித்தேன்.

நான் எழுந்தேன்.

அவர்கள் இருவரும் என்னை வணங்கினர். நான் மறுக்கவுமில்லை. ஏற்கவுமில்லை. ஈடேறுத காதலால் இதயம் ஒடிந்து கிடக்கிற எனக்கு அவர்களை இணைத்து வைத்ததிலே ஒரு திருப்தி... மகிழ்ச்சி! அவர்களை வாழ்த்தினேன். ஒரு கிளையில் இரண்டு கனிகள்.... ஒன்று இற்று விழுந்தது! ஒரு கொடியில் இரண்டு மலர்கள்... ஒன்று வாடிவிட்டது! கூண்டு திறந்து கிடந்தது. கிளி பறந்து விட்டது. ஆம், இந்தப் பத்மா இனி விடுதலை பெற்ற வெண்புறா! சிறைக் கதவையுடைத்துக் கொண்டு வெளி வந்த பெண் சிங்கம்.... அம்மா, உன் மகளின் சுதந்திர வாழ்வு தொடங்குகிறது. உன் பிடிவாதம் தந்த நல்வாழ்வு இதுதான். ஆகவே உன் பிடிவாதம் வாழ்க!

என்னைப் பெற்றெடுத்த பெருந்தேவி, என் முடிவு இதுதான். அவரை ஊர் தூற்றக் கூடாது. ஆனாலும் என் துறவும் நிறைவேற வேண்டும். ஆம், தாயே, நான் நர்ஸ் வேலைக்குப் படிக்கப்போகிறேன். அதற்கு அவர் இசைந்து அனுப்புகிறார். அந்த மருத்துவத் தொழிலினால் என் மனப்புண் மாற மார்க்கம் உண்டு என்று திடமாக நம்புகிறேன். நான் பொது சேவையிலிறங்கிவிட்டதால் பார்த்திபனின் சொந்த வேலைகளைக் கவனிக்கவேண்டும், அதற்காக என்னுடன் இருக்கிற பொன்னியை நானே மணம் முடித்துவைக்கிறேன் — இப்படி ஊருக்கு 'வெளிச்சம்'. என் மாமனாருக்கு இதே விளம்பரம்!

ஊர் இனி பேசாது. அவரும் இன்பம் அடைவார். நானும் விடுதலை பெற்றுவிடுவேன்!

ஒரே அம்பு — கிளியின் சிறகொடிந்தது, அதன் வாயிலிருக்கும் தங்கக் கிண்ணி சேதமடையவில்லை!

பார்த்திபன் சம்மதித்துவிட்டார். என் யாத்திரை தொடங்கப்போகிறது. இனி நான் எட்டாத வான் முகட்டிலே என் வாழ்க்கை மாளிகையை அமைத்துக்கொள்வேன். ஆசாபாசங்கள் என்னை வந்து அண்டக்கூடாது. மனநெகிழ்ச்சிக்கு இனி மூற்றுப்புள்ளி போட்டாயிற்று! இனிப் பெண் — முழுப் பெண் நான்! ஆனால் பேதலிக்கும் பண்பிழந்த விசித்திரச் சித்திராங்கி! பார்த்திபனின் மகிமைமுறை மடிந்துவிட்டது. பொன்னியின் 'அக்காள்' குரலும் இனிக் கேட்காது. 'என் மகளே ....' என்ற அழைப்பும் மெல்லியதாகத்தான் என் செவிகளில் வந்து விழும். இனி நான் தாய் ... ஒரு குழந்தைக்கு என்ற குறுகிய மனப்பான்மையில் அல்ல! இந்தப் பரந்த பூமியில் வாழும் எல்லோருக்கும் தாய்! லோக மாதா! ஆம், துன்பத்தால் தாக்கப்பட்டுத் தவிப்பவருக்கெல்லாம் என் உதவியுண்டு. மனிதகுலத்தின் சுகந்தேடிச் செல்லும் யாத்திரையில் மக்களுக்கு என் தொண்டும் உண்டு. அவர்கள் பயணம் வெற்றியடைய என்னாலான உதவிகளைச்செய்வேன். என்னை மட்டும் இனி காதலும் ஆளாது, கடமை என்ற கட்டுப்பாடும் நெருங்காது. கருணை எனக்கு வழிகாட்டி. இரக்கம் என் பக்கத்துணை — பிறரின் சோகத்தை விரட்டல் என் தொண்டு, அவர்கள் காணும் சுகம் எனக்குக் கைம்மாறு!

அன்னையே, உன் மகள் எட்டாத் அடிவானத்தில் இன்று போய் நிற்கிறாள். அவள் இட்சியமும் அப்படியே! அவள் வாழ்க்கை இனியாவது அவள் எண்ணம் போல நடைபெற வேண்டும் என வாழ்த்து — தடை செய்ய நினைக்காதே. நீ தோற்றுவிடுவாய்!

அன்பு மகள்,
பத்மா.

4
அவனுக்கு அவன்

ஆர்ப்பாட்டப்பட்டி

.....

அன்புள்ள பார்த்திபன் அவர்களே,

இந்தத் தினகரனை மறந்திருக்க மாட்டீர்கள்.

இரண்டு நாள் பழக்கத்திலேயே நாம் நெருங்கியவர்களாகி விட்டோம் என்பதைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஆகவேதான் மடல் விடுகிறேன், அதுவும் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தொடுகின்றன என் வார்த்தைகள் சில இடங்களில்—சீறுதீர்கள்! அனுபவசாலியின் ஆலோசனை அவை என்று ஏற்றுக்கொள்ளுங்கள்!

அன்று தங்களிடம் 'சள, புள' வெனப் பேசினேன். தங்களைப் பலநாள் தெரிந்து பழகியவன் போலவே நடந்து கொண்டேன். நீங்கள் சற்று வெறுப்படைந்திருக்கலாம். வியப்பாகக் கூட இருந்திருக்கும். அப்படி நடிக்க வேண்டியிருக்கிறது! உலகு இன்று போலி கௌரவத்தில் பெருமதிப்பு வைத்திருக்கிறது. அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நான் தெரிந்தவன் போலப் பேசத் தொடங்கியதுமே உலகந் தெரிந்த பிள்ளையாக இருந்தால் 'உங்களைத் தெரியவில்லையே....' என்று சொல்லியிருக்கமாட்டீர்கள்! அதனால் நான் வருந்தவுமில்லை. அதனைப் பெரிதாக மதிக்கவுமில்லை. ஆயிரந் தடவை

களில் அதுவும் ஒன்று! மச்ச வியாபாரி நான். துர்நாற்றத்திற்கு அஞ்சி என்ன செய்வது?

நீங்கள் வாதாட வந்திருந்த வழக்கு விசித்திரமானது. இராமன் என்ற மைனரின் சொத்துக்குப் போட்டி... தாயத்தார்களுக்குள் தகராறு! அதை முடித்து வைக்க வந்துசேர்ந்திர்கள் தாங்கள்! இராமன் உங்களுக்கு வேண்டியவன். இல்லாவிட்டால் இந்த வழக்கிற்குத் தாங்களே வரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கமாட்டான். அவன் கொஞ்சம் முரடன்..... 'சண்டி'! ஆகவே அவன் விருப்பப்படி வழக்கிற்கு, நீங்கள் வெகு தொலைவில் வாழ்ந்தாலும், உங்களையே வரும்படி ஏற்பாடு செய்தார்கள். அவன் ஏன் உங்களையே விரும்பினன் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. பிறகு 'துப்பறியும் சாம்பு' ஆனேன்! காரணந் தெரிந்துவிட்டது. அந்த ருசிகரமான பகுதியைப் பிறகு சொல்கிறேன். இப்பொழுது கொஞ்சம் சுய புராணம் வாசிக்கிறேன். என்னைத் தவறுதலாக நினைத்து விடாதீர்கள். அது என் சுபாவம்—இயற்கைப் போக்கு என்று எண்ணுங்கள்.

அன்று தாங்கள் வழக்காடிய முறையிலிருந்து உங்கள் அறிவுத் தெளிவிலே அதிக அழுத்தமான நம்பிக்கை பிறந்து விட்டது எனக்கு! என் வாழ்க்கையில் ஒரு 'அழும்புக்கார' நிகழ்ச்சி நடந்துவிட்டது. அது இருட்டறையோடு முடிந்து விடும் என்று தவறுதலாகக் கணக்குப் போட்டேன். அது தவறு. படித்த பெண்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப்போல! நாம் நேர்மைச் சம்மட்டியால் நமக்கு விருப்பமான உருவங்களாக அடித்துக்கொள்ளலாம். நாம் 'ஜகஜ்ஜாலப் புரட்டை' ஆரம்பித்தால் நம் உடலெங்கும் சூடுபோட்டுக் கொள்ள வேண்டியதுதான்! அந்த அநீதியான செயல் அறங்கூறவைக்கு வந்துவிட்டால், அடியேன் தப்பிக்க ஏதாவது விதிமுறைப் புத்தகத்தில் இடமிருக்கிறதா என்று தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கு உங்கள் உதவி வேண்டும். அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம்.

இந்தத் தினகரனை இன்றைய உலகம் சரியாகப் புரிந்து கொண்டுள்ளது. ஆனால் உலகத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாத சில ஏடுதாங்கிகள் ஏளனமாகப் பேசுகின்றன! அவர்கள் வாழத் தெரியாத விக்கிரகங்கள்! வாழவழியிருந்தும், பழி, பிழை, அது, இது என்று சொல்லி நல்ல பாதையை விட்டு நழுவியோடும் விசித்திரப் பிறவிகள்!

உலகில் ஆண், பெண் என்ற இரண்டு பெரும் பிரிவு உண்டு; ஆம், அது இயற்கை! அது போல உலகில் இரண்டு வகை மக்கள் இருக்கிறார்கள்; வாழத் தெரிந்தவர்கள், வாழத் தெரியாதவர்கள் என்று அவர்களைப் பெயரிட்டழைக்கலாம்! என்னைக் குறைகூறுகிற 'சிறு பிள்ளைகளில்' பலர் இந்த இரண்டாம் ரகப் பேர்வழிகள்! அவர்கள் தாங்களும் வாழ மாட்டார்கள்; பிறர் வாழ்வதையும் பொறுக்க மாட்டார்கள். அவர்களை உலகம் அறியாச் சிறு குழந்தைகள் என்று மன்னித்து வருகிறேன் நான்.

மனிதன் ஏன் பிறக்கிறான் உலகில்? வாழத்தான்! பின் ஏன் தயக்கம்? வாழ முயற்சி செய்யவேண்டியது தானே முறை ...! அந்த முயற்சியில் இறங்கியுள்ள என்னைப்பற்றி அவதூறு பேசுகிறார்கள் காலிகள், தறிதலைகள். நான் 'பெரிய மனதோடு' விட்டு விடுகிறேன். வாழப் பிறந்த மனிதன் ஒழுக்கம், நேர்மை, அறம், கடமை என்று சொல்லி வாழ்விழந்து தாழ்ந்து போவதா? இதனை என்னால் ஏற்கமுடியாது. கடமையாம்... மனிதன் அன்றூடம் மென்று துப்புகிற வெற்றிலை, பாக்கு, புகையிலையை விட, புகைத்துத் தள்ளுகிற சுருட்டு, பீடி, சிகரெட்டைவிட அதிக மதிப்பை அதற்குத்தர நான் விரும்பவில்லை!

ஒழுக்கம், நீதி, நேர்மை, கடமை ... . இவைகள் வாழத் தெரியாதவர்கள் தாங்களே தங்களுக்கு மாட்டிக்கொள்கிற விலங்குகள்!

ஒழுக்கம் ஒரு சிறைச்சாலை. நீதி, நேர்மை என்பன சிறைக் கூடத்தின் இரண்டு பெரும் இருப்புக் கதவுகள். கடமை அதில் மாட்டப் பெற்றிருக்கும் பெரிய பூட்டு! இதற்குள் மாட்டிக் கொள்கிறான் மனிதன். அவன் வாழத் தெரியாதவன். ஆகவே வாடுகிறான். வேதனைகீதம் பாடுகிறான். சுகத்தையிழந்து சோகப் பாதையிலே ஓடுகிறான்!

நான் இவைகளைக் கூடாது என்று சொல்லவில்லை. ஏன்? உலகின் புறக் கண்களில் மட்டும் நாம் இவைகளுக்குக் கட்டுப் பட்டவனைக் காட்டிக் கொண்டால் போதும். அதற்காக வாழ்வை முறித்துக்கொள்கிற மூட்டாள்தனத்தைப் பாராட்ட என்னால் முடியாது.

இராமனின் வழக்கை எடுத்து மணிக் கணக்கில் ஆராய்ச்சி செய்திருப்பீர்கள்; அவையிலே கொட்டியளக்க மட்டும் குறிப்பு

கள் தேடியலுத்திருப்பீர்கள். எப்படியோ வெற்றியையும் வாங்கித் தந்துவிட்டீர்கள். தாங்கள் பெற்ற பணம் 'பர்சை' அடைவதுடன் அந்த நிகழ்ச்சியை மறந்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற போதனைகளும் கிடைக்கும். திருப்பி நினைத்துப் பாருங்கள்.

இராமனின் தந்தை தானப்பர் திடீரென்று மாரடைப்பால் இறப்பார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர் முடிவு அவ்வளவு விரைவில் வந்து விட்டது. அவர் தன் உழைப்பால் சேகரித்த சொத்துக்களைத் தன் மனதில் பட்டபடி எழுதி வைத்துவிட்டார். அவருக்கு இரண்டு மனைவிமார். மூத்தவள் பெற்ற பிள்ளை ஏகாம்பரம். இளையவள் வழியாகக் கிடைத்த பிள்ளைச் செல்வந்தான் இராமன். பங்காளிச் சண்டையிலே கொண்டு வந்து விட்டது அவர் எழுதி வைத்துவிட்டுப் போன மரண சாசனம் — சாவு நேரத்தில் ஏற்படுத்திய 'உயில்'— சொத்து நிர்வாகத் திட்டம்.

தானப்பருக்கு ஏகாம்பரத்தை இளமையிலிருந்தே பிடிப்பதில்லை. தந்தைக்குப் பிள்ளையிடத்து அன்பு இல்லை—பிள்ளைக்கு மட்டும் அன்பு உண்டு, அளவில் அதிகம் இல்லாவிட்டாலும்! வீட்டிற்கு மூத்தபிள்ளை—ஆகவே குடும்ப நிர்வாகத்தை அவனே கவனிக்கவேண்டும். வயதேறிய தந்தைக்குப் பணிவிடைகள் செய்வதிலும் குறைவில்லை. தானப்பர் மூன் கோபி; சிறு செயல்களுக்கெல்லாம் கோபிப்பார். ஏகாம்பரம் மட்டும் எதிர்த்துரையாட மாட்டான். ஏனெனில் அவன் தன் தந்தையின் 'சிடுமூஞ்சி' சுபாவத்தை அறிவான். அவ்வளவு கடுகடுப்பாக இருக்கிறவர் உண்மையாகவே அவனுக்காக ஆயிரக் கணக்கில் செலவிட்டுப் படிக்க வைத்தார். அவன் ஏகாம்பரம் எம் பி; பி. எஸ். ஆக எவ்வளவு வெள்ளிப் பணங்களை அள்ளி வழங்கியிருப்பார்! சளைக்காமல் தந்திருக்கிறார். அது மட்டுமா? அவனுக்குத் தனியாக 'இன்ப மாடம்' என்ற மருத்துவ விடுதி ஏற்படுத்திக் கொடுத்தார். ஏகாம்பரம் காசநோய்ச் சிகிச்சையிலே கைவந்த நிபுணன்; கரைகண்ட கலைஞன்! அவனிடம் வந்து இதய சுத்தி பெற்றுத் திரும்புவோரை எண்ணி முடியக் கூடியதல்ல—திருப்பதி சென்று திரும்புபவரைப்போலே — பழனிக்காவடி சுமந்திடுவோரைப்போல..... பலர் வருவர்! ஏகாம்பரம் தருவது சுவாச சிகிச்சை.....இங்கோ வெங்கடாசலனும், வேலாயுதபாணியும் தரும் ஏமாற்றம் போல் அல்ல!

தானப்பரின் பிள்ளைப் பாசம் அதுவரை மடியவில்லை. வந்தாள் ஒரு வனிதாமணி, ஏகாம்பரத்தின் வாழ்க்கைத் துணைவி

யாக..... பிள்ளைக்கும் தந்தைக்கும் இடையே பிளவு ஏற்பட்டது ... ... வளர்ந்தது ... இடைவெளி அகலமாகிக்கொண்டே போயிற்று! பாலம் அமைக்க முடியவில்லை. ஏகாம்பரத்தின் மனைவி எழிலாள் அப்படியொன்றும் துடுக்குக்காரியுமில்லை. படித்தவள், பட்டம் பெற்றவள், பண்பட்ட உள்ளங்கொண்டவள். இருந்தாலும் மிமலர் தானப்பரின் இதயத்தைத் தொட முடியவில்லை. இரண்டு மனைவிகளையும் இழந்துவிட்ட தானப்பர் தன் இளையாளின் மகன் இராமனுடன் வெளியேறிவிட்டார். அவனை அரசியல் சுழலில் அடிக்கடிச் சிக்கி அவதிப்பட்டான். தந்தையின் புத்திமதிகளுக்கு மெத்த மதிப்பு தந்திருந்தால் அவர் உடைபட்டுப்போன மூத்த நெஞ்சு ஏக்கப் பாறையில் மோதி நொறுங்காமல் இருந்திருக்கும். அவனது அடங்காப் பிடாரித் தனமே அவர் சாவை மிக அருகில் கொண்டு வந்து நிறுத்தியது போலும்! சாகும்பொழுது அவர் எல்லாச் சொத்துக்களையும் இராமனுக்கே எழுதிவைத்துவிட்டார்! ஆகவேதான் ஏகாம்பரம் வழக்கு தொடுத்தான். இராமன் இதயமுள்ளவன், இரக்கம் அதில் குடியிருந்ததும் உண்மை. இருப்பினும் நிலைமை அவனை எதிர் வழக்காடிட வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளிவிட்டது! அதற்காக உங்களை அழைத்தான். வந்தீர்கள்; வழக்காடினீர்கள் — வெற்றியும் வாங்கித் தந்தீர்கள்.

வழக்கறிஞரே, சிந்தியுங்கள்!

ஏகாம்பரம் நல்லவன் — ஆனால் பெற்ற தந்தையால் புறக்கணிக்கப்பட்டவன். எப்படி? ஒரு பக்க நியாயங்களையே அலசியிருப்பீர்கள். ஆகவே ஏகாம்பரம் சொன்னவைகளை நான் சொல்கிறேன். கேளுங்கள். அவன் என் நண்பன். என்னைக் கட்டிக் கொண்டு அழுதான்!

அவன் அழுகை — சொத்து போனதற்காக அல்ல, வாழ்க்கைச்சிக்கலைத் தீர்க்க முடியாமல் போனதற்காக! அவன் தந்தையைத் திருப்தியுடன் சாக விடவில்லையே என்ற தாங்காத துயரால்!

கடமை — அது தான் அந்த வழக்கிற்கே அடிப்படைக் காரணம். தந்தைக்கு மகனின் மனைவியைப் பிடிக்கவில்லை. மனைவிக்கோ தந்தையை அன்போடு ஆதரிக்கத் தெரியவில்லை—அந்த ஆசையிருந்தாலும்! மகன் ஏகாம்பரம் இந்தச் சிக்கலுக்கிடையில்—இரு தலைக் கொள்ளி எறும்பு போல! தந்தையின் எண்ணத்தை ஈடேற்றிவிட்டாலும் கடமை தவறியவனாகிறான். மனைவியுடன் வாழாவிட்டாலும் உலகின் பரிகாசப் பார்வைத்

தியில் பட்டுச் சாம்பலாகிறுன்! கடமையா அது, அவன் கழுத்தை வெட்டிச் சாய்க்க வந்த கட்டாரியா?

ஏகாம்பரம் சிந்தித்தான். தந்தை நாளைச் சாகப் போகிறவர். மனைவியோ வாழப் பிறந்தவள். அவள் வாழ்வு அரும்பு—அதைக் கருக்கிவிட்டு, பழுது இலை போன்ற தந்தையாரின் வாழ்வைச் செழிக்கச் செய்ய முயலவில்லை. கடமை தலைகுனிகிறது. காலம், சந்தர்ப்பம் தலை தூக்கியாடுகிறது.

ஏகாம்பரம் கடமையின் பெயரைச் சொல்லி வாழ்வைப் பாலைநிலமாக மாற்றிக்கொள்ளவில்லை! அவனை வாழ்த்துங்கள்... வழக்கில் தோற்றுவிட்டாலும், வாழ்க்கையில் வெற்றிகொண்ட நல்வீரன் என்பதை யெண்ணி!

உலகைச் சரியாக உணர்ந்துகொள்ளாத பெருங் குற்றத்தால் தாங்கள் அஞ்சி அஞ்சிச் சாவதாக அறிகிறேன். வருந்துகிறேன். இந்த உலகம் பொல்லாதது--புரிந்துகொள்வது கடினம், புரிந்து கொண்டவர்களிடம் அடங்கிவிடும் என்பதும் உண்மை!

நான் ஒரு அன்னக்காவடி—ஆனல் சத்திரம், சாவடி கட்டிப் பிச்சை கொடுத்துப் பெரிய மனிதராகப் போகப் 'பகீரதப் பிரயத்தனம்' செய்யும் தர்மவான்கள், தனவந்தர்கள், கொடையரசர்கள் என்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எப்படி? பணம் இருக்கலாம் அவர்களிடம்—அதைப் பயன்படுத்திடும் முறை தெரியாதே அவர்களுக்கு! ஆகவே ஓடி வருகிறார்கள் என்னிடம். ஆனல் அந்த நிலையை உண்டாக்கிக்கொள்ள நான் போட்ட பகல் வேடங்கள் நாடக நகைச்சுவைப் பகுதிகளுக்குத் தக்கவை, ஏற்றவை!

அன்று தாங்கள் வந்தீர்கள். உங்களை முன் பின் தெரியாதவன் தான் நான். என் பேச்சிலே அப்படியே அடங்கிவிட்டீர்கள் அல்லவா? உங்கள் காரில் இரண்டுமுறை வரச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொண்டேன், முதலில் 'மொக்கத்தனம்' அடைந்தாலும்!

யாருடைய நோட்டுக்களையோ எடுத்துக்கொண்டு சில்லரை வாங்கிக் கொடுப்பதிலே எனக்குத் திருப்தி—அத்தோடு இலாபமும் இருக்கிறது! ஏனெனில் அந்த வட்டிக்கடை வரகுணச் செட்டி இப்பொழுது கைமாற்றுக் கேட்டாலும் தருகிறனே!

வெளுத்த சட்டையும், தரையிலே புரளவிட்டுக் கட்டும் வேஷ்டியும், இரவல் 'வாட்சும்', கடன் கணக்கில் வாங்கிய

மோதிரமும், காகிதக்குப்பை கிரம்பிய 'பர்சும்' பெறுகிற மதிப்பு சொல்லுந்தரத்ததோ! நாலு 'கோண எழுத்து' தெரிந்து விட்டால் போதும்! அதற்காகவே பாடுபட்டு நான்கைந்து ஆங்கிலச் சொற்களைக் கற்றுக் கொண்டேன். ஆமாம், இல்லை, மன்னியுங்கள், மிகைப்படுத்த வேண்டாம், வருந்துகிறேன்..... இப்படி பொருள் தருகிற Yes, No, Excuse, No mention, Sorry ஆகிய ஆங்கில வார்த்தைகள் எனக்கு 'அத்துபடி'. இவைகளை வைத்துக்கொண்டு ஆட்டி வைக்கிறேன்!

இன்று ஏமாற்றத் தெரிந்தவனே ஏற்றமடைகிறான். வஞ்சகம் புரிகிறவனே வாழ்கிறான். சூது புரிகிறவன் சுகமடைகிறான். ஆகவேதான் நான் கொஞ்சம் மற்ற மக்களிடமிருந்து விலகி நிற்கிறேன் — சற்று விழிப்போடு, விபரந் தெரிந்ததால், விளக்கம் பெற்றதால், விரிந்த மனதோடு!

ஒழுக்கம் என்று சொல்கிறார்கள். எதைச் சொல்கிறார்களோ நான் அறியேன். ஆனால் நான் உலகவரம்பிட்டிருக்கும் ஒழுக்கத்தைத் தாண்டிப் போயிருக்கிறேன். ஆனால் அது எனக்குத் தெரியும். நான் ஒழுக்கத்திலிருந்து வழுக்கி விழுந்த பொழுது என்னுடன் தவறிச் சருக்கி விழும் 'பத்தினி ரத்தினத்திற்கு' வெளிச்சம்...மற்றவர்களுக்கு நான் யோக்கிய சிகாமணி, ஒழுக்க சீலன்! இப்படித்தான் உலகில் பலர் ஒழுக்கங் கெடாத உத்தமர்களாக இருக்கிறார்கள். இருட்டறை ஒழுக்க ஹீனர்கள், வெளிச்சத்தில் ஒழுக்க சிகாமணிகளாக மாறிக்கொள்கிறார்கள்!

தாங்கள் சினங் கொள்ளக்கூடாது. உண்மையைச் சொல்கிற பொழுது கோபம் வருவது அறிவிலிக்கு இயல்பானது: தாங்கள் அறிவாளியென்பது நான் சொல்லித் தெரியவேண்டிய தில்லை! நீங்கள் போலி ஒழுக்கத்தில் நம்பிக்கை வைத்ததால் இன்னமும் அழுகிறீர்கள்.

இப்பொழுது திடுக்கிடும் உண்மையொன்று சொல்லப் போகிறேன். ஆச்சர்யத்தால் மூச்சிழந்துவிட மாட்டீர்களே! நீங்கள் இப்பொழுது இரண்டாவது மனைவியாக ஏற்றிருக்கிற பொன்னி என் தங்கை. நான் உங்கள் மைத்துனன். திடுக்கிட்டு விட்டீர்களா?.....கொஞ்சம் இதயத்தை அமுத்திப் பிடித்துக்கொண்டு இன்னொரு 'புதுக்கரடி'யையும் அறிந்து கொள்ளுங்கள். பொன்னி இன்று உங்கள் மனைவி - சட்டப்படி! ஆனால் உண்மையில் அவள் உங்கள் தங்கை—இரத்த முறைப்படி! அது திரையிடப்பட்ட உண்மை!

ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டு மூடிவைத்தீர்களே, அந்தச் செய்தியிலே எவ்வளவு அழுகிய உண்மைகள் துர்நாற்ற மடிக்கின்றன பாருங்கள்! முதல் மனைவியின் 'வானப் பிரஸ்தம்' எதன் அடிப்படையில்? மருத்துவ மாதாகவா, மன திலே உங்களுக்கு முன்னரே இடம்பிடித்த மன்மதனைத் தேடவா? சிந்தியுங்கள்.

நான் புதிர் போடவில்லை-விளக்கமாகவே சொல்கிறேன்.... வந்து உங்கள் வீட்டு வேலைக்காரியாக என் அம்மா அமர்வதற்கு முன்னுலேயே இலங்கைக்குக் கூலிவேலை செய்யும் மக்களோடு நானும் சேர்ந்து ஓடிவிட்டேன். பத்தாண்டுகள் கழித்தே வந்து சேர்ந்தேன். பிறகு என் தாயின் கதையை அறிந்து அவளைப் பார்க்காமலேயே இருந்து விட்டேன். என் தாய் ஒழுக்கங் கெட்டவள் என்பது எனக்குத் தெரியும். தவறு அவள் மீது மட்டும் இல்லை, என் மீதும் உண்டே! நான் அவளை விட்டோடாதிருந்தால் அவள் உம் தந்தை அன்பானந்தரின் 'பசிக்கு', உணவாகிடத் தேவையில்லை!

அன்பரே, பொன்னி அன்பானந்தருக்குப் பிறந்தவள்— உம் தங்கை, இப்பொழுது புரிகிறதா? உம் தந்தை முதலில் மறுத்தார். அப்பொழுது மனச்சாட்சி அதிக வேலை செய்தது. பிறகு திருட்டுக் காமத் திருவிழாவுக்கு யோசனை தந்தார். அப்பொழுது சந்தர்ப்பவாதம் தலைவிரித்தாடிற்று! பிறகுதான் தங்களுக்கு நெஞ்சுரம் பிறந்தது—அதுவும் பெண்ணைப் பிறந்த ஒரு பிடிவாதப் பிம்பத்தினுல்! பத்மாவை மட்டும் நன்முகப் புரிந்திருப்பீரேயானுல் இந்தத் தவறு செய்திருக்க மாட்டீர்கள். தங்கையை மணந்து மகிழ்ந்திருப்பீர்கள். என்ன இப்படிக் கொஞ்சமும் தடுமாற்றமின்றித் தங்கையைத் தாரமாக்கிய தடித்தனத்தைச் சரியானது என்று கூறுகிறேனே என்று கேட்கத் தோன்றும்! ஆம், சொல்கிறேன்....உலகம் சூது என்ற அச்சாணியில் சுழன்று வரும் சகடமாக இருக்கும்பொழுது தாங்கள் எதிர்த்துப் போராடி என்ன செய்வது! மனச்சாட்சி மறுக்கிறதே என்பீரேயானுல் மனச்சாட்சியைப் பிணமாக்கிடக் கற்றுக் கொள்ளுங்கள். மனச்சாட்சி சண்டி மாடு — அது ஓடும் பாதையோ நல்லெண்ண மேகமலைகளுக் கிடையே, நற்செய்கை யெனும் வளைந்து வளைந்து செல்லும் கணவாய்ப் பாதையிலே, விசித்திர விஷப்பரிட்சைகள் என்ற வர்ண வேடிக்கைகள் செய்யும் வானவில்லாம் அடிப்படைமீதே, உன்னத, ஒழுக்க முடிவு எனும் அடிவான இடந்தேடி ஓடிக்கொண்டே இருக்கும்; இடையே சண்டித்தனம் வந்துவிட்டால் படுத்துவிடும். பிறகு

வாலைக் கடித்தாலும் எழுந்து நடக்காது. புகைபோட்டுக் கிளப்பினாலும் போகுமிடத்தை நாடிச் செல்லாது!

பொன்னி தங்கை—திரையை விலக்கினால்! அதை யார் கிழித்தெறியப் போகிறார்கள்? தங்கள் தந்தைக்கு அந்தத் தைரியம் இல்லாதபோது வேறு யாரால் முடியும்? எனக்குத் தெரியும். ஆனால் தங்களைத் துயரத் தெருவில் துரத்தியடிக்க விரும்பவில்லை. இல்லாவிட்டால் இந்தச் செய்திகளை அம்பலப்படுத்த 'வாயாடி' பத்திரிகை ஆசிரியன் வம்படி வல்லத்தரசுக்கு அல்லவா அனுப்பியிருப்பேன்!

பத்மாவும் எனக்குத்தெரியாதவள் அல்ல! நான் இராமனுடன் ஏற்படுத்திக் கொண்ட புதுத் தொடர்பால் ஒரு பயங்கரப் படுகுழியிலிருந்து விடுபட முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். இராமன் படிப்பிலே நாட்டமில்லாது, பயங்கர இயக்கத்திலே ஆர்வங்கொண்டு திரியும் இரத்தத் துடிப்பு மிதமிஞ்சியுள்ள வாலிபன். அவனால்தான் உங்கள் 'மாஜி' மனைவி — தற்கால மருத்துவத்தாய் பத்மாவைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது.

இராமனின் இதயராணி லீலா என்ற பெண் — அவள் அவனிடம் தன் எண்ணத்தை, உணர்ச்சியை அடகுவைத்து விட்டாள்! அவளைப் பற்றி அவன் சுவையோடு சொல்லிக் கொட்டும் வெதுவெதுப்பான கனவுக்ளோடு, அவள் குடும்பத்தைப்பற்றிய சிறு சிறு குறிப்புகளும் கூறினன். அப்பொழுதுதான் லீலாவின் தமக்கை பத்மா என்றும், அவள் காதல் முறிவு என்ற ஓடத்தில் ஏக்க ஆற்றில், துடுப்புகளின்றி மிதந்து செல்கிறாள் என்பதையு முணர்ந்து கொண்டேன். இப்பொழுது புரிந்து கொண்டிருப்பீர்களே, உங்களையே அவன் விரும்பியதற்குக் ஏன் காரணம் என்று வரப்போகிற சகலன் அல்லவா அவன் ...? ஆகவே தான் பார்த்திபனைத் தேடினன் இராமன்!

மைத்துனரே ... இப்பொழுது தான் தக்கதோர் யோசனை கூறப்போகிறேன். மறுக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள். மன அமைதி உறுதியாகக் கிடைக்கும்.

எனக்குப் படிப்பு — இல்லை யென்றே கூறலாம். ஆனால் கேள்வி யறிவு அதிகம். கிரேக்க தேசத்திலே ஒரு தத்துவம் வளர்ந்ததாம் 'சினிசிசம்' என்று! அவர்கள் தனி மனிதனின் தேவை திருப்தியே பிறவியின் 'எவரெஸ்ட்' திட்டம் என்பதாம். அதையடைய எதையும் செய்யலாமாம். அப்படியே மாக்கி

வெல்லி, மன்னன் முடியை நிலைபெறச் செய்ய, பிடியை வலு வாக்கச் சில திட்டங்களைச் சொன்னராம். நம் இந்திய நாட்டுச் சாணக்கியரும் அப்படியேதானும்! எதைப்பற்றிய கவலையு மின்றி நினைத்த முடிவடைய யாத்திரை செய்யலாம். வழிகள் பழியுடையனவாகிலும் பரவாயில்லை. முடிவு நமக்குத் தேவைக்கு ஏற்றதானால் எதையும் செய்யலாம் என்று ஒரு எண் ணக் கரு வளர்ந்தது, அதற்கு ஆங்கிலத்திலே கூட அழகுப் பெயர்களிட்டழைப்பார்கள். அது என் வாயிலும் நுழைய வில்லை. நினைவிலும் நிற்கவில்லை. அந்தப் பாதையில் தான், தெரிந்தோ தெரியாமலோ நான் நடக்கிறேன். தங்களையும் அழைக்கிறேன், அன்போடு தங்கை பொன்னியின் தனி யன்பைத் தனதாக்கிக் கொண்டீர் என்பதால்!

பத்மா பகிரங்கமாக வெளியேறிவிட்டாள். பயப்படாதீர்கள். மணந்த பொன்னியோ, உண்மையில் தங்கை. மருண்டு விடா தீர்கள்! மார்க்கத்திலே கோளாறுதான், இறுதியிலே அமைதி அனுபவிக்க வசதியிருக்கிறதல்லவா? ஆகவே, கலங்காதீர். காரியத்தைப் பாரும், தளராதீர். தங்கள் வாழ்க்கைப் பாதை யில் முன்னேறுங்கள்! பொன்னியின் வயிற்றிலே ஒரு 'பொன் வண்டு' உருவாகத் தொடங்கிவிட்டது. ஆகவே தான் என் பாதையிலே உங்களையும் அழைக்கிறேன். நான் இம்மாதிரிச் சிக்கலிலே மாட்டிக் கொண்டேன். அதற்காக நெடுநேரம் சிந்தித்தேன். பிறகு வந்த முடிவு தான் இப்பொழுது உங்களுக் குத் தந்தது.

ஒரு யோசனை கேட்கப் போகிறேன்—அதன் சுருக்கத்தை ஆரம்பத்திலேயே சொல்லி விட்டேன்.

என் 'ஆசையுள்ள நேச மச்சான்' என்ற முறையில் மட்டு மல்ல—தெரிந்த வழக்கறிஞர் என்ற வகையில்கூட இந்த உதவி– யோசனை தரவேண்டும்.

இராமனின் காதலி லீலாவுக்குத் தெரிந்தவளாகப் போய் விட்டாள் என் காமவலையில் சிக்கிச் சீரழிந்த ஒரு மான்! அவள் அவளுக்கு எழுத, அதை அவள் இராமனுக்குச் சொல்ல, அவன் என்னை எச்சரித்து விட்டான். அவளிடம் எவ்வளவோ புத்திசாலியாக நடந்து கொண்டும் என் கடிதங்கள் சிக்கிக் கொண்டன. என்னைப்பற்றி முழு விவரங்களையும் சேகரித்து விட்டாள் அவளது நண்பன் மாதவன் என்ற தந்திரக்காரன் மூலம்! அந்தக் கடிதங்களைக்கொண்டு என்னை ஏதாவது சட்டப் படி செய்யமுடியுமா என்று அறிந்துகொள்ள வேண்டும்.

என் மோகவல்லியாட்டுக்குக் கிடைத்த உருட்டுப் பொம்மையின் பெயர் மங்கை. அவள் சிறகொடிந்த பறவை போல ஒரு நாள் இரவு என்னிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்தாள். வழக்கம் போல நடந்து விட்டேன். இப்பொழுது வம்பில் மாட்டிக் கொண்டேனே என்று அச்சப்படுகிறேன். அவள் எழுதிய கடிதங்களையும் கொளுத்தி விட்டேன். என்ன செய்யலாம்...? எனக்கு எதுவும் புரியவில்லை.

அவளை மணக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாத நிலை ஏற்பட்டு விட்டால்.....பார்த்திபரே, என் சிக்கல் தீர ஒரு வழி காட்டுங்கள்.

நல்வாழ்வு என்ற அடிவானத்திற்குச் செல்லக் கண்டுபிடித்த குறுக்குப் பாதை, சூது, சூழ்ச்சி, வஞ்சகச் சல்லிகளாலாக்கப் பட்டது! அதில் நடந்து சென்று விடலாம் என்று நம்பிக் கொண்டு வெகு வேகமாகச் சென்றேன்.....நடந்தா.....இல்லை, இல்லை. கண்களை மூடிக்கொண்டு ஓடினேன்.....இப்பொழுது சருக்கி விழுந்து விட்டேன். கை கொடுத்துக் காப்பதுன் பாரமப்பா!

மங்கை வந்தாள் வலுவில் என்னிடம்—நான் என்ன செய்யட்டும்? என் மனச்சாட்சி சதை, நரம்புகளால் ஆகியிருந்தால் கொஞ்சமாவது நடுங்கியிருக்கும் அது இரும்பாக்கப்பட்டு எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன! ஆகவே என் பருவப் பதை பதைப்புக்கு அவளைப் பலியிட்டு விட்டேன். அவள் கொஞ்சம் படித்தவளாகவே விழித்துக் கொண்டு என்னை மிரட்டப் பார்க்கிறாள்.

அந்தியானவுடன் சிவப்புச் சிரிப்பைச் சிந்தும் அந்த வான் முகட்டைப் பார்த்து வாய்பிளந்து வியந்துரைக்காத கவிஞன் யார்? கலைஞன் இருக்கிறானே.....மனிதன் தான் உண்டா.....! அந்த அழகு மழையிலே குளித்து முழுகுவதிலே ஒரே ஆனந்தம். வான்முகடுதான் பெண்சுகம் என்ற பெரும் சுகம்.....அதைப் பார்த்து நானும் வியந்தேன்.....கிட்டத்தில் கிடக்கிற சுகத்தை எட்டி உதைத்து விட்டு நான் எப்படிச் செல்வது? முகர்ந்து விட்டேன். முணு முணுத்தாள் அவள்; சாக்குகள் சொல்லித் தள்ளி வைத்தேன். இப்பொழுது 'முகாரி'யை விட்டுவிட்டு 'அடாணா'வில் ஆரம்பித்துவிட்டாளே!

பார்த்திபரே, என்னைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு விடாதீர்கள். நான் தங்கள் நண்பன். உண்மைகள் பலவற்றை

என் இதயத்தில் புதைத்துக்கொண்டு சமயங்களில் அந்தச் சமாதியை விட்டுக்கிளப்பிவிடுவேன். அப்படித்தான் இந்த சந்தர்ப்பத்திலும் உண்மைகள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன். எப்பொழுதும் இலாப நோக்கத்தோடு எதையும் செய்வது என் பழக்கம். அப்படியொன்றும் இப்பொழுது எதையும் எதிர்பார்த்து இந்த மடல் விடுக்கவில்லை. ஆனால் அந்த மங்கை வகுத்திருக்கும் திட்டத்தினுல் நான் பாதிக்கப் படாமலிருக்க வழி வேண்டும். எனக்குப் பல வழிகள் தெரியும். ஆனல் ஆட்சி மன்றத்து விதி முறைகள்படி ஏதாவது செய்ய முயற்சித்தால் நீங்கள் என்னைக் காப்பாற்ற முன்வர வேண்டும். அதுதான் இப்பொழுது வேண்டுவதின் உயிரான கருத்து— விண்ணப்பம்! அவள் முயற்சியிலே தோல்விகண்டு துவண்டிருக்கும் பொழுது அவளைக் கண்டபடித் திட்டவேண்டும். தினகரனின் நீரத்தைத் தெரிவிக்க வேண்டும்!

இப்பொழுது கொஞ்சம் சிந்தியுங்கள்.

கண்களை விசாலமாக்குங்கள்—

பத்மா....பொன்னி....இருவரும் ஏதோ தூரமாக விலகிச் செல்வதுபோலவே தெரியும். அது வெறும் பிரமை. நீங்கள் பின்னல் நடந்து செல்லச் செல்ல அவர்கள் முன்னலேயே போய்க்கொண்டிருப்பது போலவே தெரியும். அதுவும் மனத்திலே ஊசலாடும் அடிப்படையில்லாத கற்பனை.... .... மனம் பின்னும் அணுக்களின் நிழலாட்டம்! அவர்கள் உங்களின் பிடிப்பிலேயே இருக்கிறார்கள். ஆனல் என் கதை வேறு— முறையும் மாறுனது. மங்கை என்னை நாடி நடந்தாள். நான் விலகிக்கொண்டே வந்தேன். இப்பொழுது நான் நிற்கிற இடம் அவள் கண்களுக்குத் தெரியவில்லை. அவள் நிற்கிற இடம் எனக்குப் புலப்படவில்லை.

சீதையைத் தனியே விடுத்துச் சென்ற இலக்குமணன் ஒரு கோடிட்டுவிட்டு... இதைத் தாண்டிச் செல்லாதீர்கள் அண்ணியாரே....என்று கூறிப் பிரிந்தானும். வேடமிட்டு வந்த இலங்கை வேந்தன் பிச்சை கேட்டு, அவளை அக்கோட்டைத் தாண்டச் செய்து, அந்தப்பச்சைக் கிளியைத் தன் இச்சைப்படி சிறையிட்டுச் சென்றனும். அதன்படி நான் ஒரு கோடிட்டேன். அந்தக் கோட்டைத் தாண்டிவிட்டாள் அவள். அந்தக் கோடுதான் அதோ தெரிகிறதே வானமும், பூமியும் கட்டியணைத்திடும் அந்திச் சந்திப்பு. அந்த அடிவானத்திற்கு அப்பாலும் அவள் போய்விட்டாள். இனி அவளை நான் பார்க்கவும் முடியாது. அவ

ளும் என்னை அடைய முடியாது. ஒன்று சேராத இரண்டு முனைகளுக்குச் சென்று விட்டோம். உலகத்திடம் என்னைக் காட்டிக் கொடுக்கத் துடிக்கிறாள். நான் மட்டும் விட்டுவிட முடியுமா? அவளை விபசாரியென்று ஊர் முழுவதிலும் செய்தி பரப்பிடத் திட்டம் வேண்டும். அதற்காகவே மாதவன் என்பவனை நண்பனாக்கினேன். அவனை எனது குறைபாடுகளையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டுபோய் அவளிடம் சேர்த்திருக்கிறான். அவன் பைத்தியக்காரன்... ஊர் அறிந்த செய்தியைச் சொல்ல இவன் யார்? தானாகவே பரவக்கூடியதைத் தேடிவந்து பிடித்துப் போயிருக்கிறான்! குளிர்காலத்து ஈசலைக் கூப்பிட ஆள் ஏன்,... தெருப் புழுதி போலக் கிடக்கும் எல்லா இடங்களிலும்!

பார்த்திபரே, வானவில்லைப் பார்த்து உலகமே வியக்கிறது ஏன்? விசித்திர வர்ணச்சேர்க்கையைக் கண்டு தானே! அப்படியானால் என்னையும் பார்த்து உலகு வியக்க வேண்டும். என்னை விசித்திரங்களின் இணைப்பைக் கண்டு ஏன் வியக்கக் கூடாது? வியக்கட்டும். ஆனால் எழிலை ரசித்துவிட்டு அதை யடைய யாரும் முயற்சி எடுத்துக் கொள்வதில்லை, முடியாது என்ற முடிவான எண்ணத்தால்! ஆனால் என் அனுபவ உண்மைகளைப் பலர் கையாள்வார்கள் — ஆனால் அது வெளியில் தெரியக் கூடாது என்பதற்காகப் பெரும்பாடு படுவார்கள். ஆனால் இந்த வானவில்தான் இன்றைய உலகத்திற்கு ஏற்ற தோற்றம் என்பது என் முடிவு.

தங்கள்,

தினகரன்.

5

உலகிற்கு சுந்தரம்



இன்பபுரிமாடம்

.....

அன்புடையோரே!

உங்களுக்கு எழுதுகிறேன், என்றும் போலவே! இத்தனை நாட்கள் இருந்த நிலவேறு – இன்று கருத்தும், பிறவும் வேறு! நாட்டு நிலையை, மக்கள் அவதியை, புதுமை எண்ணங்களை, சீர்திருத்த ஏற்பாடுகளைப்பற்றியே இந்தச் சுந்தரத்தின் எழுத்தில், பேச்சில் கண்டிருப்பீர்கள். இன்று என்னைப் பற்றியே எழுதுகிறேன். அந்த அவசியம் வந்துவிட்டது.

இன்று திடீரென்று ஒரு கடிதம் வந்தது. மலைத்துவிட்டேன். என் பழைய நண்பன் பார்த்திபன் தீட்டியிருந்தான் ... என்னை மறந்து விட்டாயா சுந்தர், நான் கல்லூரித் தேர்விலே 'கரணங்கள்' பல போட்டுக் கடைசியில் உன் அறையில் வந்திருந்து கொண்டு படித்தபொழுது என்னைக் கேலி செய்து எழுதினையே அந்தப் பாடலை நான் எடுத்துக்கொண்டே போய் விட்டேன். நான் படிக்க இடத்திற்கும், உண்ண உண்டிக் கடைக்கும், குளிக்க குட்டைக்கும், குளத்திற்கும் அலைந்த அலைச்சலைப்பற்றி அருமையான கிண்டல் புரிந்திருந்தாய் .... அந்தப் பாடல்மூலமாக என்னை அறிமுகப்படுத்திக்கொள்ளுகிறேன் ... இப்பொழுது நினைவிற்கு வருகிறதா—

பார்த்திபனை நான் மறக்க முடியுமா? என் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள ஆறாத புண்ணிலிருந்து வடிந்திடும் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றும் அவன் பெயரைத்தான் சொல்லுகின்றன. ஆம், என் இன்பச் சித்திரம் பத்மாவைப் பறித்துக் கொண்டவன் அவன். ஆனால் அவனுக்கு அவன் செய்கிற பெருந் தவறு தெரியாது! தெருவில் நடந்து செல்கிற பொழுது நம் செருப்புக்கடியில் ஒரு புழு மாட்டிச் சாகிறது. தெரிந்தா இந்தக் கொலையைச் செய்கிறோம்? இல்லை! அதுபோலத்தான் அவன் என் இதயத்தை மிதித்துத் துவைத்து நாசமாக்கிவிட்டான்.

அவன் எழுதியிருக்கிறான் ... ... ஐயோ, என் கை நடுங்குகிறது ... இதயம் உயர்ந்து தாழ்கிறது ஓராயிரம் தடவைகள்! அவன் மணந்த பத்மா என்னை மறக்கவில்லை ... என் நினைவின் ஈரம் இன்னும் காயவில்லையாம். அவள் அவனை விட்டுப்பிரிந்து விட்டாள். பத்மா ஒரு மின்னல் — கண நேரத்தில் தோன்றி மறைந்துவிட்டாள் அவனது வாழ்க்கை வானத்தில். பார்த்திபனுக்கு அவனுக்குப் பிடித்த பொன்னியையே மணம் முடித்து விட்டுக் கிளம்பி விட்டாள். ஆனால் அவளை மறக்க அவனால் முடியவில்லையாம். அவன் நெஞ்சின் துடிதுடிப்பு அடங்க வேண்டுமானால் அவன் என்னைக் சந்திக்க வேண்டும் என்று கூறியிருந்தான். அதுவும் பத்மாவை அழைத்துக்கொண்டு! அந்தோ, அந்த சோக நாடகம் மீண்டுமா? நான் மறக்க முயற்சி செய்துகொண்டிருக்கிற சந்தர்ப்பத்திலா இந்தப் புது வகை அனுபவம்?

அவன் எப்படிக் கல்லூரித் தேர்வில் தோல்வி யடைந்து குறுக்கு வழிகளில் புகுந்து வெற்றி பெற்றானோ அப்படியே

வாழ்க்கையிலும் முயன்றான். வெற்றி பெற்றான். என்றாலும் விபரீதத்தில் முடிந்துவிட்டது. பொன்னி அவனுக்குத் தங்கையாகிறாளாம் அவனது தந்தையின் தகாத நடத்தை அம்பலத்திற்குக் கொணரப்பட்டால்! அவன் தந்தைக்கும் வீட்டு வேலைக்காரிக்கும் பிறந்த பெண்ணும் அவள்.... அவன் அழுதுவிட்டான் போலும்....அந்தக்கடிதத்தின் எழுத்துக்கள் எல்லாம் கண்ணீர்த் துளிகள் பட்டுப்பட்டுக் கலைந்திருந்தன. ஒரு நண்பனுக்குத் துரோகம் செய்ததால் வந்த வேதனைத் தண்டனை தானும் அது— அவளைவிட்டு எப்படி நகர்வது? அவள் நிறை 'கர்ப்பிணி'... அவன் தந்தை அன்பானந்தரிடம் உள்ளதையெல்லாம் சொல்லிக் கேட்டானாம்... அவர் தயங்கித் தயங்கி உண்மையென்றாராம்.

தங்கையை மனைவியாக்கிக்கொண்டு வாழ்வதா..... அவனை இதயம் இடித்தது!

பொன்னி பிரசவவேதனை அடைகிறபொழுது அவனை அழைத்தாளாம். அருகில் சென்றவுடன் "அத்தான்... அக்காள் கைபட்டால்தான் நான் சுகமடைய முடியும்.... பத்மா அக்காளை வரவழையுங்கள்!" என்றாளாம்.

பத்மா வருவாளா? பறந்து சென்றுவிட்ட பஞ்சவர்ணக்கிளி மீண்டும் அதே கூண்டிற்கு வருமா?

எனினும் நள்ளிரவில் ஓடினான் காரில். பத்மாவிடம் பொன்னியின் வேண்டுகோளைத் தன் கண்ணீரோடு கலந்து கூறியிருக்கிறான். அவள் மறுக்கவில்லை. போய்த் தன் தங்கை போன்றவளுக்கான பணிவிடைகளைச் செய்துவிட்டுத் திரும்பி விட்டாள். பொன்னி ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள்.

என் வாழ்க்கையில் விடுபட்ட செய்தியை அந்தக் கடிதம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தது. வேறொரு காகிதக் கட்டைப் புரட்டினேன். அன்றைய புத்தக அஞ்சலில் வந்தது அந்தச் சிறு ஏட்டு மூட்டை! பிரித்துப் பார்த்தேன். எல்லாம் காதல் கடிதங்களாக இருந்தன. தினகரன் என்று கையெழுத்திட்டிருப்பதைக்கண்டு திடுக்கிட்டேன். நடக்கவிருக்கும் மக்கள் மன்ற மண்டல மாநாட்டின் செயலாளன் தினகரன். அவன் செய்த அழிவு வேலைக்கு அத்தாட்சியாக அவன் எழுதிய கடிதங்கள், ஏமாற்றப்பட்ட பெண் மங்கையால் அனுப்பப் பட்டிருந்தன. அந்தப் பெண் காரசாரமாகவே எழுதியிருந்தாள். தனிமனிதன் செய்த தவறுதலுக்காக ஒரு மாபெரும் இயக்கத்தையே தாக்கியிருந்தாள்.

அன்று நான் எதையும் செய்யவில்லை — முடியவில்லை.

நான் இருப்பது இன்பமாடம். ஆனால் அங்கு வாழ்வோர் அன்றாடம் உயிருக்காக மன்றாடும் நோயாளிகள். ஆம், ஏகாம்பரம் நடத்திவரும் சுவாச நோய்ச் சிகிச்சை சாலையில் படுத்துக் கிடக்கிறேன். புகைச் சுருட்டால் நான் பெற்ற சுகம், சுவாச நோய், காச நோய்..... ஆகவே இங்கே எலும்புக்கூடாகக் கிடக்கிறேன்.

அந்தி வேளை..... என் அறையினுள் யாரோ நுழைந்தனர். 'டாக்டரின்' அனுமதியின் பேரில் குடிக்கும் கடைசிச் சுருட்டின் கடைசிப் புகை மண்டலத்தைக் கிளப்பினேன். என் கண்களில், குளங்களில் மிதக்கும் பாசியைப்போலப் படர்ந்திருந்த, மஞ்சள் நிறம் விலகியது. புது ஒளி வீசிற்று.

எதிரில் இருவர் நின்றனர்.

பார்த்திபன், பத்மா இருவரும் என்னைப் பார்க்க வந்து விட்டனர். என்னைக் கண்டவுடன் அவன் சிலைபோலானான். அவன் கரத்திலே இருந்த சாத்துக்குடிப் பழங்கள் கீழே விழுந்து உருண்டோடின. பத்மாவின் கண்களில் நீர் உருண்டோடிற்று.

"வா, பார்த்திபா.... ஏன் நிற்கிறாய்?...."

... ...

அவன் என் அருகில் வந்தான்.

"ப .... த் .... மா ..."

என் தொண்டை அடைத்துக்கொண்டது. அவள் திடு திடு வென ஓடிவந்து என் காலடியில் விழுந்தழுதாள். அவளைத் தூக்கி நிறுத்தித் தேற்ற வேண்டும்போலிருந்தது. என் உடலில் எழுந்து நிற்கச் சக்தி ஏது? பார்த்திபன் எதை யெதையோ சொன்னான். பத்மா என் நோய் தீருகிறவரை அங்கேயே இருப்பதாக அடம்பிடித்துவிட்டாள். மேலும் அவள் நர்சு! பார்த்திபன் மட்டும் போய்விட்டான். அவன் அடிக்கடி என்னை வந்து பார்ப்பான்.

என்னைக் கொல்லாது கொன்று கொண்டிருந்த 'குல தெய்வம்' எனக்குப் பணிவிடைகள் செய்யவந்த பிறகு பிணி என்ன செய்யமுடியும்? நோயின் கடுமை குறைய ஆரம்பித்தது. பத்மா இப்பொழுது தான் தன் இதயத்தில் பொங்கிப் பொங்கி

யடங்கிப்போன எண்ணங்களை என்னிடம்சொன்னாள். அவளது ஒரே ஆசை அவளது சகோதரி லீலாவின் காதல் திருமணத்தை வெற்றியோடு முடித்துவைப்பது என்பதுதான். அதை என்னிடம் சொன்னாள். நான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னேன்.

டாக்டர் ஏகாம்பரம் மாலை நேரங்களில் வந்து என்னுடன் உரையாடுவது உண்டு. அன்றும் அப்படி வந்தார். லீலாவின் காதலன் இராமனைப்பற்றிப் பேசினேன். அவர் முகம் மாறியது. அவர் கண்கள் கலங்கின.

"ஏன், டாக்டர்...." என்றேன் இருமிக்கொண்டே.

"சுந்தர்.... அவன் என் தம்பி!" என்றார்.

பிறகு அவனுக்கும், தனக்கும் நடந்த வழக்கைப்பற்றியும் எடுத்துக் கூறினார். அண்ணன் தம்பி சண்டை ஆற்று நீரில் அம்பு பாய்ந்து ஏற்படுகிற பிளவைப்போல! உடனே மறந்து விடவேண்டும். ஏகாம்பரந்தான் அந்தத் திருமணத்தை முன்னின்று நடத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

இராமனை அழைத்துப் பேசினேன். அவனும் மறுக்கவில்லை!

பத்மாவும் ஏகாம்பரத்தின் மனைவி எழிலாளும் தோழிமார்களாகிவிட்டார்கள் வெகு சீக்கிரத்தில். அவர்கள் இருவரும் சேர்ந்து லீலாவையும் அவளது தாயையும் வரவழைத்துவிட்டார்கள்.

சர்க்கஸில் இருக்கிற மிருகங்கள் ஒன்றையொன்று வேடிக்கை பார்த்துக்கொள்ளுமாம். ஒன்று மற்றொன்றை ஆச்சர்யமாக முறைக்குமாம். அப்படித்தான் அங்கு குழுமியிருந்தோர்கள் பார்த்துக் கொண்டார்கள். வான வேடிக்கை போலத்தான் நிகழ்ச்சிகளும். பூ பூவாகக் கொட்டும் பொழுதும், வான வெளியிலிருந்து வர்ணங்களை வாரியிறைக்கும் பொழுதும் சிரிக்கிறோம். ஆனால் அதுவே அருகிலே உள்ள கூரையிலே விழுந்து தீவிபத்தையும் உண்டாக்கிவிடும். அன்றைய நிகழ்ச்சி ஒரே ஆச்சர்யத்தைத் தான் அள்ளி வீசிக்கொண்டிருந்தது.

இன்ப மாடத்தில் சுந்தர் தலைமையில் இராமன் லீலா திருமணம் — நடக்க ஏற்பாடுகளாகிவிட்டன!

எழுந்து நடக்கத்தெம்புவந்த எனக்கு இனிக் குந்திக்கிடக்க முடியுமா? நான் பேசினேன் ..... இடையிடையே லொக்.... லொக்... லொக்... சத்தம்....! இருந்தும் திருமணத்தை முடித்து வைத்துவிட்டு வந்தேன். என் காச நோய் வலுவாகிவிட்டது. பத்மா என்னுடனேயே திரும்பிவிட்டாள்.

காதல் புருக்கள் பறந்தன — காச நோய்க்காரனுடன் அந்த மாடப் புரு வந்தது! நான் தடுத்தேன். அவள் அழுதாள்.

"பத்மா ... அதோ பார் கதிரவன் அந்தி வானத்திற்கடியில் மறைகிறான்! நம் காதலும் அப்படித்தான். நீ ஒரு பேசும் பெரும் தெய்வம். உன்னை நான் தின்டக் கூடாது. தெய்வ மாதாகிய உன் இதயத்திலும் சிறு 'சில்லரைத்தனங்கள்' இடம் பெறக் கூடாது."

"சுந்தர் ... நான் தெய்வந்தான். அதற்குரிய கோவில் உங்கள் இதயம்!"

"அது என்றோ உறுதியாகிவிட்டது, பத்மா!"

அவள் பேச முயற்சி செய்தாள்; முடியவில்லை. முகத்தை என் தலைக்கடியிலிருந்த தலையணையில் புதைத்துக்கொண்டு அழுதாள். அவள் தலையை வருடினேன்.

"பத்மா.... அழுகை கூடாது. நீ அறிவுள்ள பெண். உன் கடமை என்னைவிட்டுப் பிரிந்து செல்வதுதான். மணமான மங்கை மாற்றான் ஒருவனுடன் இருக்கலாமா?..." என்றேன்.

பத்மா பதட்டமாகப் பேசிவிட்டாள்.

"சுந்தர்... அது என் சொந்த விஷயம்... அதைப்பற்றி நான் யாருடைய யோசனையையும் கேட்கவில்லை!"

நான் பேசவே இல்லை. அவள் நேடுநேரம் உட்கார்ந்திருந்தாள். பிறகு எனக்கு இரவு உணவு எடுத்துவரச் சென்றுவிட்டாள்.

நான் சாளரத்தின் வழியாக வானத்தைப் பார்த்தேன். இருட்டு.... மேகங்களின் படையெடுப்பு! என் சிந்தனை சுழலவில்லை. எழுந்து சென்று விளக்கைப் போடவும் மனமில்லை. இருட்டிலேயே கிடந்தேன். அப்படியே உறங்கிவிட்டேன்.

பத்மா என்னை எவ்வளவு பாடுபட்டு எழுப்பியும் நான் எழ வில்லை ஆகவே அவளும் பட்டினியாகவே படுத்துவிட்டாள். என்ன விசித்திரம்.... ஏதோ ஒரு பாசம் எனும் கயிற்றால் இப்படி ஆண், பெண் கட்டிவிடப்படுகிறார்கள். அவள் யாரோ, நான் யாரோ.... எனினும் அவள் என்னைவிட்டுப் பிரியாமல் பட்டினி கிடக்கிறாள்!

ஏகாம்பரம் அவர்கள் வீட்டிலேயே லீலாவும், இராமனும் தங்கி யிருந்தார்கள். காதலில் வெற்றி பெற்ற அவர்களைக் கண் குளிரப் பார்ப்பதிலே இந்தக்காதல் முறிவால் கணத்திற்குக் கணம் செத்து மடியும் சுந்தருக்குத் திருப்தி...லீலா இன்னும் சிறுமியாக இருந்தாலும் மகா கெட்டிக்காரி. ஆகவே என் உள்ளத்தை உள்ளபடியே புரிந்து கொண்டாள். என்னை அடிக் கடி வந்து பார்ப்பாள். இராமனும் அப்படியே. சிலசமயங்களில் இருவருமே வந்து என்னுடன் அரசியல் பிரச்சினைகளைப்பற்றி யெல்லாம் வாதாடுவார்கள். எனக்கு அளவு கடந்த மகிழ்ச்சி அவர்களோடு உரையாடுவதில். பத்மாவிற்கும் தன் தங்கையின் அறிவின் திறத்தைக் காண பேரின்பம்!

லீலா வந்தாள். அவளுடன் இன்னொரு பெண்ணும் வந்திருந்தாள்.

"இவள் என் பள்ளித்தோழி. பெயர் மங்கை..." என லீலா அறிமுகம் செய்தாள்.

"மங்கையா....?" என்றேன் வியப்போடு!

"ஆச்சர்யம் வேண்டாம் அண்ணா, தங்களுக்கு கடிதக் கட்டுகளை அனுப்பிய அதே அபாக்கியவதி மங்கை நானே தான்..." என்றாள் அந்தப் பெண் கொஞ்சமும் தயங்காமல்!

"தினகரனை அறிவீர்களா... நீங்கள்..." லீலா கேட்டாள்.

"எங்கள் இயக்கத்து முன்னணி வீரர்களில் அவனும் ஒருவன்" என்றேன்.

"அவன் வீரனு... ... சோதாவா?..." மங்கை கேலியோடு கேட்டாள்.

"மங்கை ஆத்திரப்படாதே, நான் உன் கடிதத்தைப் பார்த்த பிறகு சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்திருக்கிறேன். அதனை நடத்துவிக்க முயற்சி செய்கிறேன். நீ மறுக்கக்கூடாது."

"அண்ணு, தாங்கள் அளிக்கும் தீர்ப்பை எதிர்த்து நான் எதையும் செய்யமாட்டேன். என்னை நம்புங்கள்."

"அப்படியானால் இன்று போ, நாளை வா, தங்கையே!"

பிறகு கொஞ்ச நேரம் தனிமையில் கிடந்துழன்றேன். பத்மா வந்துவிட்டாள். அன்று இனிமையாகப் பாடி என் இதயத்தில் ஒரு இன்ப மழையே பொழிந்தாள்.

சுகத்தை நாடி ஓடிடும் மனித சாதிக்கு நான் சொல்லப் போவது இதுவரை ஞானிகள், மோன நிலையடைந்த முக்தர்கள், சித்தர்கள் கூறியவைகள்போல வெறும் வார்த்தைகளல்ல, நடைமுறைக்கு ஏற்ற நல்ல பாடம்! சுகத்தைத் தேடு, ஏ மனித சாதியே, தேடு, விடாமல் தேடு, மேலும் மேலும் தேடு.... ஆனால் அதற்காக இதயத்தை இரும்பாக்காதே! நடைமுறை நாற்முண்டை காட்டு விலங்குகளின் காலமாக்காதே! மனித விதிக்கே மாறுன பாதையில் இறங்கிவிடாதே. இரக்கம் இருக்கட்டும்.... நேர்மை சாக வேண்டாம். நீதி மடியக்கூடாது... ஒழுக்கத்திற்கு ஒரு ஒழுங்கான வரையறை இருக்கச் செய்... இப்படித்தான் நான் சொல்வேன்.

சுகத்தை விட்டு விட்டு சோகத்தை இந்த உலகில் அனுபவித்து, 'அந்த' உலகில் போய் ஆனந்தத்தை நாடு என்று உபதேசங் கூறவில்லை.

என் சுகதேவதை பத்மா... அவளையடைய நேர்மையான பாதையில் முயற்சி செய்தேன்; முடியவில்லை. மூர்க்க முறைகள், குதர்க்க வாதங்கள், குறுக்குப் பாதைகள் எனக்குத் தெரியாதன அல்ல. பத்மாவைத் தொடமுடியும்... அவளைத் துவளச்செய்ய வழியுண்டு... இருந்தும் விட்டு விட்டேன். ஏன்? ஆத்மா, மனச்சாட்சி யென்ற ஆசிரியனிடம் பாடம் கேட்டவண்ணமே இருந்தது... இருக்கிறது!

அந்த 'வளர் பிறை' என் பக்கத்தில் இருக்கிறாள். தொட்டு ரசிக்கத் தெரியாததால் விட்டு விலகி நிற்கவில்லை. அவளே என்னை விரும்பி நெருங்கினாலும் கூடாது என்கிறேன். ஆம், ஒழுங்கு வேண்டும், இல்லாவிட்டால் சமூகத்தின் சுமூகமான அமைப்புக் குலைந்துவிடும். சமூகத்தின் ஒவ்வொரு அணுவும் தன் பாதையிலே தவறாது நடக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒழுக்கக் குழப்பம் ஏற்பட்டு எல்லாம் கெட்டுக் 'குட்டிச் சுவராகி' விடும்!

பத்மா என் தொழுகைக்கு உரியவள்—தோழமைக்கல்ல! அதுபோல் அவள் என்னை நினைக்கிறாளோ என்னவோ....!

விடிந்தது ... ...

வெள்ளையாடையில் வந்து 'தரிசனம்' தந்தாள். சேவித்தேன்! அவளிடம் ஒரு வரம் கேட்டேன். அன்று பகல் முழுவதும் என் அறையினுள் நுழையக்கூடாது என்றேன். அவள் முகம் மாறியது. இருந்தாலும் அவள் என் வேண்டுகோளின்படி வெளியே சென்றாள். வானத்தை விட்டு நிலவு விலகியிருப்பதால் மறு வரவேற்பின்போது ஆர்வம் அதிகரிக்கிறதல்லவா?

அவளை ஏன் போகச் சொன்னேன்?

வேண்டுமென்றுதான்....நான் ஒரு நாடகமாடத் திட்டமிட்டிருந்தேன். அதை அவள் பார்க்கவேண்டாம் என்று எண்ணியே பத்மாவிடம் அந்த வரத்தைக் கேட்டேன். தேவி அருள் புரிந்தாள்!

நாடகம்...ஆம், வாழ்க்கை நாடகம் இது! நாடகமே உலகம், நாளை நடப்பதை யார் அறிவார்.....என்று அந்த ஆண்டி எதை எண்ணிப் பாடினானோ...ஆனால் அன்று ஒரு நாடகத்தை நடத்தத் திட்டமிட்டேன். நடிகர்களுக்காக எதிர்பார்த்திருந்தேன்

என் கட்டிலில் நான் எழவும் வலியின்றிப் படுத்திருந்தேன். எதிரில் இரண்டு மூன்று நாற்காலிகள் அதிகம்... ... அதுதான் 'ஸ்டேஜ்'... ... மூன்று கோப்பை டீ, அன்றைய மேடைச் செலவு.... .... நான் எதிர்பார்த்திருந்தேன் கதாநாயகனை!

அவன் நுழைந்தான்.

"தினகரனா.... வாப்பா, எப்பொழுது வந்தாய்?"

"என்ன...!"

"ஆச்சர்யப்படாதே... தந்தி கொடுத்தது நான் தான்!"

"ஏன்..."

"காரியமாகத்தான்!"

"மாநாட்டு ஏற்பாடுகளைப்பற்றிக் கலந்து பேசலாம் என்று எண்ணியிருந்தேன். உங்களுக்கு இந்த நிலையில் அதிகத்தொல்லை

கொடுக்கக்கூடாது என்றுதான் வரவில்லை. தந்தி கிடைத்ததும், ஓடோடி வருகிறேன்.''

நான் சிரித்தேன். அவன் சுழித்தான்.

''தினகர்.... ...''

என் வாய் எதையும் சொல்லவில்லை, அதற்குமேல்!

''ஊருக்கு உபதேசியாகிவிடுவதை எப்பொழுதுமே எதிர்க்கிறவன் நான்... தெரியுமா உனக்கு....''

''ஆ...மா...ம்....''

''நான் சொல்லுங் கருத்துகள் அடிவானத்தை எட்டித் தொடுவதானாலும், அவைகளை அடைய முயற்சிப்பேன்.... .... அறிவாயா நீ?''

''எ...ன்...ன...''

தினகரன் திக்குமுக்காடிப் போனான்.

''மக்கள் மன்றம் ஒரு உன்னத இலட்சியத்தை நாடிப் பிரயாணம் போகும் 'யாத்திரீகர்கள்' கூட்டம். அதில் இலட்சிய சித்தியிலே நம்பிக்கையுள்ள அசையா உள்ளம் படைத்தவர்கள் ஏராளம் உண்டு. அந்தப் 'புனித' ஏற்பாட்டைத் தன் விளம்பரத்திற்கும், இலாபத்திற்கும் பயன்படுத்திடும் கயவர்கள் என்றுமே கண்டனத்திற்கு ஆளாவார்கள்!''

''ஐயோ.... தாங்கள் பேசுவது எதுவுமே புரியவில்லையே!''

''புரியும்...'' என்று உறுமினேன் நான். மங்கை அனுப்பியிருந்த காகிதங்களை எடுத்து வீசினேன். அவன் நன்முகப் புரிந்து கொண்டான் நிலைமையை... அவன் அழவில்லை — அவ்வளவுதான்!

என் திட்டப்படி அப்பொழுது லீலாவும், மங்கையும் உள்ளே நுழைந்தார்கள். மங்கை அவனை எரித்திடுவதைப் போலப் பார்த்தாள்.

''தினகர்... ...'' என்றேன் ஆத்திரமாக!...

''எதையுங் கேட்டு என் உள்ளத்தைப் புண்ணுக்கவேண்டாம். எல்லாம் உண்மை. இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

"இவளை மணந்துகொள்ள வேண்டும்!" என் கட்டளை.

"முடியாது.... இந்த 'பிட் நோட்டீஸ்' எனக்கு வேண்டவே வேண்டாம்!" என்று கூவினாள் மங்கை.

"மங்கை, தவறுவது மனித இயல்பு. தவறிவிட்டான். இப்பொழுது திருந்திவிடுவான். என் சொல்லைத் தட்டாதே. அவனைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. எடுத்த காரியத்தை விடாது முடிக்கும் வல்லவன். ஊரறிந்தவன். அவன் உனக்கு கணவனாகக் கிடைப்பது அரிது. தவறுதலாக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறான் யாரோ.... .... ஆத்திரத்தில் நம்பிவிட்டாய்!"

"ஐயோ... ..." என்று அழுதாள்.

"சரி என்று சொல்லடி!" என்றாள் லீலா.

"அண்ணா, தங்கள் விருப்பம்..." முற்றுப்புள்ளியிட்டாள் மங்கை.

தினகரன் எதையும் செய்யத் தயாராகக் காத்துக்கிடந்தான். அவனை அழைத்தேன். மங்கையின் கரங்களைப் பிடித்துக் கொடுத்தேன்.

"மாநாடு நடத்தியது போதும்.... இப்பெண்ணின் மனங் கோணாமல் வாழக் கற்றுக்கொள்!" என்றேன்.

இருவரும் சிரித்தனர். எனக்கும் அப்பொழுதுதான் சிரிப்பு வந்தது...சிரிப்போடு, அந்த லொக்.....லொக்.....லொக்..... தொடங்கிவிட்டது. நான் இருமினேன், இருமிக் கொண்டிருந்தேன். லீலா துணை செய்தாள். என் குரல் கேட்டு ஓடிவந்து விட்டாள் பத்மா—அந்தப் பேசுந்தெய்வம்!

என்னைச் சிறுகச் சிறுகச் சாவை நோக்கி விரட்டிக் கொண்டிருக்கிறது அந்த இருமல்—மரணத்தின் ஏவலாள்!

சாளரக் கதவுகள் திறந்து கிடந்தன.

காற்று சிலுசிலுவென அடித்தது. சூரியனின் மஞ்சள் கதிர்கள் உள்ளே நுழைந்து இந்த நோயாளியைத் தொட்டுப்பார்த்தன. நான் கட்டிலில் ஒரு பக்கத்தில் அடுக்கியிருந்த தலையணைகளில் சாய்ந்தபடியே வான் வெளியைப் பார்த்தேன். நிர்மலமான நீலவானம். இரண்டொரு இடங்களில் மேகத்திட்டுகள்.

கதிரவன் தன் வேலையை முடித்துக் கொண்டு வேகமாக அடிவான வீடு நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

வானம் வளைந்து வந்து பூமியின் ஒரு ஓரத்தில் ஒற்றைக் காலில் நின்று நர்த்தனம் புரிவதுபோலத் தெரிந்தது. குங்குமப் பூவை அள்ளித் தெளித்தது போன்ற சிகப்பு நிறப் படையெடுப்பு... இருள, இருள, அந்தச் செவ்வொளியின் பளபளப்பு அதிகரித்தது.

நான் சிலைபோலானேன். அந்தச் செவ்வானத்தின் வனப்பில் சொக்கிப் போனேன். என்னை மறந்தேன். என் சுற்றிலுமுள்ள பொருள்கள் எதுவுமே என் கண்ணில் படவில்லை.

என் தலையை யாரோ வருடுவது போலிருந்தது. திரும்பினேன். பத்மா நின்றாள்.

"பார், அடிவானத்தை! எவ்வளவு அழகு..." என்றேன்.

"கொள்ளை, கொள்ளை, அழகுக் கொள்ளை!" என்றாள் பத்மா.

தட, தட...பட்...பட்....

காலடி யோசைகள் கேட்டன.

பொன்னி வந்தாள். இடையிலே அவள் பெற்றெடுத்த—'ஆடிடும் தேன் ஜாடி'—சின்னஞ்சிறு வண்ணக் குழந்தையை ஏந்தியபடி நடந்து வந்தாள். வேறொரு கூடை கையில்—அதில் இந்த நோயாளி 'ஜீவனுக்குப்' பழங்கள்....

"வாம்மா....." என்று வரவேற்றேன். பத்மா குழந்தையை வாங்கி யணைத்துக்கொண்டாள். அது தன் பொக்கை வாய்ச் சிரிப்பைக் காட்டி எங்களை ஏதோ ஒரு வருணனைக்கு எட்டாத உலகத்திற்கு இழுத்துச் சென்றது.

"இதற்கு என்ன பெயர்?" என்றேன் நான்.

"நீங்களே சொல்லுங்கள்" என்றாள் பத்மா, சிறு சிரிப்புத் தவழ.

நான் யோசித்தேன். பொன்னி மட்டும் வாட்டமாகவே இருந்தாள்.

"அடிவானம்...." என்று இழுத்தேன்.

"ஆம், ஆம்....." என்று ஆதரித்தனர் என் பிரேரே பணியை!

அடிவானத்தை என் கட்டிலின் மீது விட்டாள் பத்மா. அது சிரித்துக் கொண்டே வந்து என் கழுத்தைக் கட்டிக் கொண்டது. எனக்கு அதை வாரியணைத்து முத்தமிட வேண்டும் போலிருந்தது. ஆனால் எப்பொழுதுமே இருமலுடன் போராடும் எனக்கு முத்தமிட சத்துதான் ஏது?... உரிமைதான் உண்டோ? ஆகவே அந்தக் குழந்தையை அதன் தாய் தூக்கிக்கொண்டாள்.

"பொன்னி.....உன் முகத்தில் ஏன் வாட்டம்?" என்றாள் பத்மா.

"பார்த்திபன் நலந்தானே?" என்றேன் நான்.

குபு, குபுவென நீர் வடிந்தது அவள் கண்களில். ஏன் என்று எங்கள் இருவருக்குமே புரியவில்லை.

"ஏன்... ..."

"அக்கா... ..." என்று அலறினாள். பத்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள். பத்மாவின் கண்களும் குளங்களாகி விட்டன. விபரந் தெரியாமல் நான் விழித்தேன்.

"பொன்னி, அவருக்கு உடம்புக்கு ஏதாவது வந்து விட்டதா... ..." என்றாள் அவள் அழுகையைக் குறைத்தபடி!

"உடலுக்கு வந்தாலும் சகித்திருப்பேன் அக்கா... ..."

"பின்... ..."

"என்னதான் சொல்லேன்... ..." இருவரும் கேட்டோம்.

"அவருக்கு... ..." என்று தொடங்கினாள்.

தடதடவென ஓடி உள்ளே நுழைந்தான் பார்த்திபன். அவன் தலைமயிர் கலைந்து கிடந்தது. சட்டை அழுக்கேறிப் போயிருந்தது. அவன் முகத்தில் வியர்வை அரும்பியிருந்தது.

"பார்த்திபா... ...உட்கார்" என்றேன்.

அவன் மிரள மிரளப் பார்த்தான்.

"பத்மா..... பொன்னி..... உன் மனைவி.... என் தங்கை... மனைவி... தங்கை" என்று உளறினான்.

அந்தோ... பார்த்திபன் பைத்தியக்காரனாகி விட்டான்! அவன் புத்தி பேதலித்து உளறுகிறான். இனி அவன் சித்தம் சரிநிலையடையுமா? முடியாது!

"பார்த்திபா... ..." என்றேன் என் குரலை உயர்த்தி!

"சுந்தர்... ..." என்றான் நான் அழைத்தபடியே!

"இப்படி அமைதியாக உட்கார்.....!" என்றேன்.

"நேரமில்லை நண்பா..... நான் நெடுந்தொலைவு போக வேண்டும்"

"ஏன்?"

"ஏனா... பத்மா உன் மனைவி... பொன்னி என் தங்கை... என் மனைவியை நாடி யாத்திரை போகிறேன்!"

"அவள் எங்கே இருக்கிறாள்?"

"அதோ பார்!"

சாளரத்தின் வழியாகச் செக்கச் சிவந்த அடிவானத்தைக் காட்டினான்.

"அங்கேயா போகிறாய்?"

"ஆம் தோழா... ... அங்கு தான் மேகத்தால் வீடு கட்டி, மின்னலால் கூரை வேய்ந்து, நட்சத்திரக் கதவிட்டு, நிலவு மாடி கட்டி நிற்கிறாள் பார் என் மனைவி... ..."

உளறிக்கொண்டே ஓடினான். அவன் நிற்கவும் இல்லை. திரும்பிப் பார்க்கவுமில்லை.

பொன்னி கதறினாள். பத்மாவின் கண்களிலிருந்த நீர் வற்றி விட்டது. என்னால் இந்தக் காட்சியைப் பார்க்கவே முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டேன் கணநேரம்.

கண்களைத் திறந்தேன்.

அந்தப் பெண்கள் இருவரும் சாளரக் கம்பிகளைப் பார்த்த படியே நின்று கொண்டிருந்தார்கள்.

"யாரைப் பார்க்கிறீர்கள்?" என்றேன்.

"அவரை..." என்றனர் இருவரும்.

"அவன் எங்கே செல்கிறான்?" என்றேன் மீண்டும்.

"அடிவான யாத்திரை..." என்றாள் பொன்னி.

"இல்லை!" என்றேன் பெருமூச்சோடு.

"பின்..." என்று கேட்டாள் பத்மா.

"இதோ அந்த அடிவானம்!" என்று காட்டினேன் குழந்தையை.

இந்த நாடகத்தை உன்னிப்பாகக் கவனித்த அடிவானம் கைகொட்டிச் சிரித்தது. அடிவானத்தை இடுப்பிலேற்றி நடந்தாள் பொன்னி. வழிவிட்டு வரச் சென்றாள் பத்மா.

ஐயோ ஆரம்பித்து விட்டது.....

லொக்...லொக்...லொக்...

அன்பன்,

சுந்தர்

நீங்கள் இந்தக் காதல் வெளியீடுகளைப் படித்தீர்களா?

காதல் ஆசிரியர்
அரு. ராமநாதன்
எழுதிய

முதல் முத்தம்

சோழ வரலாற்றுப் பின்னணியில் உருக்கமாகக் கற்பனை செய்யப்பட்ட இரண்டு நீண்ட காதல் கதைகள். சிந்தனையில் ஒட்டிக்கொள்ளும் சித்திரம்.

விலை அணா 12 தான்

முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.



காதல் வெளியீட்டின்
இரண்டாவது
இணையற்ற நாவல்

★

தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர் 'சுகி' அவர்கள் எழுதிய நெஞ்சை அள்ளும் புதிய காதல் நாவல்

ஆசை வெள்ளம்

விலை அணா 12 தான்

முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

காதல் காரியாலயம்

கண்டோன்மெண்ட் : : திருச்சி

அதிக விலையில் வெளிவரக் கூடிய

— அபூர்வமான புத்தகங்களை —

குறைந்த விலையில் கவர்ச்சிகரமாகத்

தருபவை காதல் வெளியீடுகள்

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறை
அவ்வை
கி.க. சண்முகம் நூலகம்.